Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு
தினப்பதிப்பு
THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சிமெந்து (O.P.C) ராம்கோ சிமெந்து
(C/1049)

முரசு - 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 22 செவ்வாய்க்கிழமை (08.11.2011) பக்கங்கள் 16 ஓசை - 39


அமெரிக்காவில் கம்யூனிசம் (14)



(06)


கண்டு பிடித்தும் கைக்கு எட்டாதது (11)


இனி மீற்றருக்கு பணம் (08)

# சர்வதேச சூழ்ச்சிகளைத் தடுக்க அரசு தீர்வை முன்வைக்க வேண்டும்

## கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவிப்பு



(கொழும்பு)

அரசியல் தீர்வுத்திட்டமொன்றை வழங்குவதன் மூலம் தமிழ் மக்களை வெளிநாட்டு சூழ்ச்சித் திட்டங்களிலிருந்து மீட்க முடியும் என கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இன, மத பேதங்களைக் களைந்து அனைவரும் ஒன்றிணைந்து தமிழ் சமூகத்தை தேசிய நீரோட்டத்தில் இணைத்து கொள்ளும் முயற்சிகளில் 'கவனம் செலுத்தப்பட வேண்டும். கடுமையான இனவாத, மதவாத கோட்பாடுகளை கத்தோலிக்க திருச்சபை வன்மையாகக் கண்டிக்கின்றது.

அதேநேரம் மதகுருமார் அரசியலில் ஈடுபடுவது பொருத்தமற்றது. எந்தவொரு மதகுருவையும் கட்சி அரசியலுக்கு பொருத்தமானவர் எனக் கருத முடியாது.


அரசியல் போராட்டங்களின் போது ஆக்கபூர்வமான முறையில் அவர்களினால் பங்களிப்பு செலுத்த முடியாது.

யாழ். மறைமாவட்டத்திலிருந்து வெளிநாட்டுக்குச் சென்று தற்போது பொருத்தமற்ற அரசியலில் ஈடுபட்டு வரும் இமானுவல் ஆண்டகையின் நடவடிக்கைகளை அனுமதிக்க முடியாது.

அத்துடன், (15 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். வந்த தனியார் பேருந்து கொக்காவிலில் விபத்து

### 6 பயணிகள் காயம்



(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த தனியார் பேருந்தும் டிப்பர் வாகனமும் கொக்காவில் பகுதியில் விபத்தில் சிக்கின. முன்னால் சென்ற டிப்பர் திடீரென நிறுத்தியதால் இவ்விபத்து ஏற்பட்டதாகத் தெரியவருகிறது.

(15 ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளியன்று வெளியாகிறது சமாதான முயற்சிகளின் மதிப்பீடு

(ஒஸ்லோ)

இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட சமாதான முயற்சிகள் தொடர்பான நோர்வேயின் மதிப்பீட்டு அறிக்கையினை வெளியிட்டு வைக்கும் வகையில் ஏற்பாடு செய்யுப்பட்டுள்ள கருத்தரங்கு நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் இலங்கைக்கான சமாதான முயற்சியின் முன்னாள் சிறப்புத்தூதரும் நோர்வேயின் சூழல் மற்றும் மேம்பாட்டுத்துறை அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம் கலந்து கொண்டு மதிப்பீட்டறிக்கை தொடர்பான தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளவுள்ளார்.

1997 - 2009 ஆம் ஆண்டு (15 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை மீது உளவியல் போர் ஆரம்பித்துள்ளது அமெரிக்கா

(கொழும்பு)

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் இலங்கை அரசாங்கத்தின் மீது உளவியல் போரொன்றை ஆரம்பித்திருப்பதாக ஆங்கில ஊடகம் ஒன்றின் அமெரிக்கச் செய்தியாளர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் சுமார் ஒரு மாத காலமாக அதிகாரபூர்வமற்ற வகையில் இலங்கை அரசாங்கத்துக்கு சில செய்திகளை மறைமுகமாக தெரிவித்து வருவதாக இச்செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை நேரடியான ஆய்வுகளைக் கொண்டிருப்பதோடு, வெளிப்படைத் தன்மையையும் கொண்டிருக்க வேண்டும் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அடிக்கடி வலியுறுத்தி வருவது இலங்கை அரசாங்கத்தின் மீதான ஒரு உளவியல் போரே என அமெரிக்கச் செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை விரைவில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்படவுள்ள நிலையில், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் இத்தகைய உளவியல் போரொன்றை ஆரம்பித்துள்ளதாக அவர் இச்செய்தியில்

(15 ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதித் தேர்தலில் சம்பந்தன் பேரம் பேசுவதில் அதிக கவனம்

## கூறுகிறது விக்கிலீக்ஸ்



(கொழும்பு)

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட மகிந்த ராஜபக்ஷ மற்றும் சரத் பொன்சேகா ஆகியோருடன் பேரம் பேசுவதில் சம்பந்தன் அதிககவனம் கொண்டிருந்ததுடன் எவரை ஆதரவளிப்பது என்பது குறித்து முடிவெடுக்க முடியாத நிலையில் இருந்ததாகவும் விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

2009ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதலாம் திகதி இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தின் அதிகாரிகள் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்திருந்த இரகசிய தகவல் குறிப்பிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளதாக விக்கிலீக்ஸ் தெரிவித்துள்ளது. இவ்விடயம் தொடர்பில் விக்கிலீக்ஸ் மேலும் தெரிவித்துள்ளதாவது,

(15 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் மக்கள் காணிகள் தொடர்பில் இரட்டை வேடம் போடும் கூட்டமைப்பு

## குற்றஞ்சாட்டுகிறது நாம் இலங்கையர் அமைப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களின் காணிகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரட்டை வேடம் போடுகிறதென நாம் இலங்கையர் அமைப்பு குற்றம்சாட்டியுள்ளது.

கிளிநொச்சி நகரில் பெரிய எழுத்துக்களில் இது கௌதம புத்தன் தேசம் என எழுதியும் விகாரைகளை அமைத்தும் தமிழ் மக்களுக்கு எதிராக இனவாதத்தைத் தூண்டி, சிங்கள மக்கள் மத்தியில் அரசியல் இருப்பை அரசாங்கம் பாதுகாத்துக் கொண்டிருக்கிறது. அதேவேளை, தமிழ் (15 ஆம் பக்கம் பார்க்க)

# இதய கூற்று சத்திர சிகிச்சைப் பிரிவு யாழில் அமைப்பதற்கு நிதியுதவி

## அளிக்கக் கோருகிறது மருத்துவர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் இதய கூற்று சத்திர சிகிச்சைப் பிரிவு அமைப்பதற்கான நிதியுதவிகளை வழங்க பொதுமக்கள், பொது அமைப்புக்கள் முன்வரவேண்டும் என மருத்துவர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

யாழ். மாவட்ட மருத்துவர் சங்கம் நேற்றைய தினம் பத்திரிகையாளர்களைச் சந்தித்து மேற்கூறிய விடயம் தொடர்பாக கலந்துரையாடியது. இதன் போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப் பட்டது. இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப் பட்டதாவது,

இதய கூற்று சத்திர சிகிச்சைப் பிரிவு, நரம்பியல் சத்திர சிகிச்சைப் (15 ஆம் பக்கம் பார்க்க)

## வாக்காளர் படிவத்தை பார்வையிட்டு பெயரை உறுதிப்படுத்தக் கோரிக்கை

(கொழும்பு)

2011 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு மாதிரிப்படிவம் கிராம சேவகர் அலுவலகங்களில் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள நிலையில் அவற்றில் தமது பெயர்கள் உள்ளனவா என்பதை பார்த்து உறுதிப்படுத்துமாறும் அவ்வாறு பெயர் இல்லாதவர்கள் தமது பெயர்களை பதிவு செய்ய முடியுமெனவும் தேர்தலைக் கண்காணிப்பதற்கான அமைப்பான கபே தெரிவித்துள்ளது.

இது குறித்து தேர்தலைக் கண்காணிப்பதற்கான கபேயின் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அகமட் மனாஸ் மக்கீன் தெரிவிக்கையில், தற்போது 2011 ஆம் ஆண்டுக்கான (15 ஆம் பக்கம் பார்க்க)

# நல்லை ஆதீனத்திற்கு புதிய கட்டடம்



(நல்லூர்)

யாழ்ப்பாணத்தில் நல்லை திருஞானசம்பந்த ஆதீன கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

ஏற்கனவே உள்ள நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன தலைமைக் கட்டடம் முற்றாக அகற்றப்பட்டு, புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. பிரித்தானியாவிலுள்ள திருஞானசம்பந்தர் ஆதீன திருப்பணிக்குழு இதற்கான நிதியுதவி வழங்கியுள்ளது. ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுடன் இந்து மாமன்றத் தலைவர் வி.கைலாசபிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இந்திய துணைத் தூதர் வி.மகாலிங்கம், மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா, செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.(எஸ்)

# அபிவிருத்தியைப் பற்றி சிந்தித்துக் கொண்டு சிறுவர்களைக் கவனிக்காது விடுகின்றோம்

## யாழ்.அரச அதிபர் சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

யாழ் குடாவில் பல மில்லியன் ரூபாவில் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. 3500 பாரிய அபிவிருத்தியைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருக்கின்ற நாம் சிறுவர்களைப் பற்றி கவனிக்காது விட்டு விடுகின்றோம். இதனால் இளம் சமுதாயத்தின் எதிர்காலம் கேள்விக் குறியாக உள்ளதென யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

உங்கள் நண்பன் நிறுனத்தின் ஏற்பாட்டில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் 2011ஆம் ஆண்டுக்கான சர்தேச சிறுவர் தின வைபவம் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது இதில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

இங்கு வந்திருக்கும் சிறுவர்களில் எத்தனை பேருக்குத் தமது எதிர்காலம் குறித்துக் கவலை இருக்குமோ தெரியாது. அண்மையில் சண்டிலிப்பாயில் நடைபெற்ற சிறுவர் தின நிகழ்வில் சிறுவர்கள் தமது உரிமை தொடர்பாக 50 வரையான வேண்டுகோள் குறித்த மகஜர் ஒன்று அப்பிரதேச சிறுவர்களால் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்த அரச அதிபர் இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றும் முகமாக சம்பந்தப்பட்ட அமைச்சருக்கும், சிறுவர் அபிவிருத்தி அதிகார சபைக்கும் அனுப்பி வைக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

குறிப்பாக கிராமங்களில் வாழுகின்ற சிறுவர்களே அதிகம் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாவதாகத் தெரிவித்த அரச அதிபர், தொடர்பான தரவுகளைச் சேர்ப்பதில் தாம் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டில் 29,000 விதவைகள் உள்ளனர். யுத்தம் காரணமாக 10,000 இற்கும் மேற்பட்ட இளம் விதவைகள் யாழ். குடாநாட்டில் உள்ளனர். இவர்களினால் தங்களது பிள்ளைகளுக்குத் தேவையான கல்வி, சுகாதாரம், போஷாக்கான உணவுகள் ஆகியவற்றை வழங்க முடியாது வறுமை நிலையிலுள்ளனர்.

யுத்தத்தின்போது நாங்கள் அதிகளவான சிறுவர்களை இழந்துள்ளோம். 123 சிறுவர்கள் தீராத நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர். இருதயநோய், புற்றுநோய் மற்றும் கடுமையான நோய்களினாலும் இவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் மறுவாழ்வுக்கு நாம் நடவடிக்கை எடுக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

எதிர்காலச் சந்ததியினரான இச்சிறுவர்களின் கல்வியில் ஆசிரியர்களும் பெற்றோர்களும் கூடிய கவனம் செலுத்தி அவர்களின் எதிர்காலத்தை வளமுள்ளதாக்க வேண்டும். மீளக்குடியமர்த்தப்பட்ட பகுதிகளிலுள்ள சிறுவர்களின் கல்வியில் அவர்களது பெற்றோர்கள் மிக அக்கறையாகவிருந்து சிறுவர்களை பாடசாலைக்கு அனுப்பி அவர்களின் கல்வியறிவில் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்றார். (பா)

# மறைந்தும் மறையாத அருட்தந்தை சகாயதாசன்



(யாழ்ப்பாணம்)

குருத்துவப் பணியில் 27 வருடங்களைப் பூர்த்தி செய்த யாழ்.மறைமாவட்ட அருட்தந்தை அந்திரேஸ்பிள்ளை சகாயதாசன் அடிகள் தமது 53 ஆவது வயதில் நேற்று முன்தினம் காலை இறைபதம் அடைந்தார்.

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட அருட்தந்தை, அம்பிட்டிய இறையியல் கல்லூரியில் தமது குருத்துவக் கல்வியை நிறைவு செய்து, 04.08.1984 ஆம் ஆண்டு யாழ். ஆயர் அதிவணக்கத்துக்குரிய தியோகுப்பிள்ளை ஆண்டகையினால் யாழ்.மறை மாவட்டக் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பட்டதாரியான இவர், அவுஸ்ரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளில் பட்டமேற் படிப்பினையும் பூர்த்தி செய்துள்ளார்.

மயிலிட்டி, யாழ்.மரியன்னை பேராலயம், மண்டைதீவு, கோப்பாய், திருநெல்வேலி, ஆனைக்கோட்டை, உருத்திரபுரம் ஆகிய பங்குகளில் பங்கு குருவாக சிறப்புடன் பணியாற்றினார்.

அதுமட்டுமன்றி அவுஸ்ரேலிய நாட்டிற்கும் சென்று இறைபணி மேற்கொண்டிருந்ததுடன், இறுதியாக கொழும்புத்துறை - பாண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் தேவாலயத்தில் இறைபணி புரிந்தார்.

1987 ஆம் ஆண்டு மயிலிட்டி காணிக்கை மாதா ஆலயத்தில் பங்குத் தந்தையாக இருந்த போது துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றில் காயமடைந்த இவர், 1996 ஆம் ஆண்டு இடப்பெயர்வின் போது மிருசுவில் பகுதியில் விபத்துச் சம்பவம் ஒன்றில் சிக்கி காயமடைந்தார்.

கடந்த சில காலமாக நோய் வாய்ப்பட்டிருந்த இவர் மருத்துவ சிகிச்சை பெற்றிருந்தபோதும், நேற்று முன்தினம் இறைபதம் அடைந்தார்.

அருட்தந்தையின் நல்லடக்க ஆராதனை யாழ்.மரியன்னை பேராலயத்தில், யாழ்.மறை மாவட்ட ஆயர் வணக்கத்துக்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் தலைமையில் நேற்று நடைபெற்று யாழ் கொழும்புத்துறை மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. (26)

# செல்போன் வியாபாரம் சண்டையில் முடிந்தது

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மணியம் தோட்டப் பகுதியில் இருவருக்கு இடையில் செல்போன் வியாபாரம் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது. சில காரணங்களால் வியாபாரத்தில் சிக்கல் ஏற்பட, வாங்கிய செல்போன் விற்றவரிடத்தில் திருப்பி ஒப்படைக்கப்பட்டது.

இதன்போது ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றிச் சண்டை ஏற்பட்டது. இது நேற்று பிற்பகல் குழுச் சண்டையாக உருவெடுத்தது.

சம்பவத்தைக் கட்டுப்படுத்த அங்கு விரைந்த பொலிஸார் நான்கு பேரைக் கைது செய்தனர். விசாரணைகளில் குறுக்கிட்ட ஐந்தாம் நபரையும் யாழ்.பொலிஸார் கைது செய்தனர். (எஸ்)

## இளைஞரைத் தாக்கி காயப்படுத்திய கும்பல்

(மானிப்பாய்)

மானிப்பாய் இந்துக் கல்லூரி அருகாமையில் இளைஞர் ஒருவரை நாலு பேர் அடங்கிய குழு தாக்கியதில் படுகாயமடைந்த நிலையில் யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நேற்றிரவு நடைபெற்ற இச்சம்பவத்தில் சபேசன் (வயது 20) என்பவரே படுகாயமடைந்தவராவார். (எப்.எஸ்)

# அதியுயர் தேர்ச்சி

(சாவகச்சேரி)

யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற தரம் -I மாணவர்களுக்கான திருக்குறள் மனனப் போட்டியில் யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையைச் சேர்ந்த செல்வி நந்ததி 147 குறள்களை ஒப்புவித்து வலயத்தின் அதியுயர் தேர்ச்சியைப் பதிவு செய்துள்ளார்.

# சேவை நயப்பு விழா

(சுன்னாகம்)

சுன்னாகம் இராமநாதன் கல்லூரியின் முன்னாள் ஓய்வுபெற்ற அதிபரும், வலிகாமம் வலயக் கல்விப் பணிமனையின் பிரதிக் கல்விப் பணிப்பாளருமான திருமதி அனந்தி சிவஞானசுந்தரத்தின் சேவைநயப்பு விழாவும், மணி விழாவும் நாளை பிற்பகல் ஒரு மணிக்கு இராமநாதன் கல்லூரியின் அருணாசலம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் திருமதி சண்முகரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில், சேவை நயப்புரையினையும், வாழ்த்துரையினையும் வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், வடமாகாண கல்வித்திணைக்களப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன், காலாநிதி ஆறு.திருமுருகன், யாழ். பல்கலைக்கழக புவியியற்துறைப் பேராசிரியர் கா.குகபாலன், உயர் பட்டப் படிப்புகள் பீடப்பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன், இணைப்பாடிய அதிபர் க.சிவகாமி, மானிப்பாய் சாயிபாவா பாடசாலை அதிபர் திருமதி பத்மநாதன் ஆகியோர் வழங்கவுள்ளனர். (06)

# சமய பாட விழுமியச் செயலமர்வு எதிர்வரும் 13 இல் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணத்திலுள்ள வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் முதலான கல்வி வலயப் பாடசாலைகளில் சமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு சமய பாட விழுமியக் கல்விச் செயலமர்வினை நடத்தத் திட்டமிட்டுள்ளதாக, மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

பாடசாலைகளில் தரம் 6 - 13 வரை சைவ சமயம், இந்து சமயம், இந்து நாகரிகம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இச்செயலமர்வு நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வு எதிர்வரும் 13ஆம் திகதி காலை 8.00 மணி முதல் மாலை 3.30 மணி வரை யாழ்.வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

மேற்படி செயலமர்விற்குப் பொருத்தமான ஆசிரியர்களை அனுப்பி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர்கள் கேட்கப் பட்டுள்ளனர். (06)


## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (C/1051)







யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் யாழ்ப்பாண மருத்துவ சங்கத்தின் வருடாந்த விஞ்ஞான அமர்வின் ஆரம்ப நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி 3 தினங்கள் நடைபெற்றது. யாழ்.போதனா வைத்தியசாலை சத்திர சிகிச்சை நிபுணர் எஸ்.ரவிராஜ் தலைமையில் நடைபெற்றபோது நிகழ்வின், பிரதம அதிதியாக என்பு முறிவு சிகிச்சை நிபுணர் உபாலி பனகல, கொழும்பு பல்கலைக்கழக, மருத்துவபீட சிரேஷ்ட பேராசிரியர் நிஸ்வி ஜெரிவ் ஆகியோரும் கலந்து கொண்டதுடன், அங்கு இடம்பெற்ற கலைநிகழ்வையும் காணலாம்.

உடல் வேதனையையும், உள்ள வேதனைகளையும் தாங்கிக் கொள்ளவே முடியாது என்று நாம் நினைக்கிறோம். ஆனால் உண்மையில் நம்முடைய உடல் உள்ள அமைப்புகள் ஏற்றுக்கொள்ளும் சக்தி உடையதாக இருக்கிறது என்பதை யாரும் உணர்வதில்லை. ஸ்ரீஅன்னை

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## உணர்ச்சிகரத் தூண்டுகையும் உயிரழிப்பும்

இந்த மாதம் வரும் மாவீரர் நாளையொட்டி, பழிவாங்கும் உணர்ச்சிகளையும், பகைவெறுப்பு ஆவேசத்தையும் மீண்டும் தூண்டிவிடும் விதமாக சில இணையத்தளங்கள் எழுதுகின்றன. இத்தனை மனிதப் பேரவலம் நிகழ்ந்து இரண்டரை வருடங்களுக்குள்ளாகவே எப்படி சொல்வதற்கு முன்பிருந்த ஆதாரங்களும் கூட இல்லாமல், கொஞ்சங்கூட பொறுப்பற்று மக்களை அழிவுக்குத் தூண்டும் வார்த்தைகளைப் பேசமுடிகிறது இவர்களால் என்று திகைப்பாக இருக்கிறது.

வன்முறையின் தோல்வியை இவ்வளவு குரூரமாக அனுபவித்த பிறகும், அதைவிட்டு வேறு வழிமுறைகளை யோசிக்க மாட்டாதவர்களாக அல்லது யோசிக்க விடாதவர்களாக இன்னும் பலர் இருப்பது ஒருவகையில் நம் சமூகத்தின் சாபக்கேடு தான்.

வெறுப்பை ஒருபோதும் வெறுப்பினால் சாந்தப்படுத்த முடியாது. பகையை பகையினால் வெல்வது சாத்தியமில்லை என்பதெல்லாம் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே மனிதகுலம் அறிந்து கொண்டுவிட்டதுதான் என்றாலும், இன்னமும் வன்முறையை நியாயப்படுத்தக் கிடைக்கும் ஊகங்களையும் உணர்ச்சி வேகங்களையும் கொட்டி அழிவதிலேயே முனைப்பாயிருக்கிறோம் நாம்.

மிகப் பயங்கரமான சூழல் மாசு நம் மனங்களினுள்ளேதான் மறைந்து கிடக்கிறது. எமது அறியாமையிலும், ஆணவத்திலும், ஆத்திரத்திலும், அடையாளங்களை முன்னிறுத்தி ரோசப்படுவதிலும், பழிக்குப் பழி வாங்குவதிலும், பகை வளர்த்து அழிவதிலும் இதை வெளிப்படுத்தி வருகிறோம். காந்தி சொன்னது போல, திருப்பித் தாக்குவதுதான் உயிர் வாழ்வதற்கான நியதி என்று நம்புவது போல நடிக்கின்றோம்.

எங்களுக்குப் பிரச்சினைகள் உண்டு. அந்த நெருக்குதல்களிலிருந்து மீள வேண்டிய தேவை உண்டு. இதையெல்லாம் யாரும் மறுப்பதற்கில்லை. ஆனால் நமது தீர்வுக்காக நாம் வன்முறை வழியை நாடி அதில் மிகப் பலமும் அடைந்து வருகிறோம் என்று நம்பியது எவ்வளவு பெரிய மாயையாகப் போயிற்று? அந்த வன்முறைப் பலத்தை நசுக்கிவிடக் கூடிய பெரிய வன்முறைப் பலத்தை மிக எளிதாக எதிர்த் தரப்பு திரட்டிக் கொண்டுவிட முடிந்ததைக் கண்டோம். பேரளவிலான அழிவுகளையும், சமூக மனோபலத்தின் வீழ்ச்சியையுமே அந்த வன்முறை வழி மிச்சம் வைத்துவிட்டு முடிந்தது.

மீண்டும் அந்த மிரட்டல் வழியையே கிட்டவோ தூரவோ இலக்காகக் காட்டி அரசியல் செய்துகொண்டிருப்பவர்கள் மக்களை முழு முட்டாள்களாயடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது தவிர வேறொன்றுமில்லை. மக்களுக்கான வாழ்வைத் தேடித்தர வேறெந்த வழியையும் காண முடியாத இவர்கள் வன்முறையையும், பகைவெறுப்பை எரியவிடுவதையும் தவிர மற்றதெல்லாம் பணிந்து போதலே என்று சொல்லி மக்களை ஏமாற்றுகிறார்கள், உசார் மடையர்களாக்குகிறார்கள்.

உலகில் உண்மைகளும் நம்பிக்கைகளும் பலவாறாக உள்ளன. ஒரு உண்மைக்குப் பின்னாலுள்ளவர்கள் இன்னொரு உண்மையை நம்புகிறவர்களோடு ஒத்துப்போக முடிந்தால் முரண்பாடு ஏற்படாது. ஆனால் யதார்த்தத்தில், தங்களது நம்பிக்கைதான் முற்றுமுழுதான உண்மை என்று நம்புவதே ஒவ்வொருவரினதும் இயல்பாயிருக்கிறது. தாம் நம்பாத மற்றையதைச் சகித்துக்கொள்ள முடியாமல் போவதால் மோதல் உருவாகிறது. அவரவர் உண்மையை நிலைநாட்ட வன்முறையும் சரி என்றாகி விடுகிறது. முற்றுண்மை இதுதான் என்ற நம்பிக்கையே வேறுபாடுகளைத் தாங்க முடியாமல் செய்துவிடுகிறது.

ஒவ்வொருவருக்குமோ அல்லது ஒவ்வொரு குழுவுக்குமோ தனித்தனி உண்மை இருக்கும்போது, அந்த இருதரப்பும் வாழ்வதற்குரிய நியாயம் வன்முறையால் எப்படி உருவாகும்? ஒரு உண்மையை அழித்து மறு தரப்பை நிலைநாட்டுதல் எப்படி நாகரிகமடைந்த மனிதகுலத்தின் ஏற்பாடாக இருக்க முடியும்? வன்முறையின் பலவீனத்தையும், மனிதவிரோத பிற்போக்குத் தன்மையையும் ஒவ்வொருவரும் மனப்பூர்வமாக உணர்ந்து கொள்ளாமல் நம் வாழ்வுக்கு வழிகாண முடியாது.

– ஆசிரியர்.

# கரையோர மக்களை மிரட்டும் காலநிலை மாற்றங்கள்



(கொழும்பு)

காலநிலை மாற்றத்தினால் நகர பொதுமக்களும் 80 வீத கரையோர நகர மக்களும் பாதிக்கப்படுவர் என்று கால நிலை தொடர்பான நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

கடல்நீர் பெருக்கம், வெள்ளம், சூறாவளி, மற்றும் வெப்பக் காலநிலை என்ற அடிப்படையில் இலங்கையில் காலநிலை மாற்றம் ஏற்பட்டு வருகிறது.இந்த நிலையில் மட்டக்களப்பு, நீர் கொழும்பு உட்பட்ட கரையோரப் பகுதிகளை அபிவிருத்தி செய்ய வேண்டிய அவசியம் உருவாகியுள்ளது.

இந்தநிலையில் காலநிலை மாற்றமானது, சுற்றுலா, மக்களின் வாழ்க்கைத்தரம், விவசாயம், குடிநீர் போன்றவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் ஐக்கிய நாடுகளின் தரவுப்படி கடந்த 40 வருடங்களில் நாளாந்த வெப்ப நிலை 0.4 முதல் 0.5 செல்சியஸ் அளவில் அதிகரித்து வந்துள்ளமையும் இங்கு சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

# பஸ்கட்டணத்தை அதிகரிக்கக் கோரி அடுத்தவாரம் கொழும்பில் போராட்டம்

(கொழும்பு)

பஸ் கட்டணத்தை அதிகரிக்கக்கோரி எதிர் வரும் 15 ஆம் திகதி கொழும்பில் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்துவதற்கு முடிவு செய்யப் பட்டிருக்கிறது.

அதேவேளை பஸ் கட்டணங்களை அதிகரிக்க வேண்டும் என அகில இலங்கை தனியார் பஸ் சங்கத்தின் செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார். நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றியபோதே இந்தக் கோரிக்கையை முன் வைத்துள்ளார்.

அதாவது, டீசல் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து பஸ் கட்டணத்தை அதிகரிக்கக்கோரி எதிர்வரும் 15 ஆம் திகதி ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த ஆர்ப்பாட்டம் குணசிங்கபுர பஸ் தரிப்பிடத்திலும் நாடாளாவிய ரீதியிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

எனவே டீசல் விலையுயர்வுக்கு ஏற்ப பஸ் கட்டணங்களை 4 முதல் 5 ரூபாவரை அதிகரிக்க வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, தேசிய கொள்கைகளுக்கு அமைய பஸ் கட்டணத்தை அதிகரிக்க முடியாத வகையில் டீசலின் விலை 8 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளமை திட்டமிட்ட செயல் எனவும் அஞ்சன பிரியஞ்சித் குற்றம் சுமத்தியுள்ளார்.

## மண் அணை அகற்றப்பட்டது

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு சென் பீற்றர் தேவாலயத்தைச் சூழ படையினரால் அமைக்கப்பட்டிருந்த பாரிய மண் அணை கனரக இயந்திரத்தின் உதவியுடன் அகற்றப்பட்டுள்ளது.

1990 ஆம் ஆண்டு காலப்பகுதியின் பின்னர் மண்டைதீவுப் பகுதியிலிருந்து மக்கள் படை நடவடிக்கை காரணமாக வெளியேறியதைத் தொடர்ந்து அப்பகுதி தேவாலயத்தினைச் சூழ படையினர் பாரிய மண் அணையை அமைத்திருந்தனர்.

தற்போது யுத்தம் நிறைவடைந்து மக்கள் மீள் குடியமர்த்தப்பட்டதின் பின்னர் குறித்த தேவாலயம் மக்களின் வழிபாட்டிற்கு படையினரால் அனுமதிக்கப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து குறித்த மண் அணை அகற்றப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (பா)

## கஞ்சா கடத்திய கும்பல் கைது

(கொழும்பு)

கொழும்பிலிருந்து யாழ். குடாநாட்டுக்கு ஹயஸ வானில் கஞ்சா கொண்டு சென்ற 7 பேரை வவுனியாவில் வைத்து நேற்றுமுன் தினம் மாலை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். வவுனியா பஸ் நிலையத்தில் வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தமக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து குறித்த ஹயஸ் வானை மறித்து மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 25 கிலோகிராம் கஞ்சா பொதிகளும் கைப்பற்றப்பட்டதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## மருந்தக நடைமுறை நூல் வெளியீடு

(பொழும்பு)

மருந்தகவியலாளர்களுக்காக சிறந்த மருந்தக நடைமுறைக்கான கையேடு எனும் தலைப்பிலான நூலொன்று மருந்தகவியலாளர்கள் சங்கத்தினால் இன்று வெளியிடப்படவுள்ளது.

கொழும்பு 10 இல் அமைந்துள்ள எக்ஸல் வேர்ல்ட்டில் நடைபெறவுள்ள இவ்வெளியீட்டு விழாவில் பிரதி சுகாதார அமைச்சர் லலித் திசாநாயக்க பிரதம அதிதியாக கலந்துகொள்வார்.

டாக்டர் டைட்டஸ் டி சில்வா இந்நூலை எழுதியுள்ளார். பிரிட்டனின் மன்செஸ்டர் பல்கலைக் கழகத்தில் மருந்தகவியலில் பட்டம்பெற்ற டைட்டஸ டி சில்வா 1971 ஆம் ஆண்டில் சுகாதார அமைச்சின் மருந்து தரக்கட்டுப்பாட்டு ஆய்வுக் கூடத்தை ஜப்பானிய உதவியுடன் ஸ்தாபிப்பதற்கு பொறுப்பாகவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மத்திய வங்கிக்கு வெளிநாட்டில் கட்டடம்

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி வெளிநாடுகளில் கட்டடங்களை கொள்வனவு செய்வதற்கு தீர்மானித்துள்ளது. வெளிநாடுகளில் இயங்கி வரும் இலங்கை இராஜதந்திர அலுவலகங்களுக்கு இந்தக் கட்டடங்கள் வாடகைக்கு விடப்படவுள்ளது.

இதன் முதல் கட்டமாக இலங்கை மத்திய வங்கி அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் கட்டடமொன்றை கொள்வனவு செய்துள்ளது. நியூயோர்க்கில் 12000 சதுர மீற்றர் பரப்பளவுடைய கட்ட மொன்றை மத்திய வங்கி கொள்வனவு செய்துள்ளது.

645 மில்லியன் ரூபா செலவில் இந்த கட்டடம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும், ஐக்கிய நாடுகளின் இலங்கை வதிவிட அலுவலகத்திற்கு இந்த கட்டடம் வாடகைக்கு விடப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சிற்கும் மத்திய வங்கிக்கும் இடையில் ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்படவுள்ளது.

## சுத்திகரிக்கப்படாத நிலையில் குருநகர் பகுதி வடிகால்கள்

(குருநகர்)


குருநகர் பகுதி வடிகால்கள் ஒருதாரத்திற்கும் மேலாகச் சுத்திகரிக்கப்படாமல் இருந்து வருகிறது.

மழைநீர் வடிவதால் சுத்திகரிப்புக் கருமங்கள் ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் வடிகால்களில் அழுக்கு நீர் தேங்கி நிற்கிறது.

மவுண்கார்மேல் வீதி, தண்ணீர்த்தாங்கி வீதி மற்றும் கடற்கரை வீதி, றெக்கிளமேஷன் வீட்டுத்திட்ட வடிகால்கள் என்பன இவ்விதம் காணப்படுகிறது.

இதனால் செறிந்து வாழ்கின்ற மக்களிடையே டெங்கு மற்றும் மலேரியா, மூளைக் காய்ச்சலென்பன நுளம்புகளால் பரவக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் எச்சரிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (68)

# யாழ். அபிவிருத்தி கூ.ச. புதிய மண்டபம் உள்ளக வீதியும் திறந்து வைக்கப்பட்டது



(யாழ்ப்பாணம்)

கலாசாலை வீதி திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க மாநாட்டு மண்டபமும், உள்ளக வீதியும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ரஞ்சன் தலைமையில் புதிய மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் அமைச்சருக்கு அவர் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

மண்டபத்தை திறந்து வைத்த அமைச்சர் அங்கு உரையாற்றும்போது,

யாழ்.கோ நிறுவனம் மட்டுமல்லாது இம்மாவட்டத்தின் சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் அதன் கீழான ஒவ்வொரு நிறுவனங்களும் சிறப்பான வளர்ச்சியடைய வேண்டுமென்பதுடன் குறிப்பாக இம்மாவட்டத்தில் கால்நடை வளர்ப்பை மேம்படுத்துவதன் மூலமே அதுசார்ந்த சமூகம் சிறந்த பொருளாதாரத்தை எட்ட முடியும்.

யாழ்.கோ நிறுவனத்தின் உற்பத்திகளை யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் அமைச்சர்கள் உள்ளிட்ட அனைவரும் பாராட்டி வருவதாகச் சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள், இந்நிறுவனத்தின் வளர்ச்சியிலும் இங்கு பணிபுரியும் ஒவ்வொரு பணியாளர்களின் நலன்களிலும் கவனம் செலுத்தப்படும் எனவும் உறுதிமொழி வழங்கினார்.

யாழ்.கோ பணிப்பாளர் சபை உறுப்பினர் திருமதி ஜெயலட்சுமி சிவசுப்பிரமணியம், மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அருந்தவநாதன் ஆகியோரும் உரையாற்றினர். இந்நிகழ்வில் நல்லூர் பிரதேச சபை உறுப்பினரும் ஈ.பி.டி.பியின் நல்லூர் பிரதேச அமைப்பாளர் ரவீந்திரதாசன் உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் கலந்து கொண்டனர்.

## சித்திரக்கலை இறுவட்டும் அழகு சஞ்சிகை வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி நுண்கலை மன்றத்தினர் "அழகு சஞ்சிகை" சித்திரக்கலை இறுவட்டும் கையேடும் ஈழத்து இசை நிறுவனங்கள் என்பவற்றை நாளை காலை 8.00 மணிக்கு கல்வியியற் கல்லூரிக் கலையரங்கில் வைத்து வெளியீடு செய்யவுள்ளனர்.

இவ் வெளியீட்டு நிகழ்வில் யாழ். தேசியக் கல்வியியற்கல்லூரி பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் பிரதம விருந்தினராகவும், உப பீடாதிபதி திருமதி ஜெயமலர் தியாகலிங்கம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். வெளியீடுகளின் முதற்பிரதியை பத்திரிகையாளர் வைத்திய கலாநிதி இ. சற்குருநாதன் பெற்றுக்கொள்கிறார்.

## ஒளிவிழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் ஒளிவிழா நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு கல்லூரியின் நாகேந்திரராஜா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் கிறிஸ்தவ மாணவர் மன்றத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இந்நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது. (உ-11)

## வாசிப்பு மாதத்தை முன்னிட்டு போட்டியில் பரிசு பெறுவோர்

(சாவகச்சேரி)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி பொது நூலகங்களினால் பாடசாலை மாணவர்களுக்காக நடத்தப்பட்ட போட்டியில் பரிசு பெறும மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு:

**வாசிப்பு**

கீழ்ப்பிரிவு: எஸ். அபிஷன் (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), ரி. லக்சிகா (டிறிபேர்க் கல்லூரி), ஆர். பவலன் (விக்னேஸ்வராக் கல்லூரி), எஸ். சிவரம்யா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), கே. அதிகா, எஸ். சிந்தனி (சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை)


**பேச்சு**

மத்திய பிரிவு: எஸ். பிறினுகா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), வி. வினோஜா, கே. பவித்ரா (டிறிபேக் கல்லூரி), எஸ். கிருஷிகா (சாவகச்சேரி இந்துக் கல்லுரி), ரி. அகல்யா, ஏ.தனுஜா, ஆர். கீர்த்திகா (டிறிபேர்க் கல்லூரி), ரி. அமெக்ரினா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), சி. சபிதா, பி. நிமினி, வி. வினோதினி, ஆர். சுதர்சினி (டிறிபேர்க் கல்லூரி)

**எழுத்தாக்கம்**

மத்திய பிரிவு: வி. வினோஜா, கே. பவித்ரா, எஸ். சாரங்கா (டிறிபேர்க் கல்லூரி), எஸ். கிருஷியா, கே. கௌசிகா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ஆர். அனெற் சன்சிகா, ஏ. ஜெயதர்சிகா, பி. நிமினி, எம். மிதிர்சன் (டிறிபேர்க் கல்லூரி) (11)





யாழ். மட்டுவில் கமலாசனி வித்தியாலய பாடசாலை மாணவர்களுக்கான பாதணிகள் அண்மையில் ஏ.ஏ.ஏ. மூவிஸ் நிறுவனத்தால் வழங்கப்பட்டபோது... நிறுவனத்தின் மக்கள் தொடர்பு அதிகாரி ரெ. துவாரகன் பாதணியை மாணவி ஒருவருக்கு வழங்குவதையும், மாணவர்களில் ஒரு பகுதியினரையும் காணலாம்.

## பிறந்த தின நிகழ்வு

சட்டமேதை ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் 110ஆவது பிறந்த தின நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் குருநகரில் அமைந்துள்ள அன்னாரின் உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து அகவணக்கம் செலுத்தும் நிகழ்வும் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## பரிசில் தின நிகழ்வு

சாவகச்சேரி சரசாலை ஸ்ரீகணேசா வித்தியாலய பரிசில் நாள் நிகழ்வு நாளை புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அதிபர் திருமதி ச. தர்மகுலசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் தேசிய கல்வியியற் கல்லூரி உபபீடாதிபதி எஸ்.ஆர். சத்தி யேந்திரம் பிள்ளை பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார். (உ-11)

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தேசிய மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கில் உள்ள உயர் கல்வி நிறுவனங்கள், கல்வித் திணைக்களங்கள் என்பவற்றில் நீண்டகாலமாக தற்காலிகக் கடமையில் உள்ளவர்களை விசேட திட்டத்தின் மூலம் நிரந்தரமாக்கப்பட இருப்பதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தேசிய மாநாட்டில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நல்லூர் இளங்கலைஞர் மன்ற கலாமண்டபக் கலையரங்கில் காலை 9 மணிக்கு நடைபெற்ற இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தேசிய மாநாட்டில் பல்வேறு தீர்மானங்கள் ஏகமனதாக நிறை வேற்றப்பட்டுள்ளதாக சங்கச்செயலாளர் அறிவித்துள்ளார்.

அவையாவன,

ஆசிரியர்களின் விருப்பத்திற்கு மாறாக அவர்களை இடமாற்றம் செய்வதைத் தவிர்த்தல். (காரணம் உளப்பூர்வமாகச் செய்யப்படும் ஆசிரியப்பணிக்கு ஓர் ஆசிரியர் தன்னை முழுமனதுடன் அர்ப்பணிக்கவேண்டும். கட்டாயப்படுத்தி கற்பித்தலில் ஈடுபடவைக்க முடியாது).

ஆசிரிய உதவியாளர்களுக்கான வேதனத்தை நாட்டின் சகல பாகங்களிலும் ஒரே முறையில் வழங்குதல். அவர்களில் பட்டதாரிகளாக உள்ளவர்களை அவர்களின் கல்வித் தரத்திற்கு ஏற்ப உள்வாங்குதல்.

வடக்கு, கிழக்கில் உள்ள உயர் கல்வி நிறுவனங்கள், கல்வித் திணைக்களங்கள் என்பவற்றில் நீண்டகாலமாக தற்காலிக கடமையில் உள்ளவர்களுக்கு விசேட திட்டத்தின் மூலம் நிரந்தரமாக்குதல். அதிபர் சேவைக்காக நடாத்தப்பட்ட பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்கள் இன்னும் உள்ளதால் அவர்களை கவனத்தில் கொள்ளல். (உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், ஆசிரிய வளநிலையங்களின் முகாமையாளர்கள், கல்வியியற் கல்லூரி மற்றும் ஆசிரிய கலாசாலைகளில் இணைக்கப்பட்ட விரிவுரையாளர்கள், பதில் அதிபர்கள்).

ஆசிரிய வெற்றிடங்களை புதிய முறைகளுக கூடாக நிவர்த்தி செய்தல், (திணைக்களத்தின் அங்கீகாரத்தோடு பாடசாலைகளில் சிறப்பாகக் கடமைபுரியும் தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குதல், இளைப்பாறும் தொகைக்கேற்ப புதிய ஆசிரிய நியமனங்களை வழங்குதல், பல்கலைக்கழகங்களில் இருந்து வெளியேறிய பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனங்களை வழங்குதல்).

புதிய ஆசிரியசேவை ஒன்றினை உருவாக்கி அதன்மூலம் சிறப்பாகக் கடமையாற்றும் ஆசிரிர்களுக்கு அதிகரித்த ஊதியம் வழங்குதல் (உருவாக்கப்படும் பிரமாணக் குறிப்பு ஆசிரியர்களின் முன்னைய நடைமுறைகளில் பாதிப்பினை ஏற்படுத்தக்கூடாது.

ஆசிரியர்களுக்கு வழங்கப்படாமல் உள்ள சம்பள நிலுவைகளை உடனடியாக வழங்குதல்.

கல்வி அமைச்சினால் வெளியிடப்படும் அனைத்து சுற்று நிருபங்களும் சகல ஆசிரியர்களுக்கும் கிடைக்க வழி செய்யப்படுதல். (உரிய மொழிமூலங்களில்).

பாடசாலைகளுக்கு வழங்கப்படும் வளங்கள் புதிய கற்றல், கற்பித்தலுக்கு உகந்த வகையில் பாரபட்சமின்றி வழங்கப்படுதல் வேண்டும்.

விசேட விடுமுறை நாட்களில் ஆசிரியர்களை அவர்களின் விருப்பிற்கு மாறாக கடமையில் ஈடுபடுத்துவதைத் தவிர்த்தல்.

அனர்த்தங்களின்போது இழப்புக்களைச் சந்தித்த மாணவர்களுக்கு கற்றலுக்கான ஏதுக்கள் செய்து கொடுக்கப்படுதல்.


ஆசிரியர் சேவை உள்ளீர்ப்புக்களில் மாவட்டத்திற்கு மாவட்டம் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை நீக்குதல்.

பாடசாலைகளுக்கான கஸ்டப்பிரதேச படிகளை உரிய காலங்களில் வழங்குதல்.

கல்விப்புலம் சார்ந்த அதிகாரிகள் பாடசாலை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும், அதிபர்களுக்கும் உதவக்கூடியவர்களாக இருக்கவேண்டுமே தவிர அவர்களை இம்சைப்படுத்துபவர்களாக இருக்கக்கூடாது. அவ்வாறு யாரும் தொழிற்பட்டால் அது தொடர்பில் நேரடியாக ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என்றும்,

ஆசிரியர்கள் தங்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை அந்தந்த கிளைத் தலைவர், செயலாளர்களுக்குத் தெரியப்படுத்தி உடனடியாக பொதுச் செயலாளரின் கவனத்திற்குக் கொண்டு வந்து இருபத்தி நான்கு மணிநேரத்திற்குள் தீர்வு காணப்பட வேண்டும் எனவும் ஏகமனதாக கேட்கப்பட்டுள்ளது.

இத்தீர்மானங்கள் கல்வி அமைச்சருக்கும், கௌரவ ஜனாதிபதிக்கும் சமர்ப்பிப்பதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.



மணியந் தோட்டம் வசந்தபுரம் கிராம வீதி பல மாதங்களுக்கு மேலாக கற்கள் பரப்பப்பட்டநிலையில் காணப்படுகின்றது இவ் வாறு காணப்படும் வீதியால் மக்கள் போக்கு வரத்தில் ஈடுபடு வதற்கு மிகவும் சிரமப் படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.
(படங்கள் த.சுமித்தி

# இலங்கை இலக்கியப் பேரவையின் (2010) விருது, சான்றிதழ் பெறும் நூல்களின் விபரம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை இலக்கியப் பேரவையின் 2010ஆம் ஆண்டிற்கான விருது பெறும் நூல்கள், மற்றும் சான்றிதழ் பெறும் நூல்கள் தொடர்பான விபரம் யாழ். இலக்கிய வட்டத்தின் செயலாளரினால் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் விருது பெறும் நூல்களான "நீலா வணன் காவியங்கள், கவிஞர் நீலாவணன் (காவி யம்), "சுவட்டெச்சம், கவிஞர் சோ.பத்மநாதன் (கவிதை) குடைநிழல் (தெளிவத்தை ஜோசேப், (நாவல்) முட்டைக்கோப்பி திக்கு வல்லைகமால் (சிறுகதை), இனிக்கும் பாடல்கள் படைத்த இரு பது கவிஞர்கள் த. துரைசிங்கம் (சிறுவர் இலக் கியம்) நெடுந்தீவு சிதையும் சின்னங்கள் (வர லாறும் வளங்களும்), நெடுந்தீவு லக்ஸ்மன் (ஆய்வு) "வாதரோகம்" வைத்தியகலாநிதி செல் லத்துரை, பரமசிவம்பிள்ளை (அறிவியல்) "திரு வருட் பயன்கதைகள்" தமிழறிஞர் கே. வி.குண சேகரம் (சமயம்), "இலங்கையில் தொலைக்காட்சி எம்.பகீரதி (பல்துறை) "கசந்த கோப்பி" இரா சடகோபன் மொழிபெயர்ப்பு, மனிததர்மம் கலை ஞர் கலைச் செல்வன் (நாடகம்) அண்ணாவியார் மு. அருட்பிரகாசம் (நாட்டுக்கூத்து) போன்ற நூல்களுக்கே விருது கிடைத்துள்ளது.

மேலும் சான்றிதழ் பெறும் நூல்களான "தீரன் திப்பு சுல்தான் காவியம்" ஜின்னாஷ்ஷரிபுத்தீன் (காவியம்) "கடந்து போடுதல்" நீ.பி.அருளானந்தம் (கவிதை) "சாம்பல் பறவைகள் " எஸ். அரசரெத் தினம் நாவல் தாயின்மடி தேடி கார்த்திகாயினி சுரேஷ் (சிறுகதை) "மழலைப்பாக்கள்" சிதம் பரபத்தினி (சிறுவர் இலக்கியம்), "சுழிஓடும் நதி' (ஜெயகாந்தன் படைப்புக்கள் பற்றிய ஆய்வு நூல்) கெசிறாவசஹானா (ஆய்வு) "தொடர் பாடல் ஊடக்கல்வி" பரசாஜசிங்கம் இராஜேஸ் வரன் (பல்துறை) "அந்தப்புதுச் சந்திரிகையின் இரவு" செசிராவ சுலைகா (மொழிபெயர்ப்பு) மாவீரன் சங்கிலியன் (நாடகம்) ஆகிய நூல்களுக்கு சான் றிதழ்கள் கிடைத்துள்ளன.

இந்நூல்களுக்கான சான்றிதழ்கள் விருதுகள் வழங்கும் நிகழ்வு பின்னர் அறிவிக்கப்படும் என செயலாளர் சி.சிவநாதன் அறிவித்துள்ளார். (உ)

## உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழ். போதனா வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சைப் பிரிவினால் குடாநாடு தழுவிய ரீதியில் விழிப்பு ணர்வு நிகழ்வுகள் எதிர்வரும் 14 ஆம் திகதி நடத்தப்படவுள்ளது.

அன்றையதினம் யாழ். போதனா வைத்திய சாலையின் பொது வைத்திய கிளினிக்கின் முன்றலில் இருந்து விழிப்புணர்வூட்டும் நடை பவனி ஒன்று ஆரம்பமாகி வைத்தியசாலை சுற்றாடலை பவனி வரவுள்ளது.

இந்நிகழ்வுகளின ஓரங்கமாக பாடசாலைகள் தோறும நீரிழிவு தடுப்பு அதன் தாக்கத்தை குறைப் பது தொடர்பான அறிவூட்டல் நிகழ்வுகளும் மற் றும் இலவச குருதிப் பரிசோதனைகளும் நடத் தப்படவுள்ளது.

அத்துடன் வியாபார நிறுவனங்கள் மற்றும் பொது நிறுவனங்களிலும் இது தொடர்பான அறிவூட்டல்களும் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதேவேளை இந்நீரிழிவு தினத்தை முன்னிட்டு சமய சமூக நிறுவனங்கள், அரச நிறுவனங்கள், வங்கிகள், கல்வி நிலையங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியோரும் இச் செயற்பாடு களில் கலந்து கொள்ளுமாறு வைத்தியசாலை யின் நீரிழிவு சிகிச்சைப் பிரிவினர் கேட்டுக்கொள் கின்றனர். (உ)

## அரியாலை பிரதேச மீனவர்களுக்கு மீன்பிடிப் படகுகள் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நாவலடி, பூம்புகார், மணியந் தோட்டம், உதயபுரம், கிழக்கு அரியாலை ஆகிய பிரதேசங்களில் வாழும் மீனவர்களில் தெரிவு செய்யப்பட்ட மீனவக் குடும்பங்களுக்கு மீன்பிடிப் படகுகள் பார்சிக் (parcic) நிறுவனத்தினால் எதிர்வரும் 11அம் திகதி வெள் ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நாவலடிக் கிராமத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், நல்லூர் பிரதேசசபை அமைப்பாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரவீந்திரதாசன், ஜே/89 கிராம சேவை அலுவலர் எம்.ஞானேந்திரன் ஜே/90 கிராம சேவை அலுவலர் எஸ். விஜிதன் நல்லூர் பிரதேச செயலாளர் செந்தில் நந்தனன் பார்சிக் நிறுவன இணைப்பாளர் பிரபாகர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (எஸ்)

## மக்களுக்கான ஆற்றுப்படுத்தல் மன்னாரில் பயிற்சிப்பட்டறை

(மன்னார்)

கடந்தகால யுத்தத்தின்போது பல்வேறு நெருக்கடிகளுக்குள்ளான மக்களுக்கு ஆற்றுப் படுத்தல் பயிற்சிப்பட்டறை மன்னார் சிறுக்கண்டல் கிராமத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. மன்னார் மாவட்ட மனித உரிமை கள் இல்லத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இப் பயிற்சிப்பட்டறையில் பரிகாரிகண்டல், ஜீவநகர், சிறுக்கண்டல் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 25 பேர் கலந்துகொண்டனர

இதில் வளவாளராக கலந்துகொண்ட அரங்க செயற்பாட்டாளர் மாணிக்கம் ஜெகன், மனிதத் துவத்தின் முக்கியத்துவம் மற்றும் நெருக்கடி களிலிருந்து விடுபடுவது தொடர்பிலும் பயிற்சி யளித்தார். அத்துடன் மன ஆற்றுப்படுத்தல் செயற்பாடுகளையும் அவர் மேற்கொண்டிருந்தார்.

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(08.11.2011–செவ்வாய்க்கிழமை)

பஞ்சாங்கக் குறிப்புக்கள்
கர வருஷம்
ஐப்பசி 22 ஆம் நாள்.
இராகுகாலம் 3.05-4.35, சுபநேரம் 10.35 -12.05வரை
நட்சத்திரம்: ரேவதி பி.இ . 3.04 வரை
திதி: திரயோதசி மு.இ. 10.23 வரை
பிரதோஷ விரதம்

இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

மேடம்:- பணம் வரும் குடும்பத்தில் குதூகலம், வீண் சண்டை, திடீர் பயணம், தேகம் சுகம்.

ரிஷபம:- குடும்பத்தில் கவலை பணக் கஷ்டம், தொழில் முடக்கம், நண்பர் வருகை, வீண் கோபம்.

மிதுனம் :-பணம் வரும், குடும்பத்தில் மகிழ்ச்சி, அற்பர் நேசம், வீண்கோபம், திடீர் விபத்துவரும்.

கடகம்:- குடும்பத்தில் கவலை, பணக் கஷ்டம், மனச் சஞ்சலம், சுற்றத்தார் ஆதரவு, உடம்பு சுகம்.

சிம்மம்:- பணம் வரும், குடும்பத்தில் மகிழ்ச்சி, தொழில் விருத்தி, அயலார் தொல்லை, கடன் வசூல்.

கனனி :- குடும்பத்தில் கவலை, பணக் கஷ்டம், மனச் சஞ்சலம், சுற்றத்தார் ஆதரவு, உடம்பு சுகம்

துலாம் :-பணம் வரும் குடும்பத்தில் குதூகலம், வாய்ப்பு இழத்தல், நண்பர் வருகை, உடம்பு சுகம்.

விருச்சிகம்:- பணம்வரும், குடும்பத்தில் குதூகலம், அயலார் கஷ்டம், தொழில் விருத்தி தேகம் சுகம்.

தனுசு:- குடும்பத்தில் கவலை, பணக்கஷ்டம், தொழில் மந்தம்,கடன்படல், தேகம்பலவீனம்.

மகரம:- காசுவரும், குடும்பத்தில் மகிழ்ச்சி, வெளிநாட்டு செய்திவரும், தேகம் சுகம்.

கும்பம் :- குடும்பத்தில் கஷ்டம், காசுக்கஷ்டம், வீண் கோபம், கடன்வாங்கல், உடம்பு சுகவீனம்.

மீனம் :- காசுவரும், குடும்பத்தில் மகிழ்ச்சி, மூத்தோர் ஆசி தெய்வ தரிசனம்.

## கண்பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் இன்று செவ்வாய்க் கிழமை காலை 9மணிமுதல் 5 மணி வரை கண்பரிசோதனை முகாம் ஒன்று இடம்பெறவுள்ளது.

இதில் பொதுமக்களுக்கு குறைந்த விலையில் மூக்குக் கண்ணாடிகள் பெற்றுக்கொடுக்கப்படவுள்ளதால் பொது மக்கள் இவ் அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## பரிசளிப்பு விழா

(கோப்பாய்)

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி யின் பரிசளிப்பு விழா இன்று காலை 9மணிக்கு கல்லூரி அதிபர் இராஜ சேகரம் தலைமையில் நடைபெறவுள் ளது.

இந் நிகழ்வில் யாழ். மாவட்ட அர சாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகு மார் பிரதம விருந் தினராகவும் கோப் பாய் கோட்ட கல்விப் பணிப்பாளர் பால சுப்பிரமணியம், சிறப்பு விருந்தினரா கவும், கல்லூரியின் முன்னாள் அதிபர் திருமதி யு.சுரேந்திரகுமார் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ள வுள்ளனர்.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட தொண்டர் ஆசிரியர் களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 9 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள புதிய உயர்கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் அனைத்து யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சங்கத்தலைவர் கேட்டுக் கொண்டுள் ளார்.

## தார்க் கலவை இட்டு செப்பனிடப்படும் காங்கேசன்துறை வீதிப்பகுதிகள்

(குருநகர்)

யாழ். காங்கேசன்துறைவீதியில் சிலபகுதிகள் தார் மற்றும் கற்கலைவைக ளால் குழிகள் நிரப்பப்பட்டு உள்ளன.

அதேவேளை வீதி ஓரங்களில் வெள் ளம் நின்ற இடங்களுக்கு மண்மற்றும் கற்கலவைகள் போட்டு சமப்படுத்தப்பட் டுள்ளன.

குறிப்பாக நாச்சிமார் கோவிலடி, தட்டா தெரு மற்றும் அவைகளுக்கு அண்மித்த பகுதிகள் இத்தகைய திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் கஸ்தூரியார் வீதியில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையை அண்மித்த பகுதிகளில் வீதியின் இரு மருங்குகளிலும் மழைநீர் பெருவெள்ளமாக வீதியை மூடிக் காட்சி அளிக்கிறது.

இதனால் பாடசாலை மாண வர் மற்றும் அப்பகுதியில் இயங் கும் தனியார் கல்வி நிலையத் துக்குச் சென்று மீளும் மாணவ, மாணவிகளும் தினமும் சொல் லொணா அசௌகரியங்களுக்கு உட்பட்டு வருகின்றனர்.

வீதியால் பயணிக்கும் வாக னங்களும் வெள்ளத்தின் ஆழம் தெரியாததால் அதனில் வாக னங்களை இறக்காமல் செல்வ தால் போக்குவரவில் நெருக் கடி ஏற்படுவதாகவும் சுட்டிக்காட் டப்பட்டுள்ளது. (68)



கொக்குவில் இந்து முன்பள்ளி விளையாட்டு விழாவில் இடைவேளை நிகழ்வில் மாணவர்களின் நடனக் காட்சியை படத்தில் காணலாம். (109)

# தேசிய மட்ட கால்பந்து ஹென்றியரசர் சம்பியன்




சம்பியனான 13 வயதுப் பிரிவு கால்பந்து அணி, அதிபர் பொறுப்பாசிரியருடன் நிற்பதைக் காணலாம்.

(யாழ்ப்பாணம்)

கொழும்பு சென் ஜோசப் கல்லூரியினால் நடத்தப்பட்ட கால்பந்துத் தொடரில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் 13 வயதுப் பிரிவு அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டதுடன், 19 வயதுப் பிரிவு அணி இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்டது.

கொழும்பு சென் ஜோசப் கல்லூரியினால் அகில இலங்கை பாடசாலை அணிகள் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு நடத்தப்பட்ட இக்கால்பந்துத் தொடரில் 'கப் சம்பியன்' பிரிவில் இளவாலை புனிய ஹென்றியரசர் கல்லூரி அணி இடம்பிடித்திருந்தது.

இதில் 11, 13, 15, 17, 19 ஆகிய வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் இப்போட்டித் தொடர்கள் இடம்பெற்றது.

13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டித் தொடரில் 24 பாடசாலை அணிகள் பங்குகொண்டன. இதன்படி இதன் இறுதிப் போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணியும், கொழும்பு ஷஜிராக் கல்லூரி அணியும் மோதின.

இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் ஆடியிருந்தது. ஆட்டம் ஆரம்பமாகி, நிறைவுறும் வரை சிறப்பான பந்துப் பரிமாற்றம், வேகமான ஆட்டநகர்வு என இரு பாடசாலை அணிகளும் ஆடினர் ஆட்டம் நிறைவுக்கு வந்த வேளை இரு அணிகளும் 2-2 என்ற கோல் கணக்கில் இருந்தமையால் தண்ட உதை மூலம் வெற்றி, தோல்வி தீர்மானிக்கப்பட்டது.

இதில் 5-3 என்ற கோல் கணக்கில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணி வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இதேவேளை, 19 வயதுப் பிரிவில் 28 பாடசாலை அணிகள் பங்கு கொண்டன. இதன் இறுதிப் போட்டியில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணியும், கொழும்பு சென் ஜோசப் கல்லூரி அணியும் மோதின. இரு அணிகளுமே சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தது. இறுதியில் கொழும்பு சென் ஜோசப் கல்லூரி அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இதன் மூலம் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணி இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்டது. (93)

# தேசிய மட்ட ஹொக்கி

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை பாடசாலைகள் ஹொக்கி சங்கம் நடத்தும் அகில இலங்கை பாடசாலை அணிகளுக்கிடையிலான ஹொக்கிப் போட்டி விரைவில் இடம்பெறவுள்ளது.

இப்போட்டிகளில் பங்குகொள்ளவுள்ள யாழ். பாடசாலைகள் அணிகளை யாழ். ஹொக்கிச் சங்கத் தலைவருடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட ஹொக்கிச் சங்கத்தினர் கேட்டுள்ளனர். (93)

# தோல்வியடைந்தது இராணுவ அணி

(யாழ்ப்பாணம்)

இராணுவ ஆட்லறிப் பிரிவு அணிக்கெதிரான நட்பு ரீதியான கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட அணி வெற்றி பெற்றுள்ளது.

இப்போட்டி கடந்த நான்காம் திகதி யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத்திடலில் இடம்பெற்றது.

இதில் யாழ். கனிஷ்ட பிரிவு அணிக்கும் இராணுவ ஆட்லறிப் பிரிவு அணிக்கும் இடையில் முதலாவது போட்டி இடம்பெற்றது. இதில் யாழ். கனிஷ்ட பிரிவு 79-63 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற போட்டியில் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட அணிக்கும் இராணுவ ஆட்லறிப் பிரிவு அணிக்குமிடையில் இடம்பெற்றது. இதில் 70-40 என்ற புள்ளிகள் அடிப்படையில் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட அணி வெற்றி பெற்றது. (93)

# விலகல் முறை ஆட்டம் நீக்கம் யாழ். சென்றல் புதிய தீர்மானம்

விளையாட்டு செய்திகள்

(யாழ்ப்பாணம்)

கிரிக்கெட்டை மேலும் வளர்க்கும் நோக்கில் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் விலகல் முறையில் நடத்திவந்த கிரிக்கெட் சுற்றுப் போட்டியை அடுத்த ஆண்டு முதல் லீக் முறையில் நடத்தத் தீர்மானித்துள்ளது.

யாழ். சென்றல் விளையாட்டுக்கழக நிர்வாகிகளுக்கிடையில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானம் குறித்து அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த 1983ஆம் ஆண்டு முதல் கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளை நடத்தி வரும் கழகங்கள், அதனை விலகல் முறையிலேயே நடத்தி வருகின்றது.

இதன் மூலம் சிறந்த அணிகள் முதல் சுற்றிலேயே தோல்வியைத் தழுவி தொடரிலிருந்து வெளியேறும் நிலை ஏற்படுகின்றது.

கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் கொக்குவில் கே.சீ.சீ. விளையாட்டுக்கழகம் லீக் முறையிலான போட்டியை நடத்தி வருகின்றது. இதன் பயனாக வளர்ந்து வரும் ஒரு அணி இறுதிப் போட்டியில் விளையாடும் வாய்ப்பு அந்த அணிக்கு ஏற்பட்டது.

இவ்வாறான நிலைப்பாட்டை உணர்ந்த நாம் எமது கழகத்தினால் நடத் தப்படும் விலகல் முறையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியை அடுத்த ஆண்டு முதல் லீக் முறையில் நடத்தத் தீர்மானித் துள்ளோம்.

இதன் பயனாக யாழ். நகரிலுள்ள 18 அணிகளும் சுமார் 17 போட்டிகளில் பங்கும் கொள்ளும் வாய்ப்பு உருவாகும். இப்போட்டித் தொடர் நிறைவடைய நீண்ட காலம் பிடித்தாலும், திறமையான அணிகளை வெளிக்கொணர்வதற்கு சிறந்த வாய்ப்பாகவே நாம் இதனைப் பார்க்கின்றோம்.

அந்த வகையில் அடுத்த ஆண்டு முதல எமது கழகத்தால் நடத்தப்படும் விலகல் முறையிலான கிரிக்கெட் தொடரை லீக் முறையில் நடத்த தீர்மானித்துள்ளோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (07)

# இன்றைய ஆட்டம்

(யாழ்ப்பாணம்)

உடுவில் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான கால்பந்துத் தொடரில் 16 வயதுப் பிரிவு அணிகளின் இரண்டாவது அரையிறுதிப் போட்டி இன்றைய தினம் இடம்பெறவுள்ளது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள இப்போட்டியில் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலய அணியை எதிர்த்து ஸ்கந்தவரோதயா தமிழ்க் கந்தையா வித்தியாலய அணி மோதவுள்ளது.

இதேவேளை, நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் இணுவில் மத்திய கல்லூரி அணியும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணியும் மோதின. இதில் இணுவில் மத்திய கல்லூரி அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி நாளைய தினம் இடம்பெறும் என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (93)



யாழ். மத்திய கல்லூரியினால் விபுலானந்தன் நினைவாக நடத்தப்பட்ட மாவட்ட மட்டக் கூடைப்பந்தாட்டத் தொடரில ஆண்கள் பிரிவில் மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்ட சென் பற்றிக்ஸ் கல்லூரி அணித் தலைவர் விருந்தினரிடமிருந்து கிண்ணத்தைப் பெற்றுக் கொள்வதைக் காணலாம். (படம் : பா. சிகான்)

# சென் அன்ரனீஸ், டயமன்ஸ் நாளை மோதல்

(யாழ்ப்பாணம்)

சென் றோக்ஸ் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்படும் அணிக்கு ஏழு பேர் கொண்ட கால்பந்துத் தொடரின் நாளைய போட்டியில் சென் அன்ரனீஸ் (மரூன்) டயமன்ஸ் அணிகள் மோதுகின்றன.

யாழ். கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் சென் றோக்ஸ் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் இக்கால்பந்தாட்டப் போட்டிகள் சென் றோக்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

யாழ். மாவட்டத்திலிருந்து 29 அணிகள் பங்குபற்றிய இத்தொடரில் விலகல் முறையில் இடம்பெற்ற முதல் சுற்று ஆட்டத்தில் இருந்து நான்கு அணிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதன்படி சென் அன்ரனீஸ் (மரூன்), ஹென்றிஸ், பாடுமீன், டயமன்ஸ் ஆகிய நான்கு அணிகள் தெரிவாகி யுள்ளன.

லீக் முறையில் இடம்பெற்று வரும் இப்போட்டியில் புள்ளிகள் அடிப்படையில் இரு அணிகள் தெரிவு செய்யப்பட்டு இறுதிப் போட்டியில் மோதும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# சூதாட்டத்தைத் தடுக்க சிறப்புக் குழு அமைப்பு


## பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர்

(லாகூர்)

கிரிக்கெட் சூதாட்ட விவகாரத்தால் பாகிஸ்தான் கிரிக்கெட்டின் மதிப்பு கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அதனை சரிசெய்ய எல்லாவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். அந்த வகையில் வெளிநாட்டுப் பயணங்களின்போது வீரர்களைக் கண்காணிக்க சிறப்புக் குழு ஒன்று உருவாக்கப்படும் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் ஷாகா அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட்டில் மீண்டும் சூதாட்டம் நடைபெறாமல் தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். வெளிநாட்டு சுற்றுப் பயணத்தின் போது பாகிஸ்தான் அணியினருடன் சிறப்பு கண்காணிப்புக் குழுவை அனுப்பத் திட்டமிடப்பட்டுள்ளது. அவர்கள் பாகிஸ்தான் வீரர்கள் மற்றும் அதிகாரிகளின் நடவடிக்கையை கூர்ந்து கவனிப்பார்கள். கடந்த ஆண்டு முதல் பாகிஸ்தான் அணியினருடன் பாதுகாப்பு அதிகாரிகள் அனுப்பப்பட்டு வருகிறார்கள். இருப்பினும் வீரர்களின் கண்காணிப்பு விடயத்தில் கூடுதல் நடைமுறைகள் இனிமேல் கடைப்பிடிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

# முழுமையான உடற்தகுதியுடன் விரைவில் களம் இறங்குவேன்



(பெங்களூர்)

விரைவில் களம் திரும்பி, எனது திறமையை மீண்டும் நிரூபித்துக் காட்ட தயாராகிவிட்டேன் என்று இந்திய அணியின் வேகப்பந்துவீச்சாளர் சகீர்கான் தெரிவித்துள்ளார்.

தற்போது நான் நல்ல மனநிலையுடன் மகிழ்ச்சியாக உள்ளேன். பிரச்சினைகளை கையாள்வது குறித்து சிறப்பாகக் கற்றுள்ளேன். இன்னும் ஒன்று அல்லது இரண்டு வாரங்களில் என்னால் முழு உடல் தகுதியை எட்ட முடியும் என்று உணர்கிறேன். உடல் தகுதியில் தேர்ச்சி பெறுவதற்கான நடைமுறைகளை முழுமையாக செய்து முடித்த பின்னர் சில முதல் தர போட்டியில் விளையாட நான் ஆர்வமாக இருக்கிறேன்.

இங்கிலாந்துத் தொடருக்கு முன்பு 7 முதல் 8 மாதங்கள் நான் வலியுடன் தான் விளையாடினேன். அதனால் எனது ஆட்டத் திறன் எதுவும் பாதிக்கப்படவில்லை. ஆனால் எதிர்பாராத விதமாக இங்கிலாந்துப் பயணத்தில் காயத்தின் தன்மை அதிகரித்து விட்டது. இதனால் நான் காயத்தை மறைத்து விட்டேன் என்று சொல்ல முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.


# 100 டெஸ்டுக்கு மேல் ஆடுவதே தனது இலக்கு என்கிறார் சேவாக்

(புதுடில்லி)

கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு என்ற எண்ணம் தற்போது இல்லை. ஆனால் நூறு டெஸ்ட் போட்டிகளுக்கு மேல் விளையாட விரும்புகிறேன் என இந்திய அணியின் அதிரடி வீரர் சேவாக் தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட் அரங்கில், பத்து ஆண்டுகளாக விளையாடி வருவது மகிழ்ச்சி அளிக்கிறது. காயம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளைக் கடந்து, தொடர்ந்து இந்திய அணிக்காக விளையாட விரும்புகிறேன். கடந்த 2001இல், எனது முதல் டெஸ்ட் போட்டியை என்றும் மறக்க முடியாது. ஏனெனில் யாரும் எதிர்பார்க்காத நேரத்தில், முதல் டெஸ்டில் சதம் அடித்து நம்பிக்கை அளித்தேன். அப்போதிருந்த கப்டன் கங்குலி, பயிற்சியாளர் ஜோன் ரைட் வெகுவாகப் பாராட்டினார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஜோகோவிச் அதிர்ச்சித் தோல்வி



(பசல்)

சுவிட்சர்லாந்து ஓப்பன் ரென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில், உலகின் முதல் வீரரான சேர்பியாவின் ஜோகோவிச் அதிர்ச்சித் தோல்வி அடைந்து வெளியேறினார்.

சுவிட்சர்லாந்தில் உள்ள பசல் நகரில், சுவிட்சர்லாந்து ஓப்பன் ரென்னிஸ் தொடர் நடக்கிறது. இதன் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் செர்பியாவின் ஜோகோவிச், ஜப்பானின் கெய் நிஷிகோரியை எதிர்கொண்டார்.

இதன் முதல் செட்டை ஜோகோவிச் 6-2 எனக் கைப்பற்றினார். பின் எழுச்சி கண்ட நிஷிகோரி, டைபிரேக்கர் வரை நீடித்த இரண்டாவது செட்டை 7-6 என தன்வசப்படுத்தினார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது செட்டில் மீண்டும் அசத்திய நிஷிகோரி 6-0 என கைப்பற்றினார். இறுதியில் நிஷிகோரி 2-6, 7-6, 6-0 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

இந்த ஆண்டு டோகோவிச் சந்தித்த நான்காவது தோல்வி இதுவாகும். இதில் இரண்டில் காயம் காரணமாக பாதியில் விலகினார். கடந்த பிரெஞ்ச் ஓப்பன் அரையிறுதியில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரரிடம் தோல்வி அடைந்தார். இதன்மூலம் இந்த ஆண்டு பெடரருக்கு பின், டோகோவிச்சை வீழ்த்திய இரண்டாவது வீரர் என்ற பெருமை பெற்றார் நிஷிகோரி.

# ஊக்க மருந்து சோதனை 4 கபடி வீரர்கள் சிக்கினர்


(பஞ்சாப்)

இந்தியாவில் நடைபெற்று வரும் உலகக் கிண்ணக் கபடிப் போட்டியில் பங்கேற்ற வீரர்களிடம் நடத்தப்பட்ட ஊக்க மருந்துச் சோதனையில் நான்கு வீரர்கள் ஊக்க மருந்து பயன்படுத்தியது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதில் அவுஸ்ரேலிய அணியைச் சேர்ந்த 2 பேரும், ஜேர்மனி, கனடாவை சேர்ந்த தலா ஒருவரும் சிக்கி உள்ளனர். அவர்களுக்கு அடுத்த போட்டிகளில் விளையாட போட்டி அமைப்புக் குழுவினர் தடை விதித்துள்ளனர்.

இது போன்ற சம்பங்கள் விளையாட்டை சிதைக்கும் வகையில் அமைக்கின்றது. இருப்பினும், எமது சோதனை நடவடிக்கைகள் தொடர்ந்து இடம் பெறும் என்று போட்டி அமைப்புக் குழுவினர் தெரிவித்தனர்.

# இவானோவிச் சம்பியன்





(பாலி)

இந்தோனேஷியாவின் பாலி ரென்னிஸ் தொடரின் பெண்கள் பிரிவின் வெற்றிக் கிண்ணத்தை சேர்பியாவின் அனா இவானோவிச் கைப்பற்றிக் கொண்டார்.

இந்தோனேஷியாவில் உள்ள பாலியில் சர்வதேச ரென்னிஸ் போட்டி நடந்தது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் சேர்பியா வீராங்கனை அனா இவானோவிச், ஸ்பெயின் வீராங்கனை அனபெல் மெடினாவை சந்தித்தார். இதில் தொடக்கம் முதலே ஆதிகம் செலுத்திய அனா இவானோவிச் 6-3, 6-0 என்ற நேர் செட்டில் அனபெல் மெடினாவை தோற்கடித்து தொடர்ந்து 2ஆவது முறையாக சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார். அனா இவானோவிச் வென்ற 11ஆவது பட்டம் இதுவாகும்.

# டில்லியில் சுருண்டது இந்தியா



(புதுடில்லி)

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியின் முதல் இனிங்ஸில் இந்திய அணி 209 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இந்திய, மேறகிந் தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் முதலாவது போட்டி புதுடில்லியில் இடம் பெற்று வருகின்றது.

இதில் முதல் நாள் ஆட்டத்தில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 256 ஓட்டங்களைப் பெற்ற நிலையல் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த மேற்கிந்த யத்தீவுகள் அணி ஓஜாவின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாது மளமளவென விக்கெட்டுக்களை இழந்தது. இறுதியில் முதல் இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுக் களையும் இழந்து 304 ஓட்டங்களை மேற்கிந்தியத்தீவுகள் அணி பெற்றது. இதில் சந்தர்போல் 118 ஓட்டங் களைப் பெற்றார். பந்து வீச்சில் ஓஜா ஆறு, அஷ் வின் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய இந்திய அணி வீரர்கள், மேற்கிந்தியத்தீவுகள் அணியின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் விரைவாக களத்தைவிட்டு வெளியேறினர். இறுதியில் இந்திய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 209 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சேவாக் 55, ராவிட் 54, கம்பீர் 41 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் டரன் சமி மூன்று, பிஷோ, ராம்போல் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

95 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிவரும் மேற்கிந்தியத்தீவுகள் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 21 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதேவேளை, நேற்றைய தினம் மட்டும் 17 விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தொடரை வென்றது பாகிஸ்தான்

(சார்ஜா)

சார்ஜாவில் நடைபெற்ற இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தது. இதன் மூலம் டெஸ்ட் தொடரை பாகிஸ்தான் அணி கைப்பற்றியது.

ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 164 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்றைய ஐந்தாம் நாள் ஆட்டத்தை தொடர்ந்த இலங்கை அணி, மேலும் 21 ஓட்டங்களைப் பெற்ற போது ஆட்டத்தை இடை நிறுத்தியது. இறுதியில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 181 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் பரணவிதான ஆட்டமிழக்காது 76 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் சங்ககார 51 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் சயிட் அஜ்மல் மூன்று, உமர் குல் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 255 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி,




நேற்றைய ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, நான்கு விக்கெட்டுக்களை இழந்து 87 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் தௌபீக் உமர் 39 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் அணித் தலைவர் மிஸ்பா உல்-ஹக் ஆட்டமிழக்காது 86 பந்து களில் 9 ஓட்டங்களைப் பெற்றிருந்ததார். பந்து வீச்சில் ரங்கண ஹேரத், வெல கெதர, ரண்டீவ் தலா ஒவ்வொரு விக் கெட்டை வீழ்த்தினர்.

இதன் மூலம் மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை பாகிஸ்தான் அணி 1-0 என்ற கணக்கில் கைப்பற்றிக் கொண்டது.

ஐந்தாம் நாள் ஆட்டம் மழை காரணமாக தாமதித்தே ஆரம்பமானது.

இலங்கை முதல் இனிங்ஸ் 413. பாகிஸ்தான் முதல் இனிங்ஸ் 340.

இப்போட்டியின் ஆட்டநாயகான சங்ககாரவும், தொடரின் ஆட்டநாயகர்களாக சயிட் அஜ்மல, சங்ககார தெரிவாகினர்.

இதேவேளை, இரு அணிகளுக்குமான ஒரு நாள் போட்டி எதிர்வரும் 11ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

# நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை மக்களுக்குப் பகிரங்கப்படுத்தப்படுமா?



(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை பொதுமக்களின் பார்வைக்காகப் பகிரங்கப்படுத்துவதா இல்லையா என்பது குறித்து அரச உயர்மட்டத்தில் வாதப்பிரதிவாதங்கள் எழுந்துள்ளன.

அதேவேளை, ஆணைக்குழுவின் அறிக்கை கையளிக்கப்பட்ட இரண்டு வாரங்களுக்குள் அது பொதுமக்களுக்குப் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் என்ற அழுத் தங்கள் அரசுக்கு அதிகரித்துள்ளன.

இந்த அறிக்கை பொதுமக்களுக்குப் பகிரங்கப்படுத்தப் படாது என்று ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் கூறினார்.

ஆனால் அந்த அறிக்கையை ஜனாதிபதி நாடாளுமன்றத்தின் மூலம் பகிரங்கப்படுத்துவார் என்று வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேவேளை, இந்த அறிக்கையைப் பகிரங்கப்படுத்த வேண்டும் என்று கொழும்பிலுள்ள சில வெளி நாட்டு இராஜதந்திரிகளும், ஊடகங்களின் ஒரு பகுதியும், அரசசார்பற்ற நிறுவனங்களும் அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றன.

அத்துடன் இந்த அறிக்கையை அடுத்த அண்டு ஜெனிவா வில் நடைபெறவுள்ள ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் சமர்ப்பிக்குமாறு பரப்புரை செய்யவும் இவர்கள் திட்டமிட்டுள்ளதாகவும் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று கூறியுள்ளது.

குறிப்பாக இந்த முயற்சிக்கு கனடா தலைமை தாங்கலாம் என்றும், பிரித்தானியா, அவுஸ்ரேலியா, அமெரிக்கா மற்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம், அனைத்துலக மன்னிப்புச் சபை போன்றன ஆதரவளிக்கலாம் என்று எதிர்பார்ககப்படுவதாகவும் கொழும்பு ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

நல்லிணக்க ஆணைக்கு அறிக்கையைச் சமர்ப்பிக்க வழங்கப்பட்டுள்ள காலக்கெடு எதிர்வரும் 15 ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

ஆனால் இந்த அறிக்கை எப்போது ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும் என்பது குறித்த குழப்பமான தகவல்கள் வெளியாகின்றன.

நவம்பர் 18ஆம் திகதி ஜனாதிபதியின் பிறந்த நாள் அன்று இந்த அறிக்கை கையளிக்கப்படும் என்று முன்னர் கூறப்பட்டது.

அதேவேளை, காலக்கெடு முடிந்த நான்கு நாட்க ளின் பின்னர் நவம்பர் 19 ஆம் திகதி கையளிக்கப்படும் என்று அரசின் மூத்த அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

அதேவேளை, அறிக்கை தயாரிப்பு முடிவடைந்து செப்பனிட்டு, சரிபார்க்கச் செய்யும் பணிகள் நடந்து வருவதாகவும், இன்றுடன் அது நிறைவடையும் நிலையில், எதிர்வரும் 11 ஆம் திகதிக்கும் 15ஆம் திகதிக்கும் இடையில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளது.

## அகதிகளைத் திருப்பியனுப்புவதா ஆராய்கின்றது சுவிஸ் அரசு



(கொழும்பு)

குடியேற்ற வாசிகளாக ஆயிரக் கணக்கான இலங்கையர்கள் சுவிட்ஸர்லாந்தில் தங்கியிருப்பதாகவும் அவர்களை விரைவில் திருப்பியனுப்புவதற்கு அந்நாட்டு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாகவும் சுவிட்ஸர்லாந்துக்கான இலங்கைத் தூதுவர் சட்டத்தரணி சரத் கோன்கஹகே குறிப்பிட்டார்.

குடியேற்றவாசிகளாக தமது நாட்டில் தங்கியுள்ளவர்களை மீண்டும் தாயகத்துக்குத் திருப்பி அனுப்புவதற்கான சூழ்நிலை நிலவுகின்றதா என சுவிட்ஸர்லாந்து அதிகாரிகள் தம்மிடம் வினவியதாக அவர் தெரிவித்தார்.

இலங்கையில் எவ்வித பிரச்சினைகளும் இல்லையெனவும், மக்கள் சுமூகமான முறையில் வாழ்வதற்கான சூழல் காணப்படுவதாகவும் அவர்களுக்குப் பதிலளித்தாகவும் சட்டத்தரணி சரத் கோன்கஹகே கூறினார்.

## அதிகரிக்கிறது தைபொயிட் காய்ச்சல்

(கொழும்பு)

நாட்டில் தைபொயிட் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த இரண்டு மாதங்களில் தைபொயிட் காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட 35 நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக கொழும்பு மாநகர சபை வைத்திய அதிகாரி பிரதீப் காரியவசம் தெரிவித்தார்.

அவர்களுள் அதிகமானவர்கள் ஹோட்டல் ஊழியர்கள் எனவும், இந்த வருடம் தைபொயிட் காய்ச்சலினால் சுமார் 55 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டிலுள்ள ஏனையவர்களுக்கு இந்தக் காய்ச்சல் பரவாமல் இருப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக கொழும்பு மாநகர சபையின் பிரதான சுகாதார வைத்திய அதிகாரி மேலும் குறிப்பிட்டார்.

## முச்சக்கர வண்டிகளுக்கு கட்டணமானி இணைப்பு

### நடக்கிறது ஏற்பாடு

(கொழும்பு)

சகல முச்சக்கர வண்டிகளுக்கும் கட்டண மானிகளைப் பொருத்த போக்குவரத்து அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட உள்ளதாக போக்குவரத்துத்துறை அமைச்சர் குமார் வெல்கம தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலை அதிகரிப்பை தொடர்ந்து முச்சக்கர வண்டிகளின் சாரதிகள் தமது விருப்பத்திற்கு ஏற்றவகையில் கட்டணங்களை அறவிடுவதன் காரணத்தினாலேயே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில், இது தொடர்பான சட்டமூலம் மோட்டார் போக்குவரத்து ஆணையாளருக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குமார் வெல்கம தெரிவித்தார்.

## மனித உரிமைகள் பாதுகாப்புக் குறித்து ரணில் முன்வைக்கிறார் செயற்றிட்டம்



(கொழும்பு)

மனித உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பாக சர்வதேச மனித உரிமைகள் பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க புதிய செயற்றிட்டம் ஒன்றைச் சமர்ப்பிக்கவுள்ளார்.

லண்டனில் இடம்பெறவுள்ள சர்வதே மனித உரிமைகள் பேரவையில் வருடாந்த மாநாட்டில் கலந்து கொள்வதன் பொருட்டே எதிர்கட்சித் தலைவர் பிரித்தானியா செல்கிறார்.

சர்வதே மனித உரிமைகள் பேரவையில் பிரதித் தலைவராக ரணில் விக்ரமசிங்க செயற்படுகிறார்.

இந்த நிலையில், இந்த மாநாட்டில் மனித உரிமைகள் தொடர்பில் பல யோசனைகளை ரணில் விக்ரமசிங்க முன்வைக்க உள்ளார்.

இதனிடையே, சர்வதேசத் தலைவர்கள் மற்றும் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரையும் எதிர்கட்சித் தலைவர் சந்திக்கவுள்ளார்.

## நாடு திரும்புகின்றனர் அகதிகள் ஐ.நா. அலுவலகம் ஏற்பாடு

(கொழும்பு)

தமிழ்நாட்டில் தங்கியுள்ள 49 இலங்கைத் தமிழ் அகதிகள் கப்பல் மூலம் இன்று தாயகம் திரும்பவுள்ளதாக அகதிகளுக்கான ஐ.நா முகவரகம் அறிவித்துள்ளது.

தமிழ்நாட்டின் பல்வேறு முகாம்களிலும் தங்கியிருந்த 12 குடும்பங்களைச் சேர்ந்த 49 அகதிகள் தூத்துக்குடியில் இருந்து கப்பல் மூலம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகளை அகதிகளுக்கான ஐ.நா முகவரகம் செய்துள்ளதாக சென்னையிலுள்ள அதன பணியகத்தின் நாடு திரும்பும் நடவடிக்கைகளுக்கான இணை அதிகாரி விஜயபாரதி தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி-கொழும்பு கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் முதன்முறையாக கடந்தமாதம் 37 அகதிகள் நாடு திரும்புவதற்கான ஏற்பாடுகளை அகதிகளுக்கான ஐ.நா முகவரகம் செய்து கொடுத்திருந்தது.

2009ஆம் ஆண்டில் 800 பேரும், 2010 இல் 2054 பேரும், இந்த ஆண்டின் செப்டெம்பர் வரையிலான காலப்பகுதியில் 1448 பேருமாக மொத்தம் 4302 தமிழ் அகதிகள் இதுவரை தாயகம் திரும்பியுள்ளனர்.

## புதிய சுகாதார நிலையம் ஐரோப்பிய ஒன்றியம் நிதியுதவி



(கொழும்பு)

இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கம் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் அமைத்த கிராமோதய சுகாதார நிலையத்தைத் திறந்து வைத்து சுகாதாரத் திணைக்களத்திடம், கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி கௌ.ஞானகுணாளனிடம் இந்நிலையம் கையளிக்கப்பட்டது.

வெருகல் பிரதேச செயலாளர் பிரிவில் மாவடிச்சேனைச் பகுதியில் 5 மில்லியன் ரூபா செலவில் இந்தக் கிராமோதய சுகாதார நிலையம் அமைக்கப்பட்டது.

இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கம் ஜேர்மன் செஞ்சிலுவைச்சங்கம் என்பன இணைந்து ஏற்பாடு செய்த இதற்கான நிகழ்வில் ஜேர்மன் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆசிய பிராந்தியத்திற்குப் பொறுப்பான வதிவிடப் பிரதிநிதி மெரினா ஹவான்ஸ்ஜன், ஜேர்மன் செஞ்சிலுவைச் சங்கத்தின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி அன்ரஸ் லின்டர், புதிதாக பதவி ஏற்கும் வதிவிடப் பிரதிநிதி டிம் பிரே, வெருகல் பிரதேசசபைத் தலைவர் விஜகாந், திருகோணமலை செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவரும் பொது வைத்தியசாலை அத்தியட்சகருமான வைத்திய கலாநிதி ஈ.ஜி. ஞானகுணாளன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பாரத லக்ஸ்மன் கொலை

### சந்தேக நபர்கள் இருவர் சரண்



(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத்த லக்ஸ்மன் பிரேமசந்திர படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய பாதாள உலகக குழு உறுப்பினர் காவல் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

ரேல்பாரே சஞ்சீவ என அழைக்கப்படும் பிரபல பாதள உலகக் குழு உறுப்பினரே இவ்வாறு சரணடைந்துள்ளார்.

இவருடன் சங்க என்னும் மற்றுமொரு முக்கிய பாதாள உலகக் குழு உறுப்பினரும் சரணடைந்துள்ளார்.

மனித படுகொலைகள், போதைப் பொருள் வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு பாரிய குற்றச் செயல்களுடன் குறித்த நபர்களுக்கு தொடர்பு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு புளுமெண்டல் வீதி மற்றும கிராண்ட்பாஸ் ஆகிய பிரதேசங்களை மையமாகக் கொண்டு குறித்த நபர்கள் குற்றச் செயல்களை மேற்கொண்டு வந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

காவல் நிலையத்தில் சரணடைந்த இருவரும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப் பட்டதாகவும், இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## சமுர்த்தித் திறன் எழுச்சி உற்பத்திகளின் கண்காட்சி

(கொழும்பு)

சமுர்த்தி அதிகார சபையின் அனுசரணையுடன் அம்பாறை மாவட்ட சமுர்த்தி அலுவலகத்தின் சமுர்த்தித்திறன் எழுச்சி உற்பத்திக் கண்காட்சியும், விற்பனையும் அம்பாறை பொது மைதானத்தில் எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் திவிநெகும சமுர்த்தி வாழ்வாதாரத் திட்டம் மற்றும் சமுர்த்தி வங்கிக் கடன் மூலம் உற்பத்திகளை மேற்கொண்டு வரும் சமுர்த்திப் பயனாளிகளின் உற்பத்திகள் இங்கு காட்சிப்படுத்தப்படவுள்ளன.

இக்கண்காட்சியில் அமைச்சர்கள், நாடாளும்மன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச செயலாளர்கள் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# இலங்கையில் இன முரண்பாடுகள் இதுவே கூட்டமைப்பின் இலக்கு



(கொழும்பு)

நாட்டிலுள்ள இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை ஏற்படுத்துவதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நோக்கம் என அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் வழங்க சில நாடுகள் முயற்சி செய்கின்றன.

சில கூட்டமைப்பு உறுப்பினரகள் புலிக் கொடி ஏற்றப்பட்ட கூட்டங்களில் கலந்து கொண்டு அவர்களுக்கு நிதி திரட்டவும் உதவி செய்துள்ளனர். புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படும் ஓர் அரசியல் கட்சியை ஐக்கிய நாடுகள் பிரதிநிதிகள் சந்திப்பு ஏற்றுக்கொள்ள முடியாது, அது உறுப்பு நாடான இலங்கைக்கு இழைக்கும் அநீதியாகவே கருதப்பட வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக கருதப்பட முடியாது. கூட்டமைப்பினரின் கொள்கைகளுக்கு முற்றிலும் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்ட கட்சிகளும் அரசியல் நீரோட்டத்தில் இயங்கி வருகின்றன. முஸ்லிம் அரசியல் கட்சிகளும் இயங்கி வருகின்றன.

எனவே, இந்த சகல தரப்பினரும் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்தை சந்திக்க சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும் என தினமின பத்திரிகைக்கு அளித்த நேர்காணலில் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். பலம் பொருந்திய நாடுகள் இந்த விடயத்தில் இரட்டை நிலைப்பாட்டை பின்பற்றி வருகின்றன.

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாடு இலங்கையில் நடத்தப்படுவதனை தடுப்பதற்கு சில நாடுகள் கடும் முயற்சி மேற்கொண்டன. எனினும், ஜனாதிபதி தலைமையிலான குழுவினர் வெற்றிகரமாக அந்த முயற்சிகளை முறியடித்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

# ஊடக முறைமைக்கு எதிராக இலங்கை செயற்படுகின்றது

## சுதந்திர ஊடக மையம் கண்டனம்

(கொழும்பு)

இலங்கை தொடர்பான செய்திகளை வெளியிடும் இணையத்தளங்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட வேண்டும் என்ற அரசின் புதிய அறிவிப்புக் குறித்து பல்வேறு ஊடக அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்துள்ளன.

உலக ஊடக முறைமைக்கு எதிராக இலங்கை அரசாங்கம் செயற்பட முனைவதாக சுதந்திர ஊடக மையம் தெரிவித்துள்ளது.

இலங்கை தொடர்பான செய்தி வெளியிடும் இணையத்தளங்கள் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று அண்மையில் இலங்கையின் ஊடக அமைச்சு அறிவித்திருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் உத்தியோகபூர்வ இணையத்தளமான லங்கா வே நியூஸ், லங்கா காடியன் ஆகிய இணையத்தளங்கள் முடக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில் குறித்த தீர்மானம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் ஊடக அமைப்புக்களுடன் கலந்துரையாடவேண்டும் என்று சுதந்திர ஊடக அமைப்பின் அமைப்பாளர் சுனில் ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

எனினும் இலங்கையில் முடக்கப்பட்ட எந்த இணையத்தளங்களையும் புரொக்சி முறையின் மூலம் பார்க்க முடியும் என்று தொழில்நுட்ப நிபுணர் கிஹான் மெண்டிஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை இலங்கையில் செய்தி இணையத்தளங்கள் தடை செய்யப்படுவதை எதிர்த்து அமெரிக்கத் தூதரகம் அண்மையில் அறிக்கை ஒன்றை வெளியிட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# சூரிய சக்தியில் கப்பல் இலங்கை வந்தடைந்தது

(கொழும்பு)

சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த டியூரானோ சோலார் கப்பல் எனும் பெயர்கொண்ட இந்தக் கப்பல் முதற்கட்டமாக நேற்று அம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்தது.

நிலையான சக்திப் பயன்பாட்டை மேம்படுத்துவது என்ற நோக்கத்துடன் உலகம் முழுவதற்கும் பயணம் மேற்கொண்டிருக்கும் இக்கப்பல் முதற்தடவையாக இலங்கை வந்தடைந்துள்ளது. இது முதலில் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கும் அதன் பின்னர் காலி மற்றும் கொழும்புத் துறைமுகத்துக்குச் செல்லுமென்றும் துறைமுக அதிகார சபையின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

# டெங்கு ஒழிப்பு மன்னாரில் தீவிரம்



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் டெங்கு நோயை கட்டுப்படுத்தும் முகமாக மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமணையின் மலேரியாத் தடை இயக்கத்தினர் மாவட்டத்தின் சகல இடங்களிலும் புகையூட்டப்படும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழையினைத் தொடர்ந்து டெங்கு நோயாளர்களின் தொகை அதிகரித்து வருகின்றது.

டெங்கு நுளமபை கட்டுப்படுத்தும் முகமாக மாவட்டத்தின் பல பாகங்களிலும் நேற்றுமுன்தினம் முதல் புகையூட்டும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

# தனியார் சொத்துக்களை அபகரித்தால் சர்வதேச சமூகத்திடம் முறைப்பாடு

## ஐக்கிய தேசியக் கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

தனியாரின் சொத்துக்களை அரசு தேசிய மயப்படுத்த முயற்சித்தால் அரசுக்கு எதிராக சர்வதேச சமூகத்திடம் முறைப்பாடு செய்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கை எடுக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தனியார் சொத்துக்களை தேசியப்படுத்தல் குறித்து சர்வதேச ரீதியில் முறைப்பாடு செய்யப்படும் என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது. பொதுநலவாய நாடுகள் நாடாளுமன்றக்குழு மற்றும் சர்வதேச சமூகத்திடம் இந்த விடயம் குறித்து முறைப்பாடு செய்ய நேரிடும் என கட்சி அறிவித்துள்ளது.

இந்தச் சட்டத்தின் மூலம் தனியார்துறையினருக்கு எவ்வித நன்மையும் கிட்டாது என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.இந்த புதிய சட்டம் தொடர்பில் சர்வதேச சமூகத்தின் முக்கியஸ்தர்களுககு விளக்கம் அளிக்கப்பட உள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

# ஏற்றுமதித்துறையில் இலங்கை வளர்ச்சி

(கொழும்பு)

இந்த வருடத்தின் ஓகஸ்ட் மாத முடிவு வரை ஏற்றுமதி மூலம் 600 கோடியே 90 இலட்சம் அமெரிக்க டொலர் வருவாயாக கிடைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் இதே காலப்பகுதியினுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் 28 தசம் 6 சத வீத ஏற்றுமதி வளர்ச்சி ஏற்பட்டுளளதாக ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

கைத்தொழில், விவசாயம் மற்றும் தைக்கப்பட்ட ஆடை, இறப்பர் போன்ற ஏற்றுமதிப் பொருட்களிலேயே குறிப்பிடத்தக்க அதிகரிப்பு இந்தக் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மருந்துப் பொருட்களுக்கு கட்டுப்பாட்டு விலை

## சுகாதார அமைச்சர் நடவடிக்கை

(கொழும்பு)

மருந்துப் பொருட்கள் தொடர்பான விலைக் கட்டுப்பாட்டு முறை மீண்டும் விரைவில் நடைமுறைக்குக் கொண்டு வரப்படும் என்று சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அடுத்தாண்டின் முதல் காலாண்டுக்குள் மருந்துப் பொருட்கள் தொடர்பான விலைக கட்டுப்பாட்டு முறை குறித்த விசேட வர்த்தமானிப் பிரகடனம் வெளியிடப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மருந்துப் பொருட்கள் தொடர்பான விலைக்கட்டுப்பாட்டு முறை 2002 ஆம் ஆண்டு வரையும் நடைமுறையில் இருந்த போதிலும் அதனை ஐ.தே.கட்சி ஆட்சியாளர்களே விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் நீக்கியதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, மருந்துப் பொருடகள் தொடர்பான விலைக் கட்டுப்பாட்டு முறை நீக்கப்பட்டதால் மருந்துப் பொருள் விற்பனையாளர்கள் தான் பெரிதும் நன்மை அடைந்துள்ளார்கள். ஆனால் அப்பாவி நோயாளர்கள் பெரிதும் பாதிப்படைந்தார்கள். கடந்த 8 வருடங்களாக இந்த நிலைமை தொடர்கிறது.

திறந்த பொருளாதாரக் கொள்கையின் மூலம் போட்டித் தன்மையை ஏற்படுத்தி நாட்டு மக்களுக்கு நியாய விலையில் பொருட்களைப் பெற்றுக் கொடுக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் மருந்துப் பொருட்கள் மக்களுக்கு நியாய விலையில் கிடைக்கவில்லை. குறிப்பாக ஒரு மருந்துப் பொருள் ஒவ்வொரு மருந்தகங்களிலும் வெவ்வேறு விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றன. அத்தோடு ஒரு மருந்து பல வர்த்தகப் பெயர்களில் சந்தைப் படுத்துகிறன.

மருத்துவர்கள் மருத்துவப் பெயர்களில் எழுதும் சிட்டைகளுக்கு சில மருந்தகங்களில் வர்த்தகப் பெயர் மருந்துப் பொருட்களே விநியோகிக்கப் படுகின்றன என்றும், இதனாலேயே கட்டுப்பாட்டு விலை அறிமுகப்படுத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.



குருநகர் அண்ணாவி அன்ரனி யேசுராசா யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் மற்றும் பேராசிரியர் வே.ப.சிவநாதன் ஆகியோரால் பொன்னாடை போர்த்தி யாழ். பிரதேச செயலக கலாசாரப் பேரவை விழாவில் "யாழ்.ரத்னா" விருது வழங்கிக் கெளரவிக்கப்படுவதைக் காணலாம்.

(68)

# அரசுக்கு ஆதரவு வழங்காத வர்த்தகர்களை பழிவாங்கவே புதிய சட்டம் அறிமுகம்

## கடுமையாகச் சாடுகிறது ஜே.வி.பி

(கொழும்பு)

தேர்தல் காலத்தில் அரசுக்கு ஆதரவு வழங்காத தனியார் துறை வர்த்தகர்களைப் பழிவாங்கவே தனியார் சொத்துக்களைத் தேசிய மயப்படுத்தும் புதிய சட்டத்தை அரசு அறிமுகப்படுத்துவதாக அரசு மீது ஜே.வி.பி. கடும கண்டனம் வெளியிட்டுள்ளது.

அரசின் இவ்வாறான ஜனநாயக விரோதச் செயல்களுக்கு எதிராக மக்கள் சக்தியைப் பயன்படுத்த வேண்டுமென ஜே.வி.பி சுட்டிக்காட்டியுள்ளது. டியூனிசியா, எகிப்து போன்ற நாடுகளில் ஜனநாயக விரோத செயல்களுக்கு எதிராக மக்கள் சக்தி வெற்றிகரமாக பயன்படுத்தப்பட்டது என ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தைப் பயன்படுததி இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியாது என அவர் சுடடிக்காட்டியுள்ளார். டியூனிசியா போன்ற நாடுகளில் நாடாளுமன்ற பெரும்பான்மை பலமுடைய அரசாங்கங்கள், மக்கள் சக்தியினால் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் எதிர்ப்பின் காரணமாக, தனியார்துறை ஊழியர்களுக்கான ஓய்வூதிய சட்டத்தை இலங்கை அரசாங்கம் வாபஸ் பெற்றுக்கொண்டது என அவர் தெரிவித்துள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் போராட்டங்களை நடத் தாது மக்களின் சக்தியைப் பயன்படுத்தி மாற்றங்களை ஏற்படுதத முயற்சிக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

தனியார்துறை சொத்துக்களை தேசியமயப்படுத்தும் உத்தேசச் சட்டம் ஆபத்தானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்தசட்டம் நிறைவேற்றப்பட்டால் வர்த்தமானி அறிவித்தல் மூலம் எந்தவொரு தனியார்துறை உடமையையும் தேசியமயப்படுத்த முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் காலத்தில் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்காத வர்த்தகர்கள் இந்த புதிய சட்டத்தின் மூலம் பாதிக்கப்படலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கண்டுபிடித்தும் கைக்கு எட்டாதது

- நாமினி விஜேதாஸ

அவளது குடும்பத்தினர் ஒவ்வொருவருக்கும் சொந்தமான கிழிந்துபோன கந்தல் துணிகள் யாவும் தகரம், களிமண் மற்றும் பிளாஸ்டிக் கூரைத்தகடுகள் என்பனவற்றின் கூட்டணியில் உருவான அவளது வீட்டுக்குள் இருந்த சிறிய கயிற்றுக் கொடியில் தொங்கிக் கொண்டிருந்தன. சத்தத்துடன் கூரைமேல் விழுந்து கொண்டிருந்த மழை, ஒரு சிறிய துவாரத்தைக் கண்டுபிடித்து அதனூடாக களிமண் தரையில் தாளத்தோடு சொட்டுச் சொட்டாக விழுந்து கொண்டிருந்தது.

கதிர்காமத்தம்பி கலைச்செல்வி எனும் அந்தப் பெண் அழுக்குத்தரையில் சம்மணமிட்டு அமர்ந்தவாறு ஒரு ஏ-4 அளவு காகிதத்தில் பதியப்பட்ட கணினி அச்சுப்பதிவை இமைக்காது தீவிரமாக வெறித்துப் பார்த்த வண்ணமிருந்தாள். அது யுத்தத்தின் இறுதிப் பகுதியில் காணாமற்போய் பல மாதங்களின்பின் கண்டுபிடிக்கப்பட்டு தற்சமயம் தனது தாயை இனங்காண முடியாதுள்ள எட்டுவயதான அவளது மகள் கிருபாலினியின் படம்.

கலைச்செல்வி தனக்கு 36 வயது எனச் சொல்கிறாள். அவளுக்கு 11 வயதான யசிந்தன் மற்றும் 6 வயதான ஹரிஹரன் என்கிற வேறு இரண்டு குழந்தைகளும் உள்ளனர். அவளது தலைமுடி எல்.ரீ.ரீ.ஈ பெண் போராளிகள் வழக்கமாக அணிவதைப்போல இரண்டாக பகிர்ந்து பின்னி முறுக்கிக்கட்டி முடிச்சுப்போட்டு இருபக்கமும் விடப்பட்டிருந்தன.

புலிகளுடன் முன்பு தங்களுக்கு இருந்த பழைய தொடர்புகளைப் பற்றிய எதையும் அவள் இரகசியமாக வைத்திருக்கவில்லை. அதை மறைப்பதால் இப்போது பயன் என்ன?

கலைச்செல்வியின் கணவர் ஒரு காலத்தில் புலிகளின் பக்கமிருந்து சண்டையிட்டவர்தான் ஆனால் சண்டை மிகவும் மோசமான நிலையை அடைந்தபோது, அவர் தனது குடும்பத்தினருக்காக வேண்டி புலிகளைக் கைவிட்டார்.

இராணுவத்தினர் முன்னேறி வந்து கொண்டிருந்தபோதுகூட அவர்கள் வன்னியில் இருப்பதையே தெரிவு செய்திருந்தார்கள். 'நாங்கள் சாதாரணமாக நகர்ந்து நகர்ந்து, எங்கள் நகர்ச்சி முள்ளிவாய்க்காலில் ஒரு முடிவுக்கு வரும்வரை போய்க்கொண்டேயிருந்தோம்' என்று கலைச்செல்வி பழையதை நினைவு மீட்டினாள்.

அங்கு அடைபட்டிருந்த நூறாயிரக் கணக்கான மற்றவர்களுடன் இவர்களும் கலந்து காத்திருந்தார்கள். மே 2009 இல் ஒரு நாள் அவளது கணவன் தான் உணவு கொண்டு வரப்போவதாகவும், குடிநீர் கொண்டு வந்து வைக்கும்படி அவளிடம் கூறினார். அவர்கள் தங்கள் குழந்தைகள் மூவரையும் அருகருகே அமர்ந்திருக்கும்படி செய்துவிட்டுப் போனார்கள்.

கலைச்செல்வி தண்ணீருடன் திரும்பிவந்து பார்த்தபோது அவரது கணவரையும் கிருபாலினியையும் காணவில்லை. அவர்கள் எங்கு சென்றார்கள் என்று யாருக்கும் தெரியவில்லை.

யுத்தம் முடிவடையும் தருணத்தில் கலைச்செல்வியும் அவளது இரண்டு குழந்தைகளும் வன்னியை விட்டு தப்பிச்சென்று மெனிக் பாமில் இரண்டு வருடங்கள் வரை வாழ்ந்தார்கள்.

ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான நிலையம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், அதிகாரிகள், இராணுவத்தினர், பத்திரிகைகள் என சகலரிடமும் கலைச்செல்வி தனது கணவனையும் மகளையும் பற்றிய செய்திகளுக்காக இரந்து மனறாடினாள். ஆனால் எதுவும் கிடைக்கவில்லை.

கலைச்செல்வி வன்னியில் தனது சகல உடமைகளையும் விட்டுவிட்டு வந்திருக்கலாம். ஆனால், யுத்தம் நடைபெற்ற சமயத்தில் ஒடிய மற்றும் பலரையும்போல அவள் தனது மகளின் புகைப்படங்களை போகுமிடமெல்லாம் எடுத்துச் சென்றாள். தங்கள் குடும்ப அங்கத்தினர்கள் காணாமற்போய் விட்டவர்களுக்கு இன்று இவைகள் தான் தங்கள் கைகளிலுள்ள மிகவும் மதிப்பு வாய்ந்த பொக்கிசங்கள். அதில் ஒரு படத்தை சிறுவர் பராமரிப்பு மற்றும் நன்னடத்தை திணைக்களத்திடம் கொடுத்தபோது அவர்கள் அதை ஒரு செய்திப் பத்திரிகையில் பிரசுரித்தார்கள்.



இதற்கிடையில் அவர்கள் மெனிக் பாமை விட்டு வெளியேறி, தங்கள் சொந்தக் கிராமமாக இல்லாது போனாலும் வன்னியில் வேறிடத்தில் குடியேறினார்கள். கலைச்செல்வியால் தனது அசல் கிராமத்துக்குச் செல்ல முடியாது, ஏனெனில் அவளது மாமியார் தனது மகனின் இழப்புக்காக அவள்மீது பழி சுமத்துவார்.

அதைத் தவிர ஒருகாலத்தில் அவரகள் 'புலிகளின் குடும்பமாக' இருந்தபடியால், மற்றவர்கள் வசதியாக அவர்களை அந்தத் தரப்படுத்தலுக்கு உட்படுத்தியிருந்தார்கள். போர் முடிவடைந்ததும் புலிகள் இல்லாது போய் விட்டார்கள், ஆனால் அந்த வடு காரணமாக இவர்கள் ஊரைவிட்டே ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளார்கள்.

கலைச்செல்வி பின்னாளில், ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம், வவுனியா மாவட்ட செயலகம் மற்றும் சிறுவர் பராமரிப்பு மற்றும் நன்னடத்தை திணைக்களம் என்பனவற்றின் கூட்டாகச் செயற்படும் குடும்பங்களின் தடமறிந்து மீள் இணைக்கும் பிரிவு (எப்.ரி.ஆர்) ஒன்று இருப்பதாக கேள்விப்பட்டு, தனது புகைப்படங்களுடன் அந்த அலுவலகத்தை தேடிப் பயணமானாள்.

2009 டிசம்பரிலிருந்து காணாமற்போன குழந்தைகள் சம்பந்தமாக அந்தப் பிரிவுக்கு 690 புகார்கள் கிடைக்கப் பெற்றிருந்தன. அவர்கள் அவளது விபரங்களை பதிவு செய்து கொண்டபின் அவளது மகளின் புகைப்படத்தையும் scanner மூலமாக தங்கள் தரவுத் தளத்தில் பதிவு செய்துவிட்டு அவளை வீட்டுக்கு அனுப்பினார்கள்.

சில மாதங்களுக்குப் பின்னர் எப்.ரி.ஆர் இலிருந்து ஒரு பெண் கலைச்செல்வியின் கைத்தொலைபேசிக்கு அழைப்பொன்றை விடுத்திருந்தார். 'நான் அங்கு சென்றேன் அவர்கள் எனது மகளைக் காண்பிக்கவில்லை, ஆனால் நிறைய புகைப்படங்கள் உள்ள கணினி ஒன்றைக் காண்பித்தார்கள்' என்று சொன்னாள் கலைச்செல்வி.

கணினித்திரையில் கிருபாலினியின் உருவம் தெரிந்த அந்தக் கணமே அவள் தன் மகளை அடையாளம் கண்டு கொண்டாள்.

எப்.ரி.ஆர் அமைப்பினால் ஒரு சிறுவர் இல்லத்திலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட அந்தப் பிள்ளைக்கு இப்போது கிட்டத்தட்ட எட்டு வயதிருக்கும். அவர்கள் அந்தச் சிறுமியை அவளது குடும்பத்தினருடன் சாத்தியமான அளவுக்கு பொருத்தம் செய்து பார்ப்பதற்காக ஒரு பயணத்துக்கு ஏற்பாடு செய்தனர். ஆனால் சிறுவர் பராமரிப்பு மற்றும் நன்னடத்தை திணைக்கள அதிகாரிகளுடன் சென்ற கலைச்செல்வி முதன் முறையாக தனது மகளைச் சந்தித்தபோது அந்தச் சிறுமியால் தனது தாயை அடையாளம் காணமுடியவில்லை.

கலைச்செல்வி திடீரென எங்கள் காலடியில் விழுந்து கைகூப்பி வணங்கியபடி கதறி அழுதாள். அவள் கைகளால் தனது மார்பில் அறைந்து கொண்டு வேதனையுடன் கதறினாள், அவளுக்கு் அவளுடைய மகளை, அவளுடைய சின்ன அம்மாச்சியை திரும்பவும் வேண்டும்.

ஆனால் இந்த விடயம் முடிவுக்கு வருவதற்கு வெகுதூரம் செல்ல வேண்டியிருக்கிறது. சிறுவர் பராமரிப்பு மற்றும் நன்னடத்தை திணைக்கள அதிகாரிகள் தாய்க்கும் மகளுக்கும் இடையே ஒரு காலத்தில் இருந்த உறவைப் புதுபபிக்க கருத்துரைகளை வழங்கினார்கள். இந் தக் கணம் வரை கிருபாலினி தனது தாயாருடன் மீண்டும் இணைவதற்கு சாதகமாக சாய்வதாகத் தெரியவில்லை. அவள் எப்படித் தனது ஞாபகங்களை இழந்தாள் என்பதும் தெளிவில்லாத ஒன்றாக தேங்கி நிற்கிறது.

பராமரிப்பு அதிகாரிகள் கலைச்செல்வி வாழும் சூழ்நிலையை கவனத்தில் எடுத்துள்ளார்கள் அவளுக்கு சொந்தமாக ஒரு வீடு இல்லை. அவளது இரண்டு மகன்களும் பாடசாலைக்குச் செல்வதில்லை. அதற்கு அவர்களுக்கு ஆடைகள், புத் தகங்கள், காலணிகள் என்பன தேவையாக உள்ளன. அவர்கள் மிகவும் மோசமாக உடையணிந்து அழுககாக மற்றும் மோசமான வறுமைக் கோலத்தில் காட்சியளிக்கிறார்கள்.

"நான் வேறு ஒருவருடைய காணியில் வசிப்பதால், எங்காவது ஓரிடத்தில் ஒரு வீட்டை அமைக்கும்படி எனக்கு கூறப்பட்டுள்ளது" என்று சிணுங்கினாள் கலைச்செல்வி. "நான் வீதி வேலை செய்கி றேன், நான் நினைக்கிறேன் அவர்கள் எனது பணத்தை வங்கியில் வைப்புச் செய்து வருகிறார்கள் என்று. மேலும் நான் பங்கீட்டு உணவை பெற்று வருவதோடு, எனது மீள் திரும்பலுக்காக கிடைத்துவரும் கொடுப்பனவும் வங்கியில் வைப்பில் உள்ளது......" என்று தொடர்ந்து கூறினாள்.

"இது குழந்தைகளைக் கண்டுபிடித்து ஒரு இணைப்பை ஏற்படுத்த போதுமானதாக இல்லை" என யுனிசெ.்.ப்பின் பாதுகாப்பு அதிகாரிகளில் ஒருவரான மனுரு டீன் விளக்கினார். "சிறுவர் பராமரிப்பு மற்றும் நன்னடத்தை அதிகாரிகள் குழந்தை ஒரு நல்ல பாதுகாப்பான சூழலுக்கு திரும்புகிறாள் என்று திருப்திப்பட வேண்டும். அவள் திரும்பச் சென்றதும் அவளுக்குத் தேவையான உணவு உடைகள் என்பனவற்றைப் பெறுவதற்கு ஏற்ற போதிய நிதிநிலை உள்ளதா என அவர்கள் மதிப்பீடு செய்ய இருக்கிறார்கள். அதன்பின் நீதிமன்றம் ஒரு உத்தரவை வழங்கும்".

உணவின் பிரதான பாகங்களை கொண்டிருந்த மூன்று சமையல் பானைகளைச் சுற்றி ஈக்கள் வட்டமடித்துக் கொண்டிருந்தன. சுவரில் பொருத்தப்பட்டிருந்த ஒரு ஒட்டுப் பலகைத் துண்டின் மேல் சிறிய போத்தலில் முகத்துக்குப் போடும் வாசனைப் பொடி, ஒரு மயிர் செருகி, சிறிய கண்ணாடி, மற்றும் தேங்காய் எண்ணை என்பன வைக்கப்பட்டிருந்தன. கலைச்செல்வி அந்தக் கணினிப் பதிவுத் தாளின் மேலிருந்து தனது முகத்தை மெதுவாகத் திருப்பியபடி "எனது கணவர் திரும்பி வந்ததும் நான் இங்கிருந்து போய்விடுவேன், குறிசொல்பவர்கள் அவர் உயிரோடு தான் இருக்கிறார் என்று சொல்கிறார்கள். எனது மகளைப் பற்றியும் அவர்கள் இதேபோலச் சொன்னார்கள்" என்று சொன்னார்.

## தீட்டுக் கறை படிந்த பூ அழிந்த சேலைகள்



நாங்கள் சந்தோசமாக இருக்கிறோம்
எங்களுக்கு ஒரு குறையும் இல்லை
டவுசர் இல்லை என்று குழந்தைகள் அழும்
ஒரு அடி கொடுப்போம் வாங்கிக்கொண்டு
ஓடி விடுவார்கள்
தீட்டுக் கறை படிந்த
பூ அழிந்த சேலைகள்
பழைய துணிச் சந்தையில்
சகாயமாகக் கிடைக்கின்றன
இச்சையைத் தணிக்க
இரவில் எப்படியும் இருட்டு வருகிறது
கால் நீட்டித் தலை சாய்க்க
தார் விரித்த பிளாட்பாரம் இருக்கிறது
திறந்த வெளிக் காற்று
யாருக்குக் கிடைக்கும்
எங்களுக்குக் கொடுப்பினை இருக்கிறது
எதுவும் கிடைக்காத போது
களிமண் உருண்டையை வாயில் போட்டு
தண்ணீர் குடிக்கிறோம்
ஜீரணமாகி விடுகிறது
எங்களுக்கு ஒரு குறையும் இல்லை
நாங்கள் சந்தோசமாக இருக்கிறோம்.


- மு. சுயம்புலிங்கம்

# கேப்டன் கேப்டன்தான்! டீஆர் டீஆர்தான்!





டி.ராஜேந்தர், கேப்டன் விஜயகாந்த் இருவருமாக கூட்டணி போட்டு ஒரு படம் நடித்தால் அந்தப் படம் தமிழர்களுக்கு மட்டுமல்லாது உலகமே போற்றிக்காக்கும் பொக்கிஷமாக இருக்குமில்லையா?. அதே சந்தோசத்தை பேரானந்தத்தை விஜய நடிப்பில் வெளியான வேலாயுதம் நமக்கு தருகிறது



என்று சொன்னால் அது மிகையல்ல.

தங்கச்சி சென்டிமென்டையும் பாகிஸ்தான் தீவிரவாதிகளையும் இணைத்து படமெடுக்க முன்வந்த இயக்குனர் ராஜாவுக்கு முதலில் பெரிய பூங்கொத்துடன் கூடிய பாராட்டுகள். தீபாவளி ரேஸில் அவர்படம்தான் பஸ்ட்டாம்!

என்னது விஜய் படத்துல பாகிஸ்தான் தீவிரவாதியா "ஙே" என முழிக்கவேண்டாம் யெஸ் பாகிஸ் தான் டெரிஸ்ட்ஸ் தான். அவர்களைதான் விஜய் பறந்து பறந்து பின்னாங்காலால் சுவற்றை மிதித்து சுழன்று உதைத்து பந்தாடுகிறார். திருப்பாச்சி படத்தில் தங்கச்சிக்காக எப்படி சென்னை ரவுடிகளை அழித் தொழிக்கிறாரோ அதேபோல இதில் தங் கச்சிக்காக தீவிரவாதிகளை அழிக்கிறார்.

யெஸ் தங்கச்சிக்காகத்தான்.. தோளிலும் மாரிலும் தூக்கி வளர்த்த அதே அன்பு தங்கச்சிக்காகத் தான்! ஆனால் என்ன ஒன்னு.. டீயார் போல தாடி கிடையாது..

தங்கச்சியை கொன்ற தீவிரவாதிகளை இளைய தளபதி விஜயாக இருப்பதால், அவருடைய லெவலுக்கு குறைந்த பட்ஜெட்டில் சென்னையில் வைத்து தான் அடித்து உதைத்து கொன்று பழிதீர்க்க வேண்டியதாயிருக்கிறது.

இதுவே எங்க தல கட்டனாக இருந் திருந்தால் பாகிஸ்தானுக்கே போய ஒண்டிக்கட்டையாக ஒட்டு மொத்த தீவிரவாத சமுகத்தையுமே உதைத்தழித் திருப்பார். சொல்லப்போனால் உலக மேப்பில் பாகிஸ்தான் என்கிற நாடே இல்லாமல் போயிருக்கும். அன்பார்களேட்லி அது நடக்கல! ஆங்! (வீ மிஸ் யூ கேப்டன் சார்)

கிளைமாக்ஸில் சிக்ஸ்பேக் மாதிரி எதையோ காட்டி நம்மையும் தீவிரவாதிகளையும் பழிவாங்கு கிறார். விஜயின் அந்த மல்டிப்பிள் சிக்ஸ்பேக்ஸை பார்த்து தியேட்டரில் குழந்தைகளே பயப்படும் போது பாகிஸ்தான் தீவிரவாதிகள் எம்மாத்திரம். இருண்ட ஆபிரிக்காவை நோக்கி அலறி ஓடுகிறார்கள்.

மற்றபடி படத்தில் மிகவும் பிடித்தவசனம் "நான் ஆளுங்கட்சியும் இல்ல எதிர்கட்சியும் இல்ல ஒரே கட்சிதான் அது என் தங்கச்சி!" (இந்த வசனத்தை டீயார் சொல்லியிருந்தால் தியேட்டரே விசில் சத்தத்தில் சின்னாபின்னமாகியிருக்கும்!).

தங்கச்சிக்காக டான்ஸ் ஆடி பாட்டுப் பாடி அழுது சிரித்து நடித்திருந்தாலும் டீ.ராஜேந்தர் அளவுக்கு அன்பையும் பாசத்தையும் வெளிப்படுத்த முடியாமல் திணறுகிறார், பார்க்கவே பாவமாக இருக் கிறது. அட பாகிஸ்தான் தீவிரவாதிகளிடமாவது வீராவேசமாக பேசுகிறாரா என்றால் அதுவும் இல்லை. என்ன இருந்தாலும் கட்டன் கட்டன்தான்! டீஆர் டீஆர் தான். எத்தனை வேலாயுதம் வந்தாலும் மங்காத்தா வந்தாலும் அவர்களை விஞ்ச அவர்க ளால் மட்டுமே இயலும். - அதிஷா

# அமெரிக்காவின் தானியங்கள் கொண்டு...



தமிழர்கள் எதுவரையில் அமெரிக்காவையும் மேற்கையும் நம்பலாம்? எதுவரையில் அவர்களுடைய நிகழ்ச்சி நிரலில் ஒத்துழைக்கலாம்? இதற்கான உத்தரவாதங்கள் என்ன? அதை எப்படிப் பெறுவது? அதை யாரிடம் பெறுவது? என்ற கேள்விகள் பலமாகவே எழுகின்றன.

இதைவிட தமிழர்கள் எப்படி அமெரிக்காவை நம்ப முடியும்? என்ற கேள்வியும் தனியாகவே உள்ளது.

மறுவளமாக தமிழர்கள் மேற்குலகிடமோ அமெரிக்காவிடமோ அல்லது வெளிச்சக்திகளிடமோ தங்களுடைய பிரச்சினைகளைப் பற்றிப் பேசச் செல்லுந்தோறும் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான முரண்களும் பகையும் மேலும் மேலும் அதிகரித்தே செல்லும்.

ஆனால், தங்களுடைய பிரச்சினைகளைச் சிங்களத்தரப்பினர் புரிந்துகொள்ள முற்படாத வரையில் தமக்கு வேறு வழியில்லை எனத் தமிழர்கள் சொல்வதையும் புறக்கணிக்க முடியாது.

அமெரிக்காவிடம் செல்லாதீர்கள் ஜநாவிடம் முறையிடாதீர்கள் என்றால், அதற்கான சந்தர்ப்பத்திற்கு இடமளிக்காதீர்கள். இனப்பிரச்சினையைத் தீர்த்துச் சமாதானத்தை உருவாக்குங்கள். உங்களுடைய கால்களுக்குக் கீழேதான் பந்து உள்ளது. அதை வைத்துக்கொண்டு எதற்காக இன்னும் தாமதிக்கிறீர்கள் என்று திருப்பிக் கேட்கவேண்டும் போலுள்ளது...

இங்கே சிங்களத்தரப்பினரை மட்டும் நாம் குறைசொல்லிவிட்டு ஒதுங்கிவிட முடியாது.

தமிழர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கே இது ஒரு சோதனைக் கட்டம். முன்னரைப்போல மீண்டும் நடுத்தெருவில் நிற்கக்கூடிய ஏதுநிலைகளே அதிகமாகத் தென்படுகின்றது...

இதேவேளை அமெரிக்காவுக்கு அழைக்கப்பட்ட கூட்டமைப்பினரிடம் சில விடயங்களை அமெரிக்கப் பிரதிநிதிகள் வலியுறுத்திக் கூறியதாகவும் தெரியவருகிறது.

மிக விரைவில், ஒரு அரசியற் தீர்வை முன்வைக்க வேண்டிய சூழலொன்று இலங்கையில் உருவாகும்போது அதைக் குழப்பாத வகையில் நிதானமாக நடந்துகொள்ளுமாறு கூட்டமைப்புக்கு அமெரிக்கப் பிரதிநிதிகள் வலியுறுத்தியுள்ளனராம்.

கடந்த காலத்தில் அத்தகைய முயற்சியொன்றை அநாவசியமான முறையில் விடுதலைப்புலிகள் தட்டிக்கழித்தனர் என்று சொன்ன பிரதிநிதிகள், அத்தகைய தவறுகளை மேலும் விட வேண்டாம் எனவும் ஆலோசனை கூறியுள்ளனர்.

ஆகவே தமிழர்கள் எப்படிப் பார்த்தாலும் மகிழக்கூடிய நிலைமைகள் இன்னும் உருவாகவேயில்லை.

இந்தியாவை நம்பியபோது ஒரு மகிழ்ச்சிக் காலம் தமிழர்களுக்கிருந்தது. ஆனால் பிந்திய நாட்களில் அந்த மகிழ்ச்சியை அவர்கள் இழந்தனர். அதுவும் மிகக் கொடூரமாய்.

அத்தகைய ஒரு நிலைமையை நோக்கியே தமிழ், சிங்கள தேசியவாதிகளின் அரசியல் நகர்ந்து கொண்டிருக்கிறது. இப்போது இந்தியாவுக்குப் பதிலாக மேற்குலகம். அதிலும் அமெரிக்கா.

அமெரிக்கவின் தானியங்களை வைத்து ஒருபோதுமே நம்மால் பயிர்களை உருவாக்க முடியாது. அதிலிருந்து எங்களுக்கான விதைகளைப் பெறவும் முடியாது என்பர்.

ஏறக்குறைய அதேநிலையில் கொண்டுவந்து நிறுத்தப்பட்டிருக்கிறோம். இதைத்தான் 'ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டமாம்' என்று சொல்வார்கள் போலும்.

- கிருஷ்ணமூர்த்தி கட்டுரையிலிருந்து...

# உயிர் என்றால் என்ன?



இந்தக் கேள்வியைப் பல ஆயிரம் ஆண்டுகளாக மனித குலம் கேட்டுக் கொண்டிருக்கிறது. பல சிந்தனையாளர்கள் பல கருத்துக்களை எழுதி வைத்திருக்கிறார்கள். பஞ்ச பூதங்களையும் சேர்த்து கடவுள் உயிரைப் படைத்ததாக மதங்கள் சொல்கின்றன. ஆனால், அறிவியல் சொல்வது இதுதான்:

எது தனக்கு வேண்டிய சக்தியை உணவின் மூலம் பெற்றுக் கொள்கிறதோ metabolism என்று ஆங்கிலத்தில் சொல்கிறார்கள் எது தன்னைப் பிரதி எடுத்துக்கொள்ளும் சாத்தியங்கள் கொண்டதோ, அதை உயிர் என்கிறது அறிவியல். மனிதன், யானை, கொசு, தென்னை மரம், பக்டீரியா எல்லாம் செய்வது இதுதான். அதனால், அவை உயிருள்ளவை. மேசை, சைக்கிள், பாத்திரம், கணினி, புத்தகம் இவற்றிற்கு இந்தச் சக்தி கிடையாது. அதனால், அவை உயிரற்றவை.

இந்தத் தன்னைத் தானே பிரதி எடுத்தல் தான் இயற்கையின் ஆச்சரியமும் கூட! தாவரங்களுக்கு அவை உருவாக்கிக் கொள்ளும் விதை போதும். பல விலங்குகளுக்கு (மனிதனையும் சேர்த்து) ஒரு தாயும் தந்தையும் தேவைப்படுகிறது.

வேப்பங்கொட்டையிலிருந்து தோன்றும் வேப்பமரம், வாழை மரம் போல் இருப்பதில்லை. இன்னொரு வேப்பமரம் போல் தான் இருக்கிறது. எப்படி? பசு மாட்டின் கன்று, யானைக் குட்டி போல் இருப்பதில்லை. ஏன்? மனிதர்கள் தாயின் சாயலில், அல்லது தந்தையின் சாயலில், தாயின் கண், தந்தையின் உயரம் என்று பிறக்கிறார்கள். எப்படி? அங்குதான் மரபணுக்கள் என்று நாம் தமிழில் சொல்லும் ஜீன்கள் வருகின்றன.

மரபணு என்றால் என்ன? புரத அமிலங்களின் தொகுப்பு என்று எளிமையாகச் சொல்லலாம். இந்தப் புரத அமிலங்களில் முக்கியமானது டி.என்.ஏ. (Deoxyribo Nucleic Acid) எங்கே இருக்கின்றன இந்த டி.என்.ஏ.க்கள்? எல்லா இடத்திலும் நம் தலை முடியில், நகத்தில், தோலில், உடம்பில் ஒவ்வொரு செல்லிலும் இருக்கின்றன.

இதில் ஆச்சரியம் என்னவென்றால், நம் ஒவ்வொருவரின் டி.என். ஏ.யும் தனித்துவமானவை. ஒருவருடையதைப் போல இன்னொருவருடையது இருக்காது. நம் கைரேகையைப் போல நம்முடைய அடையாளமே அதுதான்.

இந்த டி.என்.ஏ. யின் முக்கிய வேலையே தகவல்களை நீண்ட காலத்திற்குச் சேமித்து வைத்துக்கொள்வதுதான். பாரம்பரிய மாகத் தகவல்களைச் சேமித்து வைத்துக் கொள்ளும் பகுதியை ஜீன் என்று சொல்கிறோம் டி.என்.ஏ. யின் வேறு பகுதிகள் செல்களை அமைக்கும் தகவல்களைக் கொண்டிருக்கின்றன.

### செல்கள் என்றால்?

உயிரினங்களின் அடிப்படையான அமைப்பு இதுதான். பல செங்கற்கள் சேர்ந்து ஒரு சுவராகிறது. பல சுவர்கள் சேர்ந்து அறைகளாகின்றன, அறைகள் சேர்ந்து வீடாகிறது அல்லவா. அதுபோல செல்கள் சேர்ந்து திசுக்கள் ஆகின்றன, திசுக்கள் சேர்ந்து உறுப்புகள் ஆகின்றன. உறுப்புகள் சேர்ந்து ஒரு சிஸ்டம் ஆகின்றன. பல சிஸ்டம்கள் கொண்டது நம் உடம்பு.

இப்போது அமெரிக்க விஞ்ஞானிகள் பலவேறு ஆராய்ச்சிகளுக்குப் பிறகு, செயற்கையாக ஒரு செல்லை உருவாக்கியுள்ளார்கள். அதாவது, உயிரினங்களின் ஆதாரமான ஒன்றை உருவாக்கி விட்டார்கள்.

அப்படியானால், செயற்கையாக ஒரு மனிதனைத் தயாரித்து விட முடியுமா? இன்று முடியாது. ஒரு மனிதனை மட்டுமல்ல, ஒரு குருவியை, கன்றுக்குட்டியைக் கூட இன்று தயாரித்துவிட முடியாது. காரணம், மனிதர்கள் பலவித செல்களால் ஆனவர்கள். (மனித உடலில் 100 ட்ரில்லியன் செல்கள் இருக்கின்றன (அதாவது 10க்குப் பின் 14 சைபர்கள்). ஒவ்வொரு செல்லுக்குள்ளும் பலவிதமான டி.என்.ஏ. அமைப்புகள் கொண்டவர்கள். அவற்றில் பொதிந்து வைக்கப்பட்டிருக்கும் தகவல்கள் எக்கச்சக்கமானவை.

அதனால், இன்று செயற்கை மனிதனைத் தயாரிப்பது சிரமமானது. ஆனால், இன்று சிரமமானது எதுவும் நாளை சாத்தியமாகலாம். மனிதன் நிலவில் கால் வைக்க முடியும் என்பதை நம் தாத்தாக்களின் அப்பா நினைத்துப் பார்த்திருப்பாரா? - மாலன்



# கூடங்குளம் அணுமின் நிலையம் கதிர்வீச்சு அபாயம் எதுவுமில்லை

## முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் அறிவிப்பு

(சென்னை)

கூடங்குளம் அணுமின் நிலையத்தை முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் நேற்றுமுன்தினம் நேரில் சென்று பார்வையிட்டார். அதைத் தொடர்ந்து அப்துல்கலாம அளித்துள்ள பேட்டியில், கூடங்குளம் அணுமின் நிலையம் மிகவும் பாதுகாப்பானது. இந்தப் பகுதியில் உள்ள பொதுமக்கள் எந்த வகையிலும் பயப்பட வேண்டியதில்லை. நவீன தொழில்நுட்பத்தில் இந்த அணுமின் நிலையம் உருவாக்கப்பட்டுள்ளதால் கதிர்வீச்சு அபாயம் என்ற பேச்சுக்கே இடமில்லை.

இது குறித்து தீவிர ஆய்வு செய்த பிறகே இதைச் சொல்கிறேன். அணுக் கழிவு 25 சத வீதம்தான் வரும். அதுவும் கதிர்வீச்சு அகற்றப்பட்டு பூமிக்கு அடியில் வைக்கப்படும். கடலில் கதிர்வீச்சு இலலாத தண்ணீர்தான் கலக்கும். இதனால் கடல் வாழ் உயிரினங்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது.

கூடங்குளம் அணுமின் நிலையம், 6 ரிக்டர் அளவு பூமி அதிர்ச்சியை தாங்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுளளது. புயல், சுனாமியாலும் எந்தப் பாதிப்பும் ஏற்படாது. ஏதாவது பிரச்சினை ஏற்பட்டாலும் இந்த அணு உலை தானாகவே கதிர்வீச்சைத் தடுக்கும் நவீன தொழில்நுட்பம் கொண்டது. இந்த அணுமின் நிலையத்தால் கூடங்குளம் பகுதி வளம்பெறும். இதைத் தடுக்க முயற்சி செய்வது சரியல்ல என்று அப்துல்கலாம் கூறியுள்ளார்.

அப்துல்கலாம் இது பற்றி வெளியிட்டுள்ள கட்டுரையில், கூடங்குளம் அணுமின் நிலையம் தொடர்பாக பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள ஒவ்வொரு சந்தேகத்துக்கும் பதில் அளித்துள்ளார். அதில் இந்த அணுமின் உலை எந்த அளவு பாதுகாப்பானது என்பதற்கு விரிவான விளக்கம் கொடுத்துள்ளார்.

எந்த ஒரு விடயத்திலும் நன்மை-தீமை, சாதகம்-பாதகம் என்று இரண்டும் உண்டு. இதில் நன்மையானவற்றையும், நாட்டின் வளர்ச்சிக்கு சாதகமானவற்றையும் எடுத்துக் கொண்டு முன்னேற வேண்டும. அப்போதுதான் மற்ற நாடுகளைவிட நமது நாடு வேகமாக முன்னேற முடியும். 2020 இல் வளர்ந்த நாடாக முடியும்.

தனி நபரின் நலனைவிட நாட்டின் நலன்தான் முக்கியம். நாட்டின் வளர்ச்சிக்கு மின்சார உற்பத்தி அவசியம். அணு மின்சாரம்தான் தூய்மையானது. மற்ற வகையில் உற்பத்தி செய்யும் மின்சாரத்தைவிட மிகக் குறைந்த செலவில் உற்பத்தி செய்யப்படுகிறது.

கல்லணை உடைந்தால் ஆபத்து என்று நினைத்து இருந்தால் கரிகால சோழன் காவிரி குறுக்கே அணை கட்டி இருக்க மாட்டான். எனவே நல்லதை மட்டுமே நினைத்துச் செயற்பட வேண்டும் என அவர் கூறியுள்ளார். அவரது கருத்துக்கு ஆதரவு பெருகியுள்ளது.

# ஊழல் மலிந்த ஆட்சி பா.ஜ.தலைவர் குமுறல்



(புதுடில்லி)

நாட்டில் ஊழலும், பணவீக்கமும் அதிகரித்ததற்கு காங்கிரஸ் கட்சிதான் காரணம் என்றும் நேர்மையான பிரதமர் என்று கூறப்படும் மன்மோகன் சிங் அதைத் தடுகக தவறிவிட்டார் என பா.ஜ. தலைவர் நிதின் கட்கரி குற்றஞ் சாட்டியுள்ளார். பஞ்சாப் மாநிலம் லூதியானாவில் நடந்த பா.ஜ. தொண்டர்கள் கூட்டத்தில் பேசிய போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஊழலும், பணவீக்கமும் காங்கிரஸ் என்ற தாய் பெற்ற இரட்டைக் குழந்தைகள். அவைகள் நாட்டின் சமூகக் கட்டமைப்பை முற்றிலும் அழித்துவிட்டன. பிரதமர் மனமோகன் சிங்கை நேர்மையானவர் சிறந்த பொருளாதார நிபுணர் என கூறுகின்றனர். ஆனால் அவரது ஆட்சியில்தான் ஊழல், பணவீக்கம், வேலையின்மை ஆகியவை உச்சத்தை எட்டியுள்ளன. ஊழல் அதிகரித்ததற்கு காங்கிரசே காரணம்.

கிட்டத்தட்ட எல்லா மாநிலங்களிலும் காங்கிரஸ் கட்சியின் நிலை மோசமாகவுள்ளது. அடுத்த மக்களவைத் தேர்தலில் தே.ஜ.கூட்டணி ஆட்சிக்கு வரும். பஞ்சாப் மாநிலத்தின் அகாலிரூபா.ஜ கூட்டணி அரசு சிறப்பாகச் செயற்படுகிறது. இந்தக் கூட்டணி பீகாரில் கிடைத்த தேர்தல் முடிவை, பஞ்சாபில் ஏற்படுத்தும் என அவர் மேலும தெரிவித்தார்.

## இந்தியச் செய்திகள்

# கூடங்குளப் போராட்டம் வெளிநாட்டுச் சதித்திட்டம்

(மதுரை)

கூடங்குளம் அணு மின் நிலைய உற்பத்திக்கு எதிரான போராட்டங் களின் பின்னணியில் உள்நாட்டு, வெளிநாட்டு சதி உண்டு, என காங்கிரஸ் மாநில செயலாளர் இதயதுல்லா கூறினார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,

அணு விஞ்ஞான, உயர் தொழில் நுட்பத்தில் முன்னணியில் உள்ள இந்தியாவை முடக்கவும், விஞ்ஞானிகளை வெளிநாடுகளுக்கு அழைக்கவும், அந்நாடுகள் செய்யும் சதி இது.

தகவல் தொழில் நுட்பத்துறையில் முன்னேறும் தமிழகத்தை தடுக்க, சில மாநில உள்நாட்டுச் சதிகளும் உண்டு. கூடங்குளம் அணுமின் நிலையத்தில் உற்பத்தி தொடங்கினால் வெளிநாடு நாடுகள் இந்தியாவைத் தேடிவரும் என்றார்.

# வசூல் குவிக்கிறது "வேலாயுதம்" ஏழாம் அறிவு பின்தள்ளப்பட்டது




(சென்னை)

வேலாயுதம் படத்தின் வெளிநாட்டு உரிமையை ஐங்கரன் நிறுவனம் வாங்கி படத்தை பிரித்தானியாவில் வெளியிட்டுள்ளது.

இளையதளபதி விஜய், ஹன்சிகா, ஜெனிலியா நடிப்பில் வெளிவந்த படம் வேலாயுதம். இப்படத்தை ஜெயம் ராஜா இயக்க, ஒஸ்கார் ரவிச்சந்திரன் தயாரித்து இருந்தார்.

இப்படம் தீபாவளி தினத்தன்று வெளியாகி மக்களிடையே வரவேற்பைப் பெற்று இருக்கிறது.

முதல் வாரத்தை விட இரண்டாம் வாரத்தில் அதிக திரையரங்குகளில் வெளியாகி இருப்பதால், அந்த சந்தோசத்தைக் கொண்டாட படக்குழுவினருக்கு தனது வீட்டில் விருந்தளித்தார் விஜய்.

வேலாயுதம் படத்தின் வெளிநாட்டு உரிமையை ஐங்கரன் நிறுவனம் வாங்கியிருப்பதால் இரசிகர்களும், படக்குழுவினர்களும மிகுந்த உற்சாகத்துடன் காணப்படுகின்றனர். பிரித்தானியாவில் வேலாயு தம் 17 திரையரங்குகளில் வெளியிடப்பட்டு (ஒக்டோபர் 26-30 வரை) ரூ.1.03 கோடி வசூலித்து உள்ளது. அதே நேரம் ஏழாம் அறிவு திரைப்படம் 19 திரையரங்குகளில் வெளியிடப்பட்டு (ஒக்டோபர் 26-30 வரை) 85.77 இலட்சம் ரூபாய் மட்டுமே வசூல் செய்துள்ளது.

வேலாயுதம் படத்தின் இந்த வெற்றியால் சந்தோசத்தில் இருக்கும் விஜய், அடுத்ததாக சங்கர் இயக்கத்தில் வெளிவர இருக்கும் நண்பன் படத்தினையும் மிகவும் எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்.

வேலாயுதம் படத்தின் இந்த வெற்றியால் மீண்டும் விஜய்- ஜெயம் ராஜா கூட்டணி சேர வாய்ப்புள்ளது என்று கொலிவுட் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# கள்ள நோட்டைக் கண்டறிய புதிய மென்பொருள் அறிமுகம்

(சென்னை)

நாட்டில் புழங்கும் கள்ள நோட்டுகளைக் கட்டுப்படுத்த, மத்திய தடயவியல் அறிவியல் துறை புதிய உத்தியைக் கண்டுபிடித்துள்ளது.

இதன்படி புதிய மென்பொருள் மூலம் கள்ள நோட்டை அச்சடித்ததன் மூலாதாரத்தைக் கண்டுபிடிக்க முடியும். இதன்மூலம் கள்ள நோட்டை அச்சடித்த நாடு எது என்பதையும், அச்சடித்த இயந்திரத்தையும் அறிய முடியும் என்று மத்திய தடயவியல் துறையின் இயக்குநர் ராஜேந்திர சிங் தெரிவித்தார்.

இந்தத் தொழில்நுட்பம் ஏற்கெனவே இண்டர்போல் அமைப்பினரால் பரிசோதித்துப் பார்க்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். மேலும் இந்தியாவில் இது பயன்பாட்டுக்கு வர சிறிது காலம் ஆகலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

இப்போதுள்ள தொழில்நுட்பத்தின் மூலம் நோட்டுகளின் உண்மைத்தன்மையை மட்டுமே சோதிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

கள்ள நோட்டுகளின் புழக்கம் குறித்துக் கருத்துத் தெரிவித்த தேசிய புலனாய்வு அமைப்பின் அதிகாரி ஒருவர், கள்ள நோட்டுகளின் புழக்கத்தை முற்றிலுமாக ஒழிப்பதென்பது கடினமென்றும், தீவிரவாதிகள் ஒரு நாட்டின் பொருளாதாரச் சமநிலையை சீர்குலைக்க கள்ள நோட்டுகளையே பயன்படுத்துகின்றனர் என்று குறிப்பிட்டார்.

தீவிரவாதிகளால் கள்ள நோட்டு பயன்படுத்துவது தொடர்பான வழக்குகளை தேசிய புலனாய்வு அமைப்பே கையாள்கிறது. கள்ள நோட்டு தொடர்பான ஏனைய வழக்குகள் சி.பி.ஐ.யாலும், உள்ளூர் பொலிஸாராலும் புலனாய்வு செய்யப்படுகிறது.

தேசிய குற்றப் பதிவு ஆவணங்களின் அடிப்படையில், கடந்த வருடம்வரை பதியப்பட்ட 2,589 வழக்குகளில் இதுவரை 37.9 சதவீத வழக்குகள் மட்டும் முடிக்கப்பட்டு தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளன.

கள்ள நோட்டுகளின் புழக்கத்தைக் கட்டுப்படுத்த ரிசர்வ் வங்கி பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வந்தாலும், கள்ள நோட்டுகளின் புழக்கம் ஏதேனும் ஒரு வகையில் இருந்துகொண்டேதான் உள்ளது.

# ஊழலுக்கு எதிரான நடவடிக்கையில் புத்திசாலித்தனமாக இருக்க வேண்டும்

## பொருளாதார வல்லுநர் ஆலோசனை

(சென்னை)

ஊழலுக்கு எதிரான நடவடிக்கை எடுக்கும்போது புத்திசாலித்தனமாக இருக்க வேண்டும் என்று முதன்மைப் பொருளாதார ஆலோசகர் கொசிக் பாசு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது, ஊழல் தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கை அரசின் முக்கிய முடிவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

அது அனைவர் மீதும் பொதுப்படையான சந்தேகத்தை ஏற்படுத்திவிடும். நாட்டில் சிறந்த முடிவுகளை எடுப்பவர்களகூட, எங்கே தங்கள் மீது குற்றஞ்சாட்டப்படுமோ என்று பயந்து, முடிவுகளை எடுக்காமல் தள்ளிப போட வாய்ப்புள்ளது.

ஊழல் என்ற புற்றுநோயை அகற்றுவது அவசியம். அறுவைச் சிகிச்சை செய்வதற்கு தேர்ந்த மருத்துவ அறிவு எவ்வளவு அவசியமோ, அதைப் போல ஊழலை எதிர்க்க பொருளாதார மற்றும் சட்டத் தொழில் ரீதியான அறிவு தேவை. ஊழலை எதிர்க்க மன உறுதி மட்டுமே போதுமானதல்ல என்றார் கொசிக் பாசு.

சமீபத்தில் முடிவடைந்த ஜி-20 நாடுகளின் மாநாட்டில், ஊழலுக்கு எதிராக உறுதியான நடவடிக்கையை மேற்கொள்வது தொழில் மற்றும் வியாபார நடவடிக்கைகளில் வெளிப்படைத்தன்மையை ஏற்படுத்தி ஊழலற்ற நிலையை அடைவது குறித்து விவாதிக்கப்பட்டது.

இந்தியாவிலும், ஊழல் மற்றும் கறுப்புப் பணத்தை எதிர்கொள்வதில் மத்திய அரசு போதிய கவனம் செலுத்தவில்லை என்று எதிர்க்கட்சிகளும் பல்வேறு அமைப்புகளும் குற்றஞ்சாட்டி வருகின்றன. இந்த நிலையில் கொசிக் பாசு இக்கருத்தைத் தெரிவித்துள்ளார்.

# உலக அழகியாக வெனிசுலா அழகி தெரிவு



61ஆவது உலக அழகிப் போட்டி இங்கிலாந்து தலைநகர் லண்டனில் நடந்தது. அதில், 113 நாடுகளைச் சேர்ந்த அழகிகள் கலந்து கொண்டனர். இவர்களுக்கு பல சுற்றுகளாக போட்டிகள் நடத்தப்பட்டன. அரை இறுதிப் போட்டியில் இந்தோனேசியா, கொரியா, இத்தாலி, சுவீடன், சிம்பாப்வே, இங்கிலாந்து, கஜகஸ்தான், உக்ரைன், வெனிசுலா, பிலிப்பைன்ஸ், அமெரிக்கா, ஸ்பெயின், பெர்டோ ரிகோ, தென் ஆபிரிக்கா, ஸ்கொட்லாந்து ஆகிய 15 நாடுகளைச் சேர்ந்த அழகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அதைத் தொடர்ந்து இறுதிச் சுற்றுப் போட்டிக்கான தேர்வு நடைபெற்றது. அதில் கொரியா, வெனிசுலா, இங்கிலாந்து, பிலிப்பைன்ஸ், பெர்டோரிகா, தென் ஆபிரிக்கா, ஸ்கொட்லாந்து ஆகிய 7 நாடுகளின் அழகிகள் தேர்வானார்கள்.

இதையடுத்து இறுதிப் போட்டி நடந்தது. அப்போது அழகிகளிடம் நடுவர்கள் கேள்விகள் கேட்டனர். அதில், சிறப்பாக பதில் அளித்த 22 வயது வெனிசுலா அழகி இவியான் சார்கோஸ் 2011ஆம் ஆண்டுக்கான உலக அழகியாகத் தேர்வு செய்யப்பட்டார்.


இதை மேடையில் அறிவித்ததும் அவர் சார்கோஸ் தனது கைகளால் முகத்தை மறைத்தபடி ஆனந்தக் கண்ணீர் வடித்தார். அவருக்கு கடந்த ஆண்டு (2010) உலக அழகிப் பட்டம் வென்ற அமெரிக்காவை சேர்ந்த அலெக்சான்ட்ரியா மில்ஸ் கிரீடம் சூட்டினார்.

உலக அழகிப் போட்டியில் 2ஆவது இடத்தை பிலிப்பைன்ஸ் அழகி குவெண்டோலின் ருயெல் பெற்றார். பெர்டோ ரிகோவை சேர்ந்த அழகி அமண்டா பெர்ஷசுக்கு 3ஆவது இடம் கிடைத்தது.

# ஈரானிடம் அணு ஆயுதம் மீண்டும் வலுக்கிறது நெருக்கடி

வியன்னா:ஐ.நா.,வின் சர்வதேச அணுசக்தி ஏஜன்சி (ஐ.ஏ.இ.ஏ.,), இன்னும் ஓரிரு நாட்களில், ஈரான் அணு ஆயுதங்கள் தயாரித்து வருவதற்கான ஆதாரபூர்வ அறிக்கையைத் தாக்கல் செய்ய உள்ளது. "அவர்கள் அறிக்கையை வெளியிட்டும் அதன்பின் என்ன நடக்கும் என்பதை நாம் பார்ப்போம்" என, ஈரான் தெரிவித்துள்ளது. இதற்கிடையில், ஈரான் மீதான இராணுவ நடவடிக்கைக்கு பெரும்பாலும் சாத்தியம் இருப்பதாக இஸ்ரேல் அதிபர் மிரட்டியுள்ளார். மத்திய கிழக்கு நாடுகளில் மிக முக்கியமான நாடான ஈரான், அணு ஆயுதங்கள் தயாரித்து வருவதாக, அமெரிக்காவும் மேற்குலக நாடுகளும் தொடர்ந்து குற்றஞ் சாட்டி வருகின்றன.

ஈரானும் அதை மறுத்து வருகிறது.கடந்த செப்டெம்பரில் இதுகுறித்து பேசிய ஐ.ஏ.இ.ஏ., தலைவர் யுகியா அமனோ, "ஈரான் இராணுவ ரீதியிலான அணுசக்தி நடவடிக்கைக்களை மேற்கொண்டு வருவது கவலையளிக்கிறது" என்றார்.இதையடுத்து, அமெரிக்காவும் மேற்குலகும், ஈரான் மீது புதிய பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டும் என, ஐ.நா.,வுக்கு நெருக்கடி கொடுத்தன. இதனால், ஈரானின் அணு ஆயுதத் தயாரிப்பு குறித்த அறிக்கையை விரைவில் வெளியிடப் போவதாக ஐ.ஏ.இ.ஏ., அறிவித்தது.




இந்நிலையில், ஆஸ்திரியா தலைநகர் வியன்னாவில் நாளை நடக்க உள்ள உறுப்பு நாடுகளின் காலாண்டுக் கூட்டத்தில், ஈரானின் அணு ஆயுதத்தயாரிப்பு குறித்த ஐ.ஏ.இ.ஏ.,யின் அறிக்கை வெளியிடப்பட உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.ஆனால், "ஐ.ஏ.இ.ஏ.,யின் இந்த முயற்சி, பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கக் கூடிய ஈரான் அணு ஆயுதத் தயாரிப்பு விவகாரத்தை மேலும் சிக்கலாக்கிவிடும் அதைத் தொடர்ந்து ஐ.நா., ஈரான் மீது கடுமையான தடைகளை விதிக்க நேரிடும்" என ரஷ்யாவும், சீனாவும் கவலை தெரிவித்துள்ளன. இதனால், ஐ.ஏ.இ.ஏ., அறிக்கை வெளியீட்டுக்கு அவை எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

## கடலில் மூழ்கி யது கப்பல் ஆறு இந்தியர்கள் பலி

ஓமானின் தென் கடற்பரப்பில் இந்தியக் கப்பலொன்று மூழ்கியதில் அதிலிருந்த ஆறு இந்தியர்கள் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை மேலும் ஒன்பது பேர் இந்த அனர்த்தத்தில் காணாமல் போயுள்ளதுடன், ஆறு பேர் ஓமானிய கடற்பாதுகாப்பு பிரிவினரால் காப்பாற்றப்பட்டுள்ளனர்.இதேவேளை காணாமல் போனவர்களை மீட்கும் பணிகளில் கடற்படைக் கப்பலொன்று ஈடு படுத்தப்பட்டுள்ளதாக வளைகுடாச் செய்திகள் குறிப்பிட்டுள்ளன.

## எகிப்தில் விபத்து 11 பேர் மரணம்

எகிப்தின் தலைநகர் கைய்ரோவின் தென் கிழக்குப் பிராந்தியத்தில் பேருந்து ஒன்று விபத்துக்குள்ளானதில் 11 ஹங்கேரிய சுற்றுலாப் பயணிகள் உயிரிழந்துள்ளனர்.

ஹுர்கடா பகுதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் நான்கு சிறுவர்கள் உட்பட மேலும் 27 ஹங்கேரிய சுற்றுலாப் பயணிகள் காயமடைந்துள்ளதாக எகிப்தின் அரச ஊடகம் தெரிவித்துள்ளது.

வளைவான வீதியில் வேகமாக செலுத்தப்பட்ட பேருந்து கட்டுப்பாட்டினை இழந்ததால் இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

# தேசிய அரசாங்கம் அமைக்க கிரேக்க எதிர்க்கட்சிகள் இணக்கம்

கிரேக்க பிரதமர் பெபென்ரோ இல்லாத புதிய தேசிய ஒற்றுமை அரசாங்கமொன்றை அமைப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

தலைநகர் ஏதென்ஸ்சில் நடைபெற்ற கடன் நெருக்கடி தொடர்பான பேச்சுவார்த்தையில், இதற்கான இணக்கம் காணப்பட்டதாக அந்த நாட்டு ஜனாதிபதி அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

ஜனாதிபதி கரோலஸ் பப்புலியாசினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் பேச்சுவார்த்தையில் பிரதமர் பெபென்ரோ மற்றும் பிரதான எதிர்க்கட்சி தலைவர் அன்ரோனிஸ் சமராஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கடந்த சில வாரங்களாக நிலவும் கிரேக்க கடன நெருக்கடி தொடர்பான குழப்பங்களைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இந்த நிலையில் அமைக்கப்படவுள்ள புதிய கூட்டணி அரசாங்கத்தில் அனைத்துக் கட்சிகளும் இணைய வேண்டுமெனவும் ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

தேசிய ஒற்றுமையுள்ள அரசாங்கத்தை பிரதமர் ஜோர்ஜ் பெபென்ரோ நிறுவ முயற்சித்த போதிலும், அவர் கட்டாயம் பதவி விலக வேண்டுமென பிரதான எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்தியிருந்தார்.

பெபென்ரோ பதவி விலகிய பின்னரே கூட்டணி அரசாங்கம் தொடர்பான பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ள முடியும் எனவும் அனடோனிஸ் சமராஸ் குறிப்பிட்டிருந்தார்.

தேர்தலொன்றை உடனடியாக நடத்த வேண்டுமென சமராஸ் கூறியுள்ள போதிலும், தேர்தலை தாமதப்படுத்த வேண்டுமென பெபென்ரோ தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் புதிய கூட்டணி அரசாங்கத்திற்கு நிதி அமைச்சர் இவன்ஜீலோஸ் வொனிசிலோஸ் தலைமை தாங்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# பதிவிறக்கப் பெட்டகம்

அறிவு மற்றும் அனுபவம் இரண்டின் மூலமாக ஓர் இறுதியான பிரபஞ்ச உண்மையைக் காண முயல்வதே நவீனத்துவம். ஆனால் இப்படிப்பட்ட ஒற்றைப் பார்வையால் (monolithic) இந்த உலகின் துண்டு துண்டுகளாய் சிதறுண்டு இருக்கும் கலாசாரப் பகுதிகளைப் புரிந்துகொள்ள இயலாது என்கிறது பின்நவீனத்துவம். யதார்த்தம் அல்லது உண்மை என்பது எல்லா இடத்துக்கும் எல்லாக் காலத்துக்கும் ஒன்றாக இருப்பதில்லை. காரணம், இது பல்வேறு பாவனைகளால், பாவனைத் தோற்றங்களின் (simulacrum) முடிவுறாத படையெடுப்பால் வீழ்த்தப்படுகிறது. யதார்த்தம் என்பது hyper reality ஆக மாறுகிறது. Simulations என்ற நூலில் ழான் பொத்ரியார் விளக்கியிருப்பதன் சுருக்கம் இதுதான். – **சாரு நிவேதிதா**

இதுவரைக்குமான தத்துவங்கள் அளித்துவந்த மீட்பு, விடுதலை, மேலான உலகம் என்ற நம்பிக்கைகள் கொடூரமான முறையில் தகர்ந்து போன நிலையில் உண்மைகளை, சுதந்திரத்தை தர்க்கபூர்வமாக நிறுவுவதாக வந்த நவீனத்துவமானது உயர்தொழில்நுட்பமாகவும் ஆதிக்க உத்தியாகவும் மாறி நின்றபோது ஏற்பட்ட பிரம்மைக் கலைப்பு பின்நவீனத்துவத்தின் முக்கியமான உடைப்பு.

ஒவ்வொரு மனிதரின் இருப்பும் செயலும் அவருக்குத் தெரிந்தோ தெரியாமலோ வேறு சிலரின் இருப்பையும் நிகழ்வையும் நசுக்குவதாக மாறிவிட்ட கொடூரங்களின் வலைப்பின்னல். எவரொருவரின் கொடூரமும் எங்கு ஆரம்பித்து எந்த வழி நகர்ந்து எங்கு முடிகிறது என்பது அறியப்படாத அளவுக்கு நுண்மையான அழிவமைப்பு உருவாகிவிட்டது. இந்த அழிவுக்கூறு எந்தத் தனி உடலாலும் தன் மூலம் பாயாமல் நிறுத்தக் கூடியதாக இல்லை. வெறுமையாக ஒரு வரலாற்று, கலாசார உலகப் பரப்பில் பிறந்துவிட்டதனாலேயே இந்தக் கொடூரங்கள், வன்முறைகள் அனைத்தாலும் நசுக்கப்படுவதும், அவற்றை வேறு பலர்மீது செலுத்துவதுமான பயங்கரம் ஏன்? இவை எல்லாம் மொழிக்குள் வரியாகி, மொழியால் தீர்க்கப்பட முடியாதவை. அதேசமயம் மொழியால் பெருக்கப்படுபவையும் கூட.
– **பிரேம் : ரமேஷ்**

நவீன சிந்தனை முகம் கொடுக்க முடியாத கேள்விகளுக்கான பதிலை பழைய மரபிலிருந்து எடுத்துவருகிறது பின்நவீனத்துவம். ஆனால் பழைமையை அது அப்படியே முன்வைப்பதில்லை. அதனால் வைக்கப்படுவது புதிதாக வடித்தெடுக்கப்பட்ட மரபு ஆகும். இந்த வகையில்தான் எதிர்நவீனத்துவத்திலிருந்து பின்நவீனத்துவம் வேறுபடுகிறது. – **ரவிக்குமார்**

கேள்விக்கு உள்ளாக்குதல் என்பது ஒரு விஷயத்தை நிராகரிப்பது அல்ல. அதாவது பின்நவீனத்துவவாதி என்பவன் தன் முன்னோர்களை நிராகரிக்க மாட்டான். அதேசமயம் அவர்களைப் பின்பற்ற மாட்டான். – **எம்.ஜி. சுரேஷ்**

பின்நவீனத்துவம்: மற்ற சித்தாந்தங்களைப் போல இது சூத்திரம் போன்ற இலக்கண வரையறைக்குள் வருவதில்லை. இந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கையில் பின்நவீனத்துவம் அறிவார்ந்த, திறந்த சிந்தனைப் போக்கு. படைப்பாக்க சுதந்திரம் தன்கலாசாரத் தனித்தன்மைக்கு அழுத்தம், அர்த்தத்தை மரபுசார்ந்த விளக்கங்களிலிருந்து விடுவிக்கும் விழைவு, ஏற்கனவே நிறுவப்பட்ட கருதுகோள்களை மறுபரிசீலனை செய்யும்படி கேள்வி எழுப்புதல், இலக்கியப் படைப்பு இன்னபடிதான் இருக்க வேண்டும் என்று கிழிக்கப்பட்ட கோட்டை மீறுதல், வியூக அமைப்பு அரசியல் சார்ந்ததாயினும் இலக்கியம் சார்ந்ததாயினும் சரி அதை நிராகரித்தல், வேண்டுமென்றே உதாசீனம் செய்து எழும்ப விடாமல் அமுக்கி வைக்கப்பட்ட அர்த்தத்தை எடுத்துக் காட்டுவதில் முனைப்பு. இவையெல்லாம் பின்நவீனத்துவத்தின் சிறப்புத் தன்மைகளாகும். இன்னொரு விதமாகக் கூறினால், பின்நவீனத்துவம் பன்முகத்தன்மையின் தரிசனம். இது கலாசாரத்தின் பல்திறத் தன்மை, வட்டாரத் தன்மை மற்றும் அர்த்தத்தின் வேறாம் தன்மைக்கு (the other) முதன்மை தருகிறது. அத்தோடு அர்த்தத்தின் வேறாம் தன்மையில் வாசகனின் பங்கினையும் எடுத்துக் காட்டுகிறது. – **எம்.ஜி. சுரேஷ்**

பின்நவீனத்துவம் என்பது விளிம்புநிலைப் பிரக்ஞையின் தன்–அடையாள அரசியல் என்றும் சொல்லலாம். – **நாகார்ஜுனன்**

ஒரு எழுத்தாளன் ஒரு எழுத்தை உருவாக்குகிறான். அதாவது சிந்தனையை அவன் உங்களுக்கு வழங்குகிறான். வாசகன் வாங்கிக்கொள்கிறான். கொடுத்தல் வாங்கல் முறைதான். அதாவது ஒரு முக்கோண அமைப்பில் வாசகன் கீழிருந்து மேல் ஏறுவான் அங்கே எழுத்தாளன் பிரசாதம் வழங்குவான். அதை வாங்கிக்கொண்டு அடுத்த வழியே இறங்கிவிடுகிறான். இதுதான் உறவு நிலை. அதாவது திறந்த நிலை எழுத்து என்பதும் பின் நவீனத்துவம் என்பதும் இதுதான். இதுதான் முடிவு இதுதான் ஆரம்பம் என்பது இன்றி அந்தக் கதையின் குறுக்கு வெட்டுத்தோற்றத்தை உருவாக்குவதுதான் பின் நவீனத்துவம். இதுதான் வரும் காலத்துக்கான எழுத்து. இது என் அனுபவங்கள் கிடையாது. இது என் சுய சரிதம் கிடையாது. – **சாரு நிவேதிதா**

# அமெரிக்காவில் கம்யூனிசம்!
# புதியதோர் உலகம் செய்வோம்...

- ஞாநி




கடந்த ஓராண்டில் துனீஷியா, எகிப்து, லிபியா என்று வெவ்வேறு நாடுகளில மக்கள் திரளாகக் கூடி ஆட்சியாளர்களுக்கு எதிராகப் போராட்டம் நடத்திய போது அமெரிக்க அரசு அதை 'ஆஹா வென்று எழுந்தது பார் யுகப்புரட்சி' என்று வரவேற்றது. ஜனநாயகத்தை உருவாக்குவதற்கும் சர்வாதிகாரத்தை எதிர்த்தும் நடக்கும் இந்தப் போராட்டங்களுக்கெல்லாம் தன் ஆதரவு உண்டு என்று அறிவித்தது.

இப்போது போராட்டம் அமெரிக்காவிலேயே ஆரம்பமாகிவிட்டது. ஒரே ஒரு வித்தியாசம்தான்." போராட்டம் உண்மையான ஜனநாயகம் வேண்டும் என்பதற்காகத்தான். குறிப்பிட்ட ஆட்சியாளர்களை எதிர்த்து அல்ல. யார் ஆட்சிக்கு வந்தாலும் அவர்களை ஆட்டிவைக்கும் பெரும் பணக்காரர்களுக்கெதிராக இந்தப் போராட்டம் தொடங்கியிருக்கிறது. அமெரிக்கப் பொருளாதாரத்தையும் உலகப் பொருளாதாரத்தையும் கட்டுப்படுத்தும் நிதி நிறுவனங்கள், வங்கிகள், பன்னாட்டு நிறுவங்கள் முதலியவற்றின் தலைமை அலுவலகங்கள் இருக்கும் இடம் அமெரிக்காவின் நியூயோர்க் நகரின் வோல் ஸ்ட்ரீட். இதில் குடியேறுவோம் என்ற முழக்கத்துடன் செப்டெம்பர் 17ஆம் திகதி தொடங்கிய போராட்டம் இப்போது பரவி அமெரிக்காவிலேயே இன்னும் 70 நகரங்களில் நடக்கிறது. உலகம் முழுவதும் சுமார் 800 நகரங்களில் நடக்கிறது.

> உலகத்தின் ௯௯ சதவிகித மக்களை சுரண்டிக் கொண்டு ஒரு சதவிகிதப் பணக்காரர்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்கு சாதகமாகவே அரசாங்கங்கள் செயல்படுகின்றன. அவர்கள் தான் அரசாங்கங்களையே திரைமறைவில் நடத்துகிறார்கள். இந்தக் கருத்துகள் எல்லாம் கம்யூனிஸ்ட்கள் பல காலமாக சொல்லிவருபவைதான். ஆனால் முதன்முறையாக கம்யூனிஸ்ட் அல்லாத பொதுமக்கள் உலக முதலாளித்துவத்தின் தலைநகரமான அமெரிக்காவில் இதே கருத்துகளைச் சொல்லிக் கொண்டு தெருவுக்கு வந்திருக்கிறார்கள்.

வோல் ஸ்ட்ரீட்டில் உள்ள சக்கோட்டி பார்க் எனப்படும் விடுதலை சதுக்கப் பூங்கா ஒரு தனியார் சொத்து. (தனியார் கைக்குச் சென்றதும் கம்பெனி தலைவர் சக்கோட்டியின் பெயரை வைத்துக் கொண்டார்கள்.) பொது உபயோகத்துக்குத் தருவோம் என்ற அடிப்படையில் நகராட்சியிடம் இருந்து தனியார் நிறுவனம் பெற்று நிர்வகிக்கும் இடம். உண்மையில் இது மரங்கள் சோலைகள் நிறைந்த பூங்கா அல்ல. சுற்றிலும் பிரம்மாண்டமான அலுவலகக் கட்டடங்கள் இருக்க, நடுவில் இருக்கும் திறந்தவெளி. மண் இல்லாமல் தரையும் இருக்கைகளும் போடப்பட்டு இளைப்பாறும் இடம். கட்டடங்கள் நடுவே இருக்கும் திறந்த வெளி மைதானம்.

பொருளாதாரத்தைக் குட்டிச் சுவராகியிருக்கும் இந்த வோல் ஸ்ட்ரீட் அலுவலகங்களில் மக்கள் குடியேறி அவற்றை மாற்றியமைத்தால்தான் பொருளாதாரத்தைக் காப்பாற்ற முடியும் என்ற முழக்கத்துடன் போராடடக்காரர்கள் செப்டெம்பர் 17ல் உள்ளே புகுந்தார்கள். ஒரு சில நாட்களில் வெளியேறிவிடுவார்கள் என்று அரசு நினைத்தது. ஆனால் இரு மாதங்களாகப் போராட்டம் வலுவாகிவிட்டது. இரவு பகலாக அங்கேயே தங்கியிருககிறார்கள். நன்கொடை வசூலித்து எல்லோருக்கும் உணவு தருகிறார்கள். சுற்றியிருக்கும் கடைகள், அலுவலகங்களின் கழிவறை குளியலறைகளை உபயோகிக்கிறார்கள். இதுவரை நன்கொடைகள் மூலம் போராட்டத்துக்கு 5 இலட்சம் டொலர்கள் வந்திருககின்றன.

போராட்டக்காரர்களின் கோரிக்கை என்ன? யார் தலைமையில் போராட்டம் நடக்கிறது?

நாங்கள்தான் இந்த சமூகத்தின் 99 சதவிகிதம் மக்கள். மீதி ஒரு சதவிகிதம் பேர் எங்கள் தலையில் ஏறி சவாரி செய்வதை நிறுத்துங்கள் என்பதுதான் கோரிக்கை. அமெரிக்க சமூகத்தின் செல்வம், சொத்து எல்லாம் வெறும் ஒரு சதவிகிதம் பேரிடமே குவிந்திருக்கிறது. அவர்களுக்குக் குறைவான வரி போடுவது, அவர்களுக்கு மேலும் மேலும் சலுகைகள் தருவது, அவர்களின் வியாபார நலன்களுக்காக அரசு ஒத்துழைப்பது, அவர்கள் திவாலானால், அரசு மானியம் கொடுத்துக் காப்பாற்றுவது எல்லாவற்றையும் நிறுத்துங்கள் என்பதுதான் போராட்டக்காரர்களின் கோரிக்கை.

கடந்த 30 வருடங்களில் ஒரு சதவிகித பணக்காரர்களின் வருமானம் 275 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. ஆனால் நடுத்தர வகுப்பினரின் வருமானம் வெறும் 40 சதவிகிதம்தான் அதிகரித்தது. சராசரி அமெரிக்கனின் வருமானம் 30 வருடங்களில் 900 டொலர் குறைந்திருக்கிறது. ஆனால் ஒரு சதவிகித பணக்கார அமெரிக்கனின் வருமானமோ ஏழு இலட்சம் டொலர் அதிகரித்திருக்கிறது. அமெரிக்காவின் பெரும் பணக்காரர்கள் 400 பேரின் வருமானம் மட்டும் 392 சதவிகிதம் கூடியிருக்கிறது. ஆனால் அவர்கள் கட்டும் வரியின்அளவு 37 சதவிகிதம் குறைந்திருக்கிறது.

அமெரிக்க மக்களை இப்படி தெருவுக்கு வந்து போராடத் தூண்டியது எது? புஷ் ஆட்சியின் கடைசிக்காலத்தில் வீட்டுக் கடன் கொடுத்து திவாலான வங்கிகளால் அமெரிக்க பொருளாதாரமே சீர்குலைந்தபோது, பாதிக்கப்பட்ட ஏழை நடுத்தர மக்கள் வீடிழந்தார்கள். ஆனால் திவாலான நிதி நிறுவன அதிகாரிகள் எல்லோரும் வருடந்தோறும் தங்கள் சம்பளங்களை மூன்று மடங்கு நான்கு மடங்கு என்று உயர்த்திக் கொண்டே போனார்கள். ஒபாமா ஆட்சிக்கு வந்ததும் பொருளாதாரம் சீராகும் என்ற எதிர்பார்ப்புகள் பொய்யாகிவிட்டன. இந்தப் பின்ன ணியில் தான் இப்போதைய போராட்டம் தொடங்கியது.

எந்த அரசாங்கம் வந்தாலும், யார் செனட், காங்கிரஸ் உறுப்பினராக ஆனாலும், கோப்பரேஷன்கள் எனப்படும் பிரமாண்டமான கம்பெனிகளுக்கு சாதகமாகவே சட்டங்களையும் அரசு திட்டங்களையும் கொள்கைகளையும் வளைப்பதை எதிர்த்தே இப்போதைய போராட்டம் நடக்கிறது. அமெரிக்காவின் வெவ்வேறு நகரங்களில் நூற்றுக கணக்கானவர்கள் இப்படி பூங்காவில் குடியேறும் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். போராட்டங்கள் எல்லாம் அமைதியான எதிர்ப்பாகவே நடத்தப்படுகின்றன. வன்முறை கூடவே கூடாது என்பதில் விழிப்போடு இருக்கிறார்கள். அதனாலேயே இவர்களைச் சமாளிப்பது அமெரிக்க அரசுக்கும் பொலிசுக்கும் சிக்கலாக இருக்கிறது. இப்போது நியூயோர்க்கில் கடும் குளிர் காலம். உறைபனி விழத்தொடங்கும் வேளை. போராட்டக்காரர்கள் கொண்டு வந்து இயக்கும் ஆறு டீசல் ஜெனரேட்டர்களை பொலிஸ் கைப்பற்றிவிட்டது. கூடாரங்கள் அமைக்க பொலிஸ அனுமதிக்காததினால், கெட்டியான கம்பளிப் பைகளுக்குள் உடலை நுழைத்துக் கொண்டு இரவில் போராடடக்காரர்கள் தூங்குகிறார்கள். தினசரி வருகை தரும் ஆதரவாளர்கள் கூட்டம் அதிகரித்து வருகிறது.

இந்த இயக்கத்துக்கென்று தனியே தலைமை இல்லை. போராட்டம் நடக்கும் ஒவ்வொரு நகரிலும் இரு தினங்களுக்கொரு முறை போராட்டக்காரர்கள் எல்லோரும் கூடும் பொது அசெம்பிளியை நடத்துகிறார்கள். அதில் முடிவுகள் எடுக்கப்படுகின்றன. பொறுப்புகள் ஒப்படைக்கப்படுகின்றன. இந்தப் போராடடங்களுக்கு ஆதரவு தெரிவித்து பல கலைஞர்கள், எழுத்தாளர்கள், திரைப்பட இயக்குநர்கள், கல்வியாளர்கள் அறிக்கை வெளியிட்டுள்ளனர். அறிஞர் நோம் சோம்ஸ்கி பெரும்பணம் அரசியலை தீர்மானிப்பதை மக்கள் எதிர்ப்பதை ஆதரித்திருக்கிறார். புஷ் அரசுக்கெதிரான பல ஆவணப் படங்களைத் தயாரித்த மைக்கேல் மூர ஒவ்வொரு ஊராகப் போய் போராட்ட பூங்காவில் பேசிவருகிறார். தன் படங்களை அங்கே போட்டுக் காட்டுகிறார். மேற்கத்திய நாடுகளில் போராட்டம் என்பது கோஷம் எழுப்புவது மட்டுமல்ல. அதை ஒரு திருவிழாவாகவே நடத்துவது வழக்கம். பாடல்கள், நடனங்கள், ஓவியக் கண்காட்சிகள் என்று போராட்ட களத்தில் எல்லாம் நடப்பது வழக்கம். இந்தப் போராடடமும் அப்படித்தான் நடக்கிறது. ஒவ்வொரு ஊரிலும் நூற்றுக் கணக்கானவர்கள் கைது செய்யப்படுகிறார்கள். ஆனாலும் போராட்டம் தொடர்கிறது. பல அமெரிக்க நகர்களில் போராடடக்காரர்களைக் கைது செய்யக் கூடாது என்றும் பூங்காவிலிருந்து வெளியேற்றக்கூடாது என்றும் நீதிமன்றங்களில் தடை வாங்கியிருக்கிறார்கள்.

> போராட்டங்கள் எல்லாம் அமைதியான எதிர்ப்பாகவே நடத்தப்படுகின்றன. வன்முறை கூடவே கூடாது என்பதில் போராடடக்காரர்கள் விழிப்போடு இருக்கிறார்கள். அதனாலேயே இவரகளை சமாளிப்பது அமெரிக்க அரசுக்கும் பொலிசுக்கும சிக்கலாக இருக் கிறது. துளி வன்முறை இருந்தால் கூட போராடடத்தை ஒடுக்குவது அமெரிக்க பொலிசுக்கு சுலபமாகிவிடும்.

உலகத்தின் 99 சதவிகித மக்களை சுரண்டிக் கொண்டு ஒரு சதவிகிதப் பணக்காரர்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்கு சாதகமாகவே அரசாங்கங்கள் செயற்படுகின்றன. அவர்கள்தான் அரசாங்கங்களையே திரைமறைவில் நடத்துகிறார்கள். இந்தக் கருத்துகள் எல்லாம கம்யூனிஸ்ட்கள் பல காலமாக சொல்லிவருபவைதான். ஆனால் முதன்முறையாக கம்யூனிஸ்ட் அல்லாத பொதுமக்கள் உலக முதலாளித்துவத்தின் தலைநகரமான அமெரிக்காவில் இதே கருத்துகளைச் சொல்லிக் கொண்டு தெருவுக்கு வந்திருக்கிறார்கள். இதற்குத் தீர்வு வேண்டுமென்று அவர்கள் ஆயுதங்களை இன்னும் கையில் எடுக்கவில்லை. துளி வன்முறை இருந்தால் கூட போராட்டத்தை ஒடுக்குவது அமெரிக்க பொலிசுக்கு சுலபமாகிவிடும். வன்முறை இல்லாதபோதும் கூட ஆங்காங்கே பொலிஸ் தன் வன்முறையை பயன்படுத்துகிறது.

சாதாரண மக்களின் நீண்ட நாள் கோபம், அதிருப்தி, ஆற்றாமை, எல்லாம் அடக்கி வைத்திருந்தவை இப்போது இந்தப் போராட்டத்தின் மூலம் வெளிப்படுகிறது என்று சொல்லலாம். முதலில் இளைஞர்கள், வேலை இழந்த இளைஞர்கள், மாணவர்கள் போராட்டத்துக்கு வந்தார்கள். மெல்ல மெல்ல நடுத்தர வயதினர் பலரும் கலந்து கொள்ள போராட்டம் முழுச் சமூகத்தையும் பிரதிபலிப்பதாக ஆகிவிட்டது. அதாவது 99 சதவிகித சமூகத்தை.

ஒரு சதவிகித சமூகத்திலிருந்தும் சில ஆதரவுக் குரல்கள் வந்துள்ளன. வாரன் ப..ப்பே போன்ற பெரும் பணககாரர்கள் சிலர் ஏற்கனவே பணக்காரர்களுக்கு அதிக வரி விதிக்கும்படி சொலலியிருக்கிறார்கள்.

'ஒக்கியூபை வோல்ஸ்டீரீட்' (வோல் ஸ்ட்ரீட்டில் குடியேறுவோம்) போராட்டம் எப்படிப்பட்ட வெற்றியை பெறும் என்று இப்போது சொல்லமுடியா.து. ஏனென்றால் துல்லியமான கோரிக்கை, தெளிவான தலைமை என்று எதுவும் இல்லை. அதுதான் இதன் பலம், பலவீனம் இரண்டுமேயாகும்.

ஆனால் சில செய்திகள் மட்டும் தெளிவாக இந்தப் போராட்டத்தில் சொல்லப்பட்டு விட்டன. சமூகத்தில் ஒரு சிலர் மட்டும் பெரும் பணக்காரர்களாகவும் இதர பெரும்பாலோர் அதற்காக உழைத்துவிட்டு தாங்கள் மட்டும் சாதாரண நிலையில் இருப்பதையும் இனி சகித்துக் கொள்ளமாட்டார்கள் என்ற செய்திதான் அது.

இதை சரி செய்யவேண்டிய அரசாங்கம் பணக்காரர்களின் கைப்பாவையாக இருப்பதையும் சகித்துக் கொள்ளமாட்டோம் என்பது இன்னொரு செய்தி. நாங்கள் இதையெல்லாம் அமைதியாக அகிம்சை முறையில் சொல்லும்போதே கேட்டு உங்களை மாற்றிக் கொள்ளுங்கள் என்பது மூன்றாவது செய்தி.

இப்போது ஏற்பட்டிருக்கும் மக்கள் எழுச்சியை அடுத்த அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் பிரதிபலிக்கச் செய்ய வேண்டும் என்பது பல போராளிகளின் கருத்து. அமெரிக்காவின் இரு பெரும் கட்சிகளும் வரும் தேர்தலுக்கு முன்னால் தங்கள் பொருளாதாரத் திட்டங்களில் அடிப்படைச் சீர்திருத்தங்களை செய்தேயாக வேண்டி வரலாம்.

உலகில் சுமார் 800 நகரங்களில், மக்கள் வசப்படுத்துவோம் போராட்டங்கள் இப்போது நடக்கின்றன.

அமெரிக்காவிடமிருந்து எதையெதையோ கற்றுக் கொள்கிறோம். பூங்காக்களில் எதிர்ப்புத் திருவிழா நடத்துவதையும் எதிர்ப்பை சகிக்கக்கூடிய ஜனநாயகத்தையும் கொஞ்சம் கற்றுக் கொள்ளலாம்.

# மக்களின் நலன்களுக்காக சட்ட திட்டங்களில் மாற்றம்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் அனுமதி பெறாமல் எவ்விதமான கட்டட நிர்மாணப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டாமென்றும் அவ்வாறு கட்டடங்கள் கட்டப்படும் பட்சத்தில் உரியவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் குறிப்பாக சட்டம் ஒழுங்கைப் பின்பற்றுமாறும் கேட்டுக் கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மக்களது நலன்களைக் கருத்திற் கொண்டு சட்டதிட்டங்களில் மாற்றம் [கொ]ண்டுவரப்படுமெனவும் உறுதிபடத் தெரிவித்தார்.


குருநகர் - றெக்கிளமேசன் சனசமூக நிலையத்தில் நேற்று இடம்பெற்ற வடிகால்கள் மற்றும் இடநெருக்கடி தொடர்பாக அப்பகுதி மக்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இப்பகுதியின் சுத்தம் சுகாதாரம் குறித்து நேரில் ஆராயும் போது வேதனையாகவே இருக்கின்றது. இங்குள்ள நீர்வடிகால்களை சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைத்திருப்பதற்கும் இப்பகுதியை மிகவும் அழகான ரம்மியமான சூழலாக மாற்றியமைப்பதே எமது திட்டமாகும். வீதிக்கருகே நீர்வடிகால்களை அமைக்கும்போது ஏற்படக்கூடிய பிரச்சினைகள் தொடர்பாகவும் வீடுகளினூடாகச் செல்லும் வடிகால்களுக்கு குழாய்களைப் பொருத்துவது தொடர்பாகவும் பொது மக்களின் கருத்துக்கள் கேட்டறியப்பட்டதுடன் இவ்விடயத்தில் யாழ். மாநகரசபையின் உதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ள புனரமைப்புப் பணிகள் தொடர்பாகவும் அமைச்சர் இதன்போது விளக்கிக் கூறினார்.

தொடர்ந்து மக்களின் கோரிக்கைக்மைய குருநகர் மத்தி கிழக்கின் பல்வேறு பகுதிகளுக்கும் விஜயம் மேற்கொண்ட அமைச்சர், அங்குள்ள வடிகால்கள், கிணறுகள், மலசலகூடங்கள் என்பவற்றின் சுத்தம் தொடர்பில் கேட்டறிந்து கொண்டதுடன் தற்போது மழைகாலம் தொடங்கியுள்ள நிலையில் உடனடியாக அப்பகுதியில் சுகாதார நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு யாழ். மாநகர சபையின் துறைசார்ந்த பணியாளர்களுக்கு பணிப்புரை வழங்கினார்.

இதன்போது யாழ். மாநகர சபையின் பிரதி முதல்வர் றீகன் யாழ்.பொலிஸ் பொறுப்பதிகாரி சமன்சிகரே யாழ். மாநகர சபை உறுப்பினர்களும் உடனிருந்தனர்.

# இலங்கை காய்கறிகள் ஜப்பானுக்கு ஏற்றுமதி



(கொழும்பு)

இலங்கையின் மரக்கறி வகைகள் ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக 3 ஆயிரம் மெற்றிக் தொன் வற்றாளைக்கிழங்கு, வெண்டிக்காய், கத்தரிக்காய் உள்ளடங்கலாக மரக்கறி வகைகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் சாந்த அபதியாகொட தெரிவித்துள்ளார்.

இவ்வாறு ஜப்பான் நாட்டுக்கு இலங்கையின் மரக்கறி வகைகள் ஏற்றுமதி செய்யப்படுவதன் காரணம் மரக்கறி வகைகள் உயர் தரத்தை கொண்டதாக உள்ளமையால் ஆகும்.

முதற்கட்டமாக 3 ஆயிரம் மெற்றிக் தொன் ஏற்றுமதி செய்யப்பட்ட நிலையில் எதிர்வரும் காலத்தில் 10 ஆயிரம் மெற்றிக் தொன் மரக்கறி வகைகள் ஏற்றுமதி செய்ய எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்தார்.

## சர்வதேச...

இலங்கையில் மீண்டும் பிரிவினைவாதத்தை எவரேனும் தூண்ட முற்பட்டால் அதற்கு இடமளிக்கக் கூடாது எனவும் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

## வெள்ளியன்று...

காலப்பகுதியில் இலங்கையில் நோர்வேயால் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகள் குறித்த மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கான பொறுப்பு நோர்வே பேர்கன் நகரில் அமைந்துள்ள ஆய்வு நிறுவனமான Christan Michelsen Insititute (CMI) மற்றும் இலண்டன் பல்கலைக் கழகத்தின் School of Oriental and African Studies (SOAS) ஆகிய நிறுவனங்களிடம் நோர்வே வெளிவிவகார அமைச்சினால் NORAD ஊடாகக் கையளிக்கப்பட்டிருந்தது

இந்நிறுவனங்கள் மேற்கொண்ட மதிப்பீட்டு முடிவுகளை வெளியிடும் நோக்குடன் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இக் கருத்தரங்கில் மதிப்பீட்டுக் குழுத்தலைவர் மதிப்பீட்டறிக்கையின் உள்ளடக்கத்தை வெளிப்படுத்தி கருத்துரை வழங்கவுள்ளார்.

இக்கருத்தரங்கில் பங்குபற்றுபவர்கள் கேள்விகள் கேட்பதற்கான வாய்ப்புக்களும் கருத்தரங்கு நிகழ்ச்சி நிரலில் வழங்கப்பட்டுள்ளதோடு நோர்வே வெளிவிவகார அமைச்சினால் ஒழுங்கு செய்யப்படும் விவாத அரங்கு ஒன்றும் கருத்தரங்கில் இடம்பெறகிறது.

## இலங்கை மீது...

கூறியுள்ளார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை குறித்து பெரும் எதிர்பார்ப்புடன் இருப்பதாக கடந்த 3 ஆம் திகதி மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் விக்ரோரியா நூலண்ட் கூறியிருந்தார்.

அத்துடன், உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டிருந்த விக்ரோரியா நூலண்ட், சர்வதேச சமூகம் எதிர்பார்க்கின்ற வகையில் இவ்வறிக்கை இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். வந்த தனியார்...

நேற்று அதிகாலை 4.30 மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில் பஸ்சில் பயணம் செய்த 6 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களை மீட்ட இராணுவத்தினர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

பின்னர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக இருவர் நேற்றுக்காலை 8.30 மணிக்கு யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான என்.அஜந்தன் (வயது - 29), அனுராதபுரத்தைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தையான அமரானந்தன் (வயது - 35), புளத்கோப்பிட்டியவைச் சேர்ந்த சு.ஸ்ரீகாந்த் (வயது - 21) ஆகியோரே சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## ஜனாதிபதித் தேர்தலில்...

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழ் மக்களின் ஆதரவினை யாருக்கு வழங்குவது என்பதனை நிர்ணயிக்கும் பிரதான சக்தியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமைந்துள்ளது

இதன் அடிப்படையில் ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்குவதா அல்லது சரத் பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்குவதா என்பதனை சம்பந்தன் உடனடியாக தீர்மானிக்கவில்லை.

இத்தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகள் மிகவும் முக்கியமானது என சம்பந்தன் குறிப்பிட்டுள்ளதாக அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திற்கு தெரிவித்துள்ளனர்.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளராக போட்டியிடுமாறு சில தமிழ் தரப்புக்கள் சம்பந்தனிடம் கோரிய போதிலும் அது பயனற்ற முயற்சி என அவர் நிராகரித்துள்ளார்.

அத்துடன், இத்தேர்தலில் போட்டியிட்டு சில இலட்சம் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதனை தவிர வேறு எதனையும் சாதிக்க முடியாது என சம்பந்தன் கூறியுள்ளார்.

தமிழ் மக்களின் ஆதரவினை சரத் பொன்சேகாவுக்கா அல்லது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கா வழங்குவது என்பது தொடர்பில் உடனடித் தீர்மானங்களை எடுக்க முடியாது என சம்பந்தன் தெரிவித்தார் என அந்த தகவல் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாக விக்கிலீக்ஸ் தெரிவித்துள்ளது.

## தமிழ் மக்கள் காணிகள்...

மக்கள் காணிகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரட்டை வேடம் போடுகின்றது என "நாம் இலங்கையர்" அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

அரசாங்கத்தினதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் பொய்யான நடிப்பை புரிந்துகொள்வோம் என்ற தலையங்கத்தில் நாம் இலங்கையர்கள் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கில் பௌத்த விகாரைகளை அமைத்து பெரும் சத்தத்துடன் பித் பாராயணங்களை ஒலிபரப்புவதும், கந்தரோடை கிராமத்தின் பெயரை கதுறுகொட என மாற்றியமைத்தும் முற்றுமுழுதாக தேசப்பற்று என்ற பெயரில் தமிழ் மக்களுக்கு எதிரான இனவதைத்தை அரசாங்கம் கட்டவிழ்த்துவிட்டுள்ளது.

சிங்கள மக்களை குஷிப்படுத்தி அரசாங்கத்தின் இருப்பை பாதுகாத்துக் கொள்ளவே தமிழ் மக்களுக்கு உரிமைகளை வழங்காது இனவாதத்தை தூண்டுகிறது. வடக்கில் அனைத்து காணிகளிலும் தமிழ் மக்களை மட்டுமே குடியேற்ற வேண்டுமென்பதல்ல. சிங்கள, முஸ்லிம் மக்களும் குடியேற்றப்பட வேண்டும். ஆனால், இனவாத குடியேற்றங்களாக இல்லாது நியாயமான விதத்தில் அமைய வேண்டுமென்பதே எமது நிலைப்பாடாகும்.

அத்தோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் உரிமைகளுக்காக முன்னிக்கின்றதா என்ற கேள்வியும் எழுகிறது.

வடக்கில் குடியேற்றங்கள் தொடர்பாக எதிர்க்கும் கூட்டமைப்பு அரசாங்கம் வட, கிழக்கில் பெரும் நிலப்பரப்புக்களை வகை, தொகையின்றி இந்தியாவிற்கு விற்பனை செய்வதை பார்த்துக் கொண்டு கூட்டமைப்பு மௌனமாக இருக்கின்றது.

கூட்டமைப்பின் இரட்டை வேடமானது அரசாங்கத்திற்கு மறைமுகமாக ஆதர்வை வழங்குகின்றதா என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வாக்காளர் படிவத்தை....

வாக்காளர் இடாப்பு கிராம சேவகர் அலுவலகம், பிரதேச செயலகம் மற்றும் தெரிவத்தாட்சி அலுவலகம் ஆகியவற்றில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது, இதனை எதிர்வரும் 30 ஆம் திகதிவரை பார்வையிட முடியுமென்ற நிலையில் அனைவரும் தங்களது பெயர் வாக்காளர் இடாப்பில் உள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். தற்போது வைக்கப்பட்டுள்ளது வாக்காளர் இடாப்பு மாதிரிப்படிவமாகும்.

அங்கு ஏ.பி. என இரு படிவங்கள் வைக்கப்பட்டிருக்கும் 'ஏ'யில் குறித்த கிராம சேவகர் பிரிவிலிருந்து வேறு ஒரு கிராமத்துக்கு செல்வதற்காக பதிவு செய்தவர்களின் பெயர் இடம்பெற்றிருக்கும் அதுபோல் 'பி'யில் குறித்த கிராம சேவகர் பிரிவில் புதிதாக உள்வாங்கப்பட்டவர்களின் பெயர்கள் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும். இந்நிலையில் 2010 வாக்காளர் இடாப்பில் பெயர் உள்ளவர்கள் 2011 இல் பதியப்படாமல் இருப்பின் கிராம சேவகரிடம் உள்ள மீள்பதிதல் மற்றும் ஆட்சேபனையை தெரிவிக்கும் படிவத்தினை பெற்று தங்களது பெயரைப் பதியமுடியும்.

வடக்கு, கிழக்கு மக்கள் குறிப்பாக இடம்பெயர்ந்து மீள்குடியேறிவர்கள் வாக்காளர் இடாப்பு மாதிரியை பார்வையிட்டு தங்களது பெயர் உள்ளதா என்பதை உறுதிப்படுத்துவது அவசியமானது. இல்லா விட்டால் உங்களது வாக்காளர் உரிமை இல்லாது போகுமென்பதால் அவதானமாக இருக்குமாறு கோருகின்றோம். இது குறித்து வடக்கு, கிழக்கில் தெளிவூட்டும் நடவடிக்கையை எமது அமைப்பு மேற்கொண்டு வருகின்றது.

இதில் ஏதேனும் உதவி தேவைப்படின் 0114341524 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு விபரங்களைப் பெறமுடியும் எனத் தெரிவித்தார்.

## இதய கூற்று சத்திர...

பிரிவு, சிறுநீர், எரிகாயங்கள், மூட்டுநோய் ஆகிய நோய்களுக்கு சத்திர சிகிச்சைப் பிரிவு அமைப்பதற்கு இடவசதி இல்லை. இவற்றை அமைப்பதற்கு யாராவது உதவ முன்வர வேண்டும். இவ்விடயம் தொடர்பாக பொது மக்களின் கருத்துக்கள் அவசியமான ஒன்றாகும். இதற்கு பத்திரிகைகளே முன்வர வேண்டும்.

பொதுமக்கள பொறுப்புடையவர்களாக செயற்படவேண்டும். இது எங்கள் சொத்து என்ற ரீதியில் ஒவ்வொருவரும் உதவ வேண்டும்.

ஆலயங்களில் செய்யும் ஒவ்வொரு காரியங்களையும், அவற்றுக்கு செலவழிக்கும் பணத்தையும் எமக்கு உதவக்கூடிய வகையில் வைத்தியசாலைக்கோ அல்லது மற்றவர்களுக்கோ உதவக்கூடிய வகையில் பிரயோசனப் படுத்த வேண்டும்.

வீதி விபத்துக்கள் மற்றும் வன்முறைகள் தொடர்பாகவும் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறோம்.

ஆய்வு மையங்களை அமைப்பதற்கு உதவிகள் செய்தால் வெளியிடங்களுக்கு சத்திர சிகிச்சை செய்வதற்கு செல்ல வேண்டிய அவசியமில்லை. எவ்வளவு விரைவாக அவர்களின் உயிரைக் காப்பாற்ற முடியுமோ அவ்வளவு விரைவாக காப்பாற்ற முடியும்.

சிறு துளி பெருவெள்ளம் என்பது போல் எமது சிறு தொகை பணத்தின்மூலம் நாம் ஒரு இதய கூற்று சத்திர சிகிச்சைப் பிரிவினை அமைக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் உளநல மருத்துவ நிபுணர் டாக்டர் எஸ்.சிவயோகன், உணர்வழியியல் வைத்திய நிபுணர் சு.பிரேமகிருஷ்ணன், சத்திர சிகிச்சை நிபுணர் எஸ். ரவிராஜ், இருதய சத்திர சிகிச்சை நிபுணர் பி.லக்ஸ்மன் ஆகியோர் கலந்துகொண்டனர். (எஸ்)

# போதையில் வந்த இளைஞர்கள் சொத்துக்களைச் சேதப்படுத்தினர்



(யாழ்ப்பாணம்)

இரண்டு வாரங்களுக்கு முன்னர் கட்டப்பட்ட மதில் மதுபோதையில் வந்த இளைஞர்களால் தள்ளி வீழ்த்தப்பட்டுள்ளது.

இச்சம்பவம் பாசையூரில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. இது பற்றி மேலும் தெரியவருவதாவது,

இராணுவத்தினரின் பாவனையில் இருந்த வீடுகள் நான்கு மாதங்களுக்கு முன்னர் வீட்டுச் சொந்தக்காரரிடம் ஒப்படைக்கப்பட்டன. வீட்டின் கதவுகள், பாதுகாப்புக்கள் அற்ற நிலையில் இருப்பதால் இரவு வேளயில் யாரும் அங்கு தங்குவதில்லை. இதன் காரணமாக இளைஞர்கள் இங்குள்ள வீடுகளில் இரவு வேளைகளில் தங்கியிருந்து குடிப்பதற்கு பயன்படுத்துகின்றனர்.

பின்னர் அங்கிருந்து செல்லும் போது சொத்துக்களுக்கு சேதம் விளைவித்துவிட்டு அசல்கின்றனர். இப்படியான அடாவடித்தனங்களில் ஈடுபடும் இளைஞர்களை யாராவது அறிந்திருந்தாலும் பயத்தின் காரணமாக அவர்களது பெயர்களைச் சொல்ல எவரும் முன்வருவதில்லை. பொது அமைப்புக்களும் கூட வாய்மூடி மௌனிகளாக உள்ளன.

குறிப்பிட்ட ஒரு சில இளைஞர்களே செய்யும் அடாவடித்தனங்களால் ஊர் மக்கள் பெரிதும் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாக அங்கிருக்கும் சிலர் தெரிவிக்கின்றனர். கடந்த வாரமும் யாழ்.மாநகரசபையால் நீர் வழங்கப்படும் பைப்களும் சேதமாக்கப்பட்டன. இவ்வாறு இடம்பெறுவது மூன்றாவது தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (20)

# பொதி செய்யப்பட்ட நிலையில் கரையொதுங்கிய சடலம்

அக்கரைப்பற்று-ஏறாவூர் பதுர் நகர் கடற்கரை பகுதியில் கரையொதுங்கிய இனந்தெரியாத நபரொருவரின் சடலத்தை நேற்று முன்தினம் மாலை அக்கரைப்பற்று பொலிஸார் மீட்டுள்ளனர்.

சடலம் கறுப்பு பொலித்தீன் பையில் பொதி செய்யப்பட்டு பச்சை நிற இரும்புக் கம்பித் தகட்டில் சுற்றப்பட்ட நிலையில் காணப்பட்டதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவருக்கு 35 வயது இருக்கும் என நம்பப்படும் நிலையில் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

மரண விசாரணைகளின் பின் சடலம் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

# 15 இல் வெளியிடப்படுகிறது தேசிய தரைத்தோற்ற வரைபு

(கொழும்பு)

இலங்கையின் தேசிய தரைத்தோற்ற வரைபு எதிர்வரும் 15 ஆம் திகதி வெளியிடப்படும். இதற்கான விசேட அங்குரார்ப்பண நிகழ்வு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில், பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதென விமல் வீரவன்ச தெரிவித்தார்.

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# பேராதனை பல்கலையில் பகிடிவதை மூன்று மாணவர்கள் இடைநிறுத்தம்

(பேராதனை)

பேராதனை பல்கலைக் கழகத்தின் பொறியியல் பீடத்தில் கல்வி கற்கும் அக்கரைப்பற்றைச் சேர்ந்த 3 மாணவர்கள் பகிடிவதையில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் கல்விச் செயற்பாட்டிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் பல நாட்களாக பல தீய செயல்களில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இவர்களை நீண்ட நாட்களாக அவதானித்து வந்த பல்கலைக் கழகம் கடந்த ஒக்டோபர் 6 ஆம் திகதி அக்பர் ஹோல் (akber hall) அறையொன்றில் 8 மாணவர்களை பூட்டி வைத்து அடித்ததாக சில பெற்றோர்கள் முறையிட்டுள்ளனர்.

அவர்கள் வழங்கிய குற்றச்சாட்டின் காரணமாக இம் மாணவர்கள் மூவரும் 3 வார காலங்களுக்கு இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இதனால் இவர்களின் கல்வி நடவடிக்கை 1 வருட காலம் பாதிப்படையலாம் என நம்பப்படுகிறது.

இவர்களின் செயற்பாடுகளை தொடர்ந்து அவதானிப்பதற்கு பல்கலைக்கழகம் போதிய செயற்பாடுகளை செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

# தமிழ் சிறுமி மீது துஷ்பிரயோகம் நான்கு சந்தேக நபர்கள் கைது

தமிழ்ச் சிறுமியொருவரை கடத்திச் சென்று பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய நான்கு சந்தேகநபர்கள் கொழும்பு - வத்தளையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த தமிழ்ச் சிறுமியை கடத்திச் சென்று வீடொன்றில் வைத்து பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய இருவரும், அத்துடன், இவர்களுக்கு உதவி புரிந்தமைக்காக இருவருமாக 4 சந்தேகநபர்கள் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக வத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

மற்றுமொரு சந்தேகநபரை கைதுசெய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள நான்கு சந்தேகநபர்களும் சிங்களவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

14 வயதான குறித்த சிறுமி கடந்த 2 ஆம் திகதி கொழும்பு - வத்தளைப் பகுதியில் வைத்து துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

# இலங்கை அரசியலில் குற்றவாளிகள் முக்கியமான பங்கினை வகிக்கின்றனர்

## விரிவுரையாளர் சுமனசிறி லியனகே தெரிவிப்பு

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்குள் போதைப் பொருள் வர்த்தகம் மற்றும் குற்றச் செயல்கள் தொடர்பில் முரண்பாடான நிலைமை உருவாகியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல்வாதிகள் குற்றவாளிகளைப் பயன்படுத்திக் கொண்ட காலம் மாறி தற்போது குற்றவாளிகளே நேரடியாக அரசியலில் ஈடுபட்டு வருகின்றனர். என அவர் தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகார முறைமை மற்றும் விருப்பத் தெரிவு வாக்களிப்பு முறைமை ஆகியன அரசியலில் குற்றச் செயல்கள் ஈடுபடும் களமாக மாற்றியமைத்துள்ளது.

தேர்தலில் போட்டியிடுவது என்பது மிகப் பெரிய வர்த்தக நடவடிக்கையாக மாற்றமடைந்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதிகளவு பணம், ஆளணி போன்ற பல காரணிகளின் அடிப்படையில் ஒருவரின் வெற்றி நிர்ணயிக்கப்படுகிறது.

கட்சிகளுக்கு இடையிலான அரசியல் என்ற நிலை மாற்றி தனிப்பட்ட நபர்களுக்கு இடையிலான ஆசன போட்டி நிலைமை உருவாகியுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

மக்களின் எண்ணங்களை மாற்றுவதன் மூலம் இந்த அரசியல் கலாச்சாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இன்றைய அரசியல் போதைப் பொருள் வர்த்தகம் மற்றும் பாதாள உலகக் கோ'டி செயற்பாடுகளுடன் பின்னிப் பிணைந்து ஒன்றாகவே அமைந்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# வவுனியா பஸ் விபத்தில் ஆறு பேர் படுகாயம்

கொழும்பிலிருந்து வவுனியா நோக்கிச் சென்ற தனியார் பயணிகள் போக்குவரத்து பஸ் ஒன்று ரம்பேவ பிரதேசத்தில் விபத்துக்குள்ளானதில் 6 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

குறித்த பஸ் தனக்கு முன்னால் பயணித்துக் கொண்டிருந்த கெண்டேனர் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று அதிகாலை இடம்பெற்ற இவ்விபத்தில் காயமடைந்த அறுவர் மதவாச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதில் கவலைக்கிடமான மூவர் மேலதிக சிகிச்சைகளுக்கென அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்

# ஆயுதங்கள் மீட்பு

ஏறாவூர் கலவாய் பிரதேசத்தில் உள்ள பாடசாலைக்கு அருகில், இருந்து போர்த் தளபாடங்கள் சிலவற்றை பொலிஸார் மீட்டுள்ளனர். நேற்று மதியம் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து, மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் இந்த தளபாடங்கள் மீட்கப்பட்டதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

4 கைக்குண்டுகள், 3 அமுக்க வெடிகள், இரண்டு அருள் ரக குண்டுகள், ரி 56 ரக துப்பாக்கிகளுக்கான தோட்டாக்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன. இந்த சம்பவம் தொடர்பில் எவரும் கைதுசெய்யப்படவில்லை எனவும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# முன்னாள் பிரதம நீதியரசர் சில்வா பிழையான தீர்ப்புகளை வழங்கினார்

## அமைச்சர் திசாநாயக்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா பிழையான தீர்ப்பினை வழங்கியதாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

அறுவடை நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது உச்ச நீதிமன்றத்தை அவதூறு செய்ததாகத் தெரிவித்து, எஸ்.பி.திஸாநாயக்கவிற்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

தமக்கு எதிராக தீர்ப்பு வழங்கப்படுவதற்கு பிரதம நீதியரசரே காரணம் எனவும், ஏனைய நீதவான்களை சரத் என் சில்வா பிழையாக வழிநடத்தியதாகவும அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, இந்தத் தண்டனை விதிக்கப்பட்ட நீதவான் குழாமில் தற்போதைய பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவும் அங்கம் வகித்ததாக முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

எஸ்.பி. திஸாநாயக்க இது தொடர்பில் தற்போதைய பிரதம நீதியரசரிடம் கேட்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்

# தமிழக மீனவர் மீதான தாக்குதல் இலங்கை மீது கடும் நடவடிக்கை

## மத்திய அரசைக் கோருகிறார் ஜெயலலிதா

தமிழக மீனவர்கள் மீது தொடர்ச்சியாக தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருவதாகவும் எனவே இந்திய மீனவர் பாதுகாப்பு தொடர்பிலான கருத்துக்களை இலங்கை செவிமடுக்கத் தவறியுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்திய மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்துவதாகவும் இது தொடர்பில் மத்திய அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் இந்திய மத்திய அரசாங்கம் இலங்கைக்கு கடும் எச்சரிக்கை விடுக்க வேண்டுமென ஜெயலலிதா, இந்திய பிரதமர் மன் மோகனிடம் கடிதம் ஊடாக கோரியுள்ளார்.

மீனவர்கள் மீதான தாக்குதல் சம்பவங்கள் தேசியப் பிரச்சினையாக நோக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

மே மாதம் முதல் இதுவரையில் தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் 22 சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் கடந்த மாதத்தில் 6 பாரிய சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# மூவர் கைது

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்றுவரும் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக வவுனியாவைச் சேர்ந்த மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சிப் பொலிஸார் நேற்றிரவு தெரிவித்தனர்.

இராணுவத்தினரால் பிடிக்கப்பட்ட மூவரும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# தரம் குறைந்த பெற்றோலை விற்பனை செய்வதற்கு முயற்சி

## என்கிறது ஐக்கிய தேசியக் கட்சி

(கொழும்பு)

கடந்த காலங்களில் நுகர்வோரை சிரமத்திற்கு உள்ளாக்கிய தரம் குறைந்த பெற்றோல் மீண்டும் சந்தைக்கு விநியோகிக்கப்படும் அபாயம் உள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட தரம் குறைந்த பெற்றோலில் எஞ்சியுள்ள 2,600 மெற்றிக் தொன் பெற்றோலை விற்பனை செய்வதற்காக விலைமனு கோரப்பட்டுள்ளதென அக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாத்திலக குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 நவம்பர் 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.